கலை
இலக்கிய
மாத
சஞ்சிகை

100/-

# ஜீவநதி

பிரதம ஆசிரியர் : க.பரணீதரன்



123

மார்கழி - 2018

இ.இராஜேஸ்கண்ணன். பேராசிரியர் சபா. ஜெயராசா. கொ.றொ.கொன்ஸ்ரன்ரைன். கெகிறாவ ஸுலைஹா.
ச.முருகானந்தன். குந்தவை. புகழ். மலரன்னை. அலெக்ஸ்பரந்தாமன். கே.எஸ்.சிவகுமாரன்.
நா.நவராஜ். ஜெயம் நதியன். செல்லக்குட்டி கணேசன். பொலிகையூர் சு.க.சிந்துதாசன். ரஜிதா. எஸ்.சிவசேகரன்.
ஷெல்[illegible] மு.அநாதரட்சகன். உடப்பூர் வீர சொக்கன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலை இலக்கிய மாத சஞ்சிகை

2018 - மார்கழி

# பொருளடக்கம்




## கட்டுரைகள்

**படைப்பாக்கச் சிரத்தை மிக்க சிறுகதைப் படைப்பாளி புலோலியூர் ஆ.இரத்தினவேலோன்**
இ.இராஜேஸ்கண்ணன்- 03

**இலக்கியப்பரப்பில் ஒரு நீட்சி இளம் வளர்ந்தோர் இலக்கியம்**
பேராசிரியர் சபா ஜெயராசா - 11



**பெண்ணிய அழகியல்**
கொ.றொ.கொண்ஸ்ரன்ரைன் - 15

**நகரமாக்கலில் சிதைந்து போன ரம்மியங்களுக்கான அழுகையாய்**
கெகிறாவ ஸுலைஹா - 30

**பக்தி இலக்கியங்கள் சமயத்தை மட்டுமன்றி மொழியையும் வளர்த்தன**
ச.முருகானந்தன் - 34



## சிறுகதைகள்

குந்தவை - 06
புகழ் - 13
மலரன்னை - 20
அலெக்ஸ் பரந்தாமன் - 26

## கவிதைகள்

நா.நவராஜ் - 12
ஜெயம் நதியன் - 19
செல்லக்குட்டி கணேசன் - 23
பொலிகையூர் சு.க.சிந்துதாசன் - 23
ரஜிதா - 24
எஸ்.சிவசேகரன் - 25
ஷெல்லிதாசன் - 28

## பத்தி எழுத்து

கே.எஸ்.சிவகுமாரன் - 29

## நூல் விமர்சனம்

மு.அநாதரட்சகன் - 36
உடப்பூர் வீர சொக்கன் - 45

## தொடர் நாவல்

க.சட்டநாதன் - 38

## பேசும் இதயங்கள்

## அட்டைப்படம்

த.ரிலக்சன்


பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜீவநதி

**2018 மார்கழி இதழ் - 123**

**பிரதம ஆசிரியர்**
க.பரணீதரன்

**துணை ஆசிரியர்கள்**
வெற்றிவேல் துஷ்யந்தன்
ப.விஷ்ணுவர்த்தினி

**பதிப்பாசிரியர்**
கலாநிதி த.கலாமணி



**தொடர்புகளுக்கு :**
கலை அகம்
சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் வீதி
அல்வாய் வடமேற்கு
அல்வாய்
இலங்கை.



**ஆலோசகர் குழு:**
திரு.தெணியான்
திரு.கி.நடராஜா



**தொலைபேசி** : 0775991949
0212262225

**E-mail** : jeevanathy@yahoo.com

**வங்கித் தொடர்புகள்**
K.Bharaneetharan
Commercial Bank, Nelliady
A/C - 8108021808 - CCEYLKLY



இச்சஞ்சிகையில் இடம்பெறும் அனைத்து ஆக்கங்களின் கருத்துக்களுக்கும் அவற்றை எழுதிய ஆசிரியர்களே பொறுப்புடையவர்கள்.



## ஜீவநதி சந்தா விபரம்

தனிப்பிரதி - 100/= ஆண்டுச்சந்தா - 1500/=
வெளிநாடு - $ 60U.S
மணியோடரை
அல்வாய் தபால் நிலையத்தில்
மாற்றக்கூடியதாக அனுப்பி வைக்கவும்.
அனுப்ப வேண்டிய பெயர்/முகவரி
**K .Bharaneetharan,**
**Kalaiaham ,**
**Alvai North west, Alvai.**
வங்கி மூலம் சந்தா செலுத்த விரும்புவோர்
K.Bharaneetharan Commercial Bank - Nelliady Branch
A/C No.- 8108021808 CCEYLKLY


# ஜீவநதி

**(கலை இலக்கிய மாத சஞ்சிகை)**

அறிஞர் தம் இதய ஓடை
ஆழ நீர் தன்னை மொண்டு
செறி தரும் மக்கள் எண்ணம்
செழித்திட ஊற்றி ஊற்றி...
புதியதோர் உலகம் செய்வோம்.!
- பாரதிதாசன்-

## நூல்வெளியீடுகளும் பேச்சாளர்களும்

ஈழத்தைப் பொறுத்தவரையில் மாதாந்தம் குறைந்தது ஐந்திற்கு குறையாத நூல் வெளியீடுகள் நடைபெற்று வருகின்றன. இந்த வெளியீட்டு விழாக்களில் துறைசார்ந்த பேச்சாளர்கள் அழைக்கப்படுவது வழக்கமாக உள்ளது. சில சமயம் கௌரவிப்பு நோக்காக நூல் சார் துறையுடன் சம்பந்தப்படாதவர்களும் நட்பு, உறவு, சமூக அந்தஸ்து காரணமாக அழைக்கப்படுவது கண்கூடு. இந்த விழாக்களில் பொதுவாக தலைமையுரை, வரவேற்புரை, ஆசியுரை, வாழ்த்துரை, அறிமுகஉரை, வெளியீட்டுஉரை, மதிப்பீட்டுஉரை/கருத்துரை/நயப்புரை, ஏற்புரை, நன்றியுரை என உரைகள் அமைகின்றன. நூல் விற்பனை குறைவடைந்து வருகின்ற காலகட்டத்தில் ஒரு புதிய நூலை எழுதும் எழுத்தாளன் தனது நூலின் வருகையை வெளிப்படுத்தும் நோக்கோடும் விற்பனை நோக்கோடும் இவ்வாறான விழாக்களை ஒழுங்கமைத்து நடாத்து கின்றார்கள். இதில் கலந்து கொள்பவர்கள் எழுத்தாள நண்பர்கள், உறவுகள், நண்பர்கள். இவ்விழாக்களில் பேச்சாளர்களாக அழைக்கப்படுபவர்கள் சில சமயம் இந்த விழாக்களின் போக்கை மாற்றுவதும் உண்டு. அதாவது தமது உரையின் வரையறை என்ன என்பதை விளங்காது உரையாற்றும் போது அங்கு ஏற்படும் குழப்பங்கள் பெரிதாகி விடுகின்றன. உதாரணமாக வெளி யீட்டுரை, வாழ்த்துரை, ஆசியுரைக்கு வருபவர்கள் விமர்சன உரையை ஆற்றுவதோடு அதிக நேரத்தையும் எடுத்து உரையாற்றி சென்று விடுவார்கள். விமர்சன உரைக்கு என அழைக்கப்பட்ட துறை சார்ந்தோர் மிக அவசரஅவசரமாக சபையின் குழப்ப நிலையை மனதில் கொண்டு உரையாற்ற வேண்டியவர்களாக காணப்படுகின்றனர். அண்மையில் கூட சிறுகதைத் தொகுப்பு ஒன்றைப் பற்றிய வெளியீட்டு உரையை ஆற்றவந்த கல்வியிய லாளர் ஒருவர் தனது பேச்சின் போது "நான் புத்தகத்தை பார்க்காமலே வெளியீட்டுரை செய்கிறேன்" என மேடையில் கூறினார். அவ்வாறாயின் வெளியீட்டுரையின் அர்த்தம் என்ன? இதே பேச்சாளர் சென்ற ஆண்டு குறித்த நூலாசிரியரின் நாவல் வெளியீட்டிலும் வெளியீட்டுரை ஆற்றினார், அப்போது நூல் விமர்சனத்தை மேற்கொண்டு தலைவரிடம் வாங்கிக் கட்டிக் கொண்டார். இவ்வாறு உரையை ஆற்றுபவர்கள் கட்டாயமாக தமது உரையின் வரையறை பற்றிய தெளிவான புரிதலுடன் உரையை ஆற்ற வேண்டும். சுய தம்பட்டங்களையும், பிற எழுத்தாளர்களை வைதலுக்கான களமாக பயன்படுத்தாது நல்ல உரைகளை ஆற்ற வேண்டும். உரைக்காக அழைத்த எழுத்தாளரை யும் நல்ல உரைகளை கேட்க வந்த வாசகர்களையும் சங்கடத்தில் ஆற்றக்கூடாது.

- க.பரணீதரன்



### ஜீவநதியின் பிரதி கிடைக்கும் இடங்கள்

யாழ்- பூபாலசிங்கம் புத்தகசாலை, புக்லப் - திருநெல்வேலி.
கொழும்பு வெள்ளவத்தை - பூபாலசிங்கம் புத்தகசாலை,
செட்டித்தெரு பூபாலசிங்கம்,
பரணி புத்தகக் கூடம் - நெல்லியடி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# படைப்பாக்கச் சிரத்தை மிக்க சிறுகதைப் படைப்பாளி புலோலியூர் ஆ.இரத்தினவேலோன்

இ.இராஜேஸ்கண்ணன்

சிறுகதை படைப்பாளி, பத்தி எழுத்தாளர், கவிதைப் படைப்பாளி, தொகுப்பாசிரியர், பதிப்பாக்க முயற்சியாளர் என்று பல்வேறு பரிமாணங்களில் செயற் பட்டுவரும் ஓர் ஆளுமை புலோலியூர் ஆ.இரத்தின வேலோன் அவர்கள். ஈழத்து இலக்கியத் தடத்தில் 1970களில் தோன்றிய சிறுகதைப் படைப்பாளிகளில் தனித்துவம் மிக்கவர் - தவிர்த்துவிட முடியாதவர். புதிய பயணம்(1996,2011), விடியட்டும் பார்ப்போம்(1997), நிலாக்காலம்(2002), நெஞ்சாங்கூட்டு நினைவுகள் (2006), காவியமாய் நெஞ்சில் ஓவியமாய்(2011) ஆகிய சிறுகதைத் தொகுப்புக்களை இதுவரை வெளி யிட்டுள்ளார். புதிய சகத்திரப் புலர்வின் முன் ஈழத்துச் சிறுகதைகள்(1999,2000), அண்மைக்கால அறு வடைகள் - தொகுதி - I(2001), அண்மைக்கால அறு வடைகள் - தொகுதி - II(2009) ஆகிய பத்தி எழுத்துக் களின் தொகுப்புக்களை தந்துள்ளார். கொழும்புவில் மீரா பதிப்பகம் எனும் பிரசுராலயத்தினை நிறுவி இன்று வரை சிறுகதை, நாவல், கவிதை, நாடகம், திறனாய்வு, பத்தி எழுத்துக்கள் முதலான பல்துறைசார்ந்த நூற்று நான்கு நூல்களைப் பதிப்பித்துள்ளார். இவையாவும் இரத்தினவேலோனின் தனித்துவமான சுவட்டினை ஈழத்தின் இலக்கியத் தடத்தில் ஆழப்பதியவைப்பவை. பதவி நிலைகளால் கணக்கியல் மற்றும் விளம்பரத் துறைசார்ந்த ஒருவராக விளங்கிவந்த போதிலும் இலக்கியத்துறையில் தனித்துவமாக அடையாளப் படுத்தத் தக்களவில் தனது பங்களிப்பை வழங்கி யுள்ளார்.

தனது மெய்யனுபவங்களைச் சிறந்த சிறுகதை களாகத் தரும் படைப்பாளி. 1977ஆம் வருடத்தில் "புரளும் அத்தியாயம்" எனும் சிறுகதையை தனது பத்தொன்ப தாவது வயதில் எழுதிய இவர் இதுவரை நாற்பத்துநான்கு சிறுகதைகளை மாத்திரமே எழுதியிருப்பது இவரின் படைப்பாக்கச் சிரத்தையை காட்டுகின்றது. இந்தச் சிரத்தை இவரின் சிறுகதைகளைப் படைப்பாக்கச் செழுமை மிக்கவையாகவும் மெய்யனுபவ வெளிப்பாடு கொண்டவையாகவும் அடையாளப்படுத்துவதுடன், இயல்பான வாழ்வின் பிரதிபலிப்புக்களை மிகைப் படுத்தாது வெளிப்படுத்துபவையாகவும் அமையக் காரணமானது. எந்தவொரு படைப்பும் உண்மையின் அடித்தளத்திலிருந்து உற்பவிக்கப்பட வேண்டும்; வாழ் வியலுக்கு மிக நெருக்கமாக விளங்கவேண்டும்; அழகியல் பண்புமிக்கதாக அமையவேண்டும்; வெளிப் பாட்டில் தனியடையாளத்துடன் துலங்கவேண்டும். இந்தப் பண்புக்கூறுகளைக் கொண்டவையாக இரத்தின வேலோனின் சிறுகதைகள் அமைகின்றன. வெளியிடப் பட்ட ஐந்து சிறுகதைத் தொகுப்புக்களில் நிலாக்காலம், நெஞ்சாங்கூட்டு நினைவுகள் ஆகிய இரு தொகுதிகளும் மாகாண சாஹித்திய விருது பெற்றவை. இவரது சிறுகதைகளில் வேட்டை, நெஞ்சாங்கூட்டு நினைவுகள் (கனக செந்திநாதன் விருது), தாச்சிச்சட்டி(தகவம் சிறப்பு விருது) முதலானவை ஈழத்தில் சிறந்த சிறுகதைகளுக்கு வழங்கப்பட்டுவரும் கணிக்கத்தக்க விருதுகளைப் பெற்றவை. காவலூர் ஜெகநாதன் வெளியிட்ட காலத்தின் யுத்தங்கள்(1982), தகவம் பரிசுக் கதைகள்- தொகுதி 3(2016), கனகசெந்திநாதன் கதாவிருது பெற்ற கதைகள்(2008), மல்லிகைச் சிறுகதைகள்(2003),



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஜீவநதிச் சிறுகதைகள்(2011), பூபாளராகங்கள்- (2008 மலர்), தரிசனம்(வடமராட்சிப் பிரதேச கலாசாரப் பேரவை,2012), புலோலியூர் சொல்லும் கதைகள்(2002) ஆகிய முதன்மையான தொகுப்புக்களில் இரத்தினவேலோனின் சிறப்புமிக்க கதைகள் இடம் பெற்றுள்ளன. ஒரு பக்கத்தாளம் எனும் இவரது சிறுகதை மொழி பெயர்க்கப்பட்டு "மெதபெரதிக" எனும் சிங்கள சஞ்சிகையில் பிரசுரிக்கப்பட்டது. இவரது சிறுகதைகள் பற்றிய ஆய்வொன்றினை யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் தமிழ் சிறப்புக்கலை மாணவி எம்.திருமகள் செய்து முடித்து, அது நூலுருப் பெற்றுள்ளது.

இரத்தினவேலோனின் சிறுகதைகள் பற்றி அவரது காவியமாய் நெஞ்சில் ஓவியமாய் எனும் சிறுகதைத் தொகுப்பு நூலின் அட்டைக் குறிப்பில் நந்தினி சேவியர்(2011) குறிப்பிடும்போது **"தயாரிப்பு அந்தரமெதுவும் இல்லாத - இயற்பண்புவாதக் கதை சொல்லும் முறைமைக்கு உதாரணம் காட்டக்கூடிய - அச்சொட்டான - படைப்பாளியென இரத்தின வேலோனை நான் குறிப்பிட்டுக் கூறுவேன்"** என்றும், **"கடந்த தசாப்த காலத்தில் ஈழத்தில் எழுதப்பட்ட தரமான சிறுகதைகளில் ஒரு பத்துச் சிறுகதைகளை ஒருவர் தொகுப்பதற்கு முனைந்தால் அக்கதைகளில் ஒன்று இரத்தினவேலோனின் கதையாக முதல் ஐந்து கதைகளுக்குள் நிச்சயம் இடம்பிடிக்கும் என நான் அறுதியிட்டுக் கூறுவேன்"** என்றும் எழுதுகின்றார். அவ்வாறே விடியலுக்கு முன் எனும் இரத்தினவேலோனின் சிறுகதைத் தொகுப்பு நூலின் முன்னுரையில் ரஞ்சகுமார்(2004) **"எந்தவொரு எழுத்தாளனிடமும் ஒரு சிறந்த சிறுகதையேனும் நாம் தயக்கமின்றி எதிர்பார்க்கலாம். இத் தொகுதியில் ஒன்றல்ல மூன்றுக்கு மேற்பட்ட சிறந்த சிறுகதைகளை நாம் காண்கின்றோம்"** என்று குறிப்பிடுவதைக் காணலாம். இந்தக் கூற்றுகள் ஈழத்தின் முதன்மையான இரண்டு



சிறுகதைப் படைப்பாளிகளால் குறிப்பிடப் பட்டவை என்பதுடன் இரத்தினவேலோனின் சிறுகதைகளின் இடத்தினை மதிப்பிட மிக அவசியமான கருத்துக்களாகவும் அமைந் துள்ளன. மெய்யனுபவங்கள் இயற்பண்பு வாத நோக்குடன் கலாநேர்த்தியுடன் வெளிப்படுத்தப் படுகையில் படைப்பின் தரம் தனித்தன்மை பெறுகின்றது என்பதை இக்கூற்றுக்கள் உணர்த்துகின்றன. மாய மந்திரங்கள் செய்வதுபோல படைப்பைச் "செய்வதால்" தங்கள் தரத்தை நிர்ணயிக்க முனையும் இலக்கியச் சூழலுக்கு இதைப் புரிந்துகொள்வது மிகவும் சிரமமானதுதான். எனினும் இவை இரத்தினவேலோனின் சிறுகதைகள் பற்றிய தகுந்த சாட்சியங் களாகின்றன.

இரத்தினவேலோனின் சிறுகதை களின் களம் பெரும்பாலும் கிராமத்து வாழ்வியலின்பாற்பட்டவை. கதையில் வரும் மாந்தர்கள் இயல்பான வாழ்வின் சூழமை வினுள் உறைபவர்கள். தன்னுடன் ஊடாடிய

> புலோலியூர் ஆ. இரத்தினவேலோன்
> அவர்கள் மூன்று தசாப்தங்களுக்கும்
> மேலாக எழுத்துலகில் உலா வருபவர்; மீரா
> பதிப்பகம் மூலம் பல நூல்களை வெளியீடு
> செய்து வருபவர்; வடமராட்சி மண்ணின்
> இயல்பான வாழ்க்கைக் கோலங்களை
> மண்ணின் மணத்தோடு நுட்பமாகச்
> சித்திரிக்கும் ஆற்றல் கைவரப் பெற்றவர்;
> இவை எல்லாவற்றுக்கும் மேலாக
> ஏனையோரையும் மதித்துப் பேணும் மனித
> நேயம் பூண்டவர்; பலருக்கு இனிய
> நண்பராய் அமைந்தவர்.
> - த.கலாமணி -

பாத்திரங்களைத் தொடர்ச்சியாகத் தாங்கிச் சென்று அவர்களின்வழி முன்னைய வாழ்வின் அனுபவங்களை பதிவாக்குபவை. இளமைத் துடிப்புடனான பாடசாலை வாழ்வின் சுவைகளைச் சுகிப்பவை. கிராமங் களில் வாழ்ந்த சாதாரண மனிதர்களை கனம் வாய்ந்த கதா பாத்திரங்களாக மாற்றுபவை. கிராமத்து மனிதர்களின் இயல்புகளாலும் பேச்சுக்களாலும் இயல்பேற்றப்பட்டவை. நகரத்து வாழ்வின் வளர்ச்சியில் சிக்கிக் கிராமத்து வாழ்வின் சந்தோசங்களைத் தொலைத்த மாந்தர்களின் தவிப்புக்களை உணர்த்துபவை. கிராமத்துச் சமுதாயங் களின் வாழ்வின் போக்குகளிலான மாற்றங் களை சிலாகிப்பவை. போர்க்காலத்து வாழ்வின் துயர முகங்களைக் காட்டுபவை. சொந்த வாழ்விடத்தி லிருந்து புலம்பெயர்ந்து சென்றவர்களது புதியவாழ்வின் விகாரங்கள் மற்றும் விகசிப்புக்களை பேசுபவை. எளிமை யான மொழியாலும், வலுவான சித்திரிப்பு முறையாலும் கலைநயம் மிக்கனவாக அமைந்தவை. கவனம் பெற வேண்டிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


கருப்பொருள்களையும் அவற்றுக்கான கனம் மிக்க கதைப்பின்புலங் களையும் கொண்டமைந்தவை. கதைப்பின்னல்களின் வழி தேறுகின்ற சமூக, பண்பாட்டு வாழ்வியல் பதிவுகளால் நிறைந்தவை. இவை யாவும் ஒரு சிறுகதைப் படைப்பாளி எனும் வகையில் இரத்தின வேலோனுக்குத் தனியடையாளம் தருபவை.


இரத்தினவேலோனின் கதைகள் பொதுவாகவே மேற்கண்ட சிறப்பியல்புகளைக் கொண்டவை ஆயினும், சில கதைகள் நனிசிறப்பான சிறுகதைகளாக அடையாளப்படுத்தத்தக்கவை. தாச்சிச்சட்டி, நிலாக்காலம், தொலையும் முகவரிகள், நேற்றைய காற்று, கனவாய் கானலாய், வேராகி நின்றாய் முதலிய சிறுகதைகள் நினைவில் நிலைப்பவை. பெத்தாத்தை, மூத்ததம்பி வாத்தியார், தங்கம்மா மாமி, சாரதா அக்கா, சாவித்திரி, கட்டை ரவி, பெட்டை ரவி, தடியன் ரவி, நிலாவாகி நின்ற நாகபூசனி ரீச்சர், குணட்டி, தேவிகா முதலிய வாழும் பாத்திரங்கள் நினைவில் மீளமீள வருபவை-உயிர்ப்பு மிக்கவை. ஒரு கதையில் மங்கலாகத் தெரியும் பாத்திரமொன்று இன்னொரு கதையில் முனைப்பாக வெளிப்படும் பாத்திரமாகும் நிலையில் இரத்தினவேலோனின் சிறுகதைகள் உண்மைக்கு மிக நெருக்கமாகி நிற்கின்றன.

சிறுகதைப் படைப்பாளியாக தனித்துவ அடையாளத்தைப் பெற்ற இரத்தினவேலோன் பதிப்பாசிரியராகவும் பத்தியெழுத் தாளனாகவும் இருந்து ஆற்றிய பங்களிப்புகள் முதன்மையானவை. பல்துறைசார்ந்த நூற்றுநான்கு நூல்களை வெளியிட்ட மீரா பதிப்பகம் வாயிலாக புகழ்பெற்ற படைப்பாளிகளின் படைப்புக்களை மாத்திரமன்றி இளைய படைப்பாளிகள் பலரின் படைப்புக்களையும் துணிச்சலுடன் வெளியிட்டு அவற்றுக்கான அங்கீகாரத்தையும் பெற்றுக் கொடுத்திருந்தார். சமாந்தரமாக எழுத்தாளர்களின் படைப்புக்கள் பற்றி இவர் ஐந்து ஆண்டுகளாகத் தொடர்ச்சியாக எழுதிவந்த "அண்மைக்கால அறுவடைகள்" எனும் கட்டுரைகள் பல படைப்பாளிகளின் படைப்புகளுக்கான மக்கள் தளத்தை விரிவு படுத்துவதாக அமைந்ததுடன் அவர்களைப் பற்றிய சிறப்பான உசாத்துணை ஆவணங் களாகவும் அமைந்தன. இவை தனக்கான அடையாள விரிவாக்கத்தைக் கடந்து பிறருக்கான இடத்தினையும் பதிவு செய்யும் இரத்தினவேலோனின் நோக்கினைத் தெளிவாகக் காட்டுவன.

மல்லிகை இலக்கிய சஞ்சிகையில் அட்டைப்பட அங்கீகாரம் கிடைப்பது ஒரு காலகட்டத்தில் படைப்பாளிக்கான கௌரவமாகக் கருதப்பட்டுவந்த நிலையில் இரத்தினவேலோனின் நாற்பத் தொன்பதாவது வயதில் ஜூலை 2007 இல் மல்லிகை அட்டைப்பட அதிதியாக அவரைக் கௌரவித்தது. எழுத்தாளர் வைத்தியக் கலாநிதி எம்.கே.முருகானந்தம் கௌரவத்துக்கான கட்டுரை ஒன்றை எழுதியிருந்தார் என்பது குறிப்பிடத் தக்கது. சிறுகதைப் படைப்பாளி, பத்தியெழுத்தாளர், பதிப்பாசிரியர் என்னும் முத்தளங்களில் பணியாற்றிய இவர், குடும்ப வாழ்விலும் திறன் வாய்ந்த தலைவராக விளங்கியுள்ளமை எச்சத்தால் அறியப்படுகிறது. உரையிடையிட்ட செய்யுளாக வளர்ந்த வாழ்வு "வெண்பா" வாய் அர்த்தங் கண்டுள்ளமை அவருடன் நட்புக் கொண்டவர்களுக்கு மகிழ் வளிப்தே. கடந்து சென்ற வாழ்வில் நிறைவைக் கண்ட படைப்பாளி யாக விளங்குகின்றார். இவரது சிறுகதைகள் இன்னும் ஆழமாக ஆராயப்பட வேண்டியவை. சட்டநாதன், ரஞ்சகுமார், குப்பிழான் ஐ. சண்முகன், நந்தினி சேவியர்(பட்டியல் பூரணமான தல்ல) முதலிய சிறுகதைப் படைப்பாளிகளின் படைப்புக்களில் ஒத்துநிற்கும் இவரது சித்திரிப்பு முறைகளின் நுட்பங்கள் மற்றும் விவரணங்கள் தொடர்பான பகுப்பாய்வுகள், இவரது கதைசொல்லும் முறையிலான தனித்துவத்தையும் அழகியலையும் புரிந்து கொள்வ தற்கு வழிசமைக்கும். தேர்ந்து படிக்கப்படவேண்டிய சிறுகதைகளில் இரத்தின வேலோனின் சிறுகதைகளும் உள்ளடங்குகின்றன.


"இரத்தினவேலோன் தனக்கென ஒரு சுய நிலைப்பாட்டை எடுத்துக் கொண்டு தனது படைப்புகளைச் சிருஷ்டிக்கின்றார். வேலோனின் ஆக்கங்களில் எளிமையிருக்கின்றது. தெளிவு இருக்கின்றது உயிர்த்துடிப்பும் கலை அம்சமுமிருக்கின்றது.
- நீர்வை பொன்னையன் -



















'படைக்கும் ஆற்றலுடன் படைப்பு நுட்பங்களையும் வேலோன் அறிந்து வைத்திருக்கின்றார். இதனாலேயே திறனாய்வு சார்ந்த பத்தி எழுத்துக்கள் வேலோனின் கைவண்ணத்தில் மெருகும், ஆழமும் கொண்டு காணப்படுகின்றன.
-கே.எஸ்.சிவகுமாரன் -



பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒருநாள் கழிந்தது

குந்தவை

மண்டைக்குள் ஏதோ! சத்தம் ஊர்ந்து ஊர்ந்து வருவது மாதிரி இருந்தது. வர வரப் பெரிதாகக் கொண்டு வந்தது. சகிக்க முடியாமல் மண்டைக்குள் கைவிட்டு அதைத் தடுக்க வேண்டும் போலிருந்தது.

ஏதோ! ஒரு வகையில் பழக்கமான சத்தம் போல் இருந்தது. இனங்காண முடியவில்லை.

அவன் ஏதோவொரு சந்தியில் சற்றுத் தள்ளி நின்று கொண்டிருந்தான். அச்சுவேலி சந்தியாக இருக்கலாம்.

றோட்டின் மறு கரையின் நேரே இன்னுமொரு றோட் பிரிந்து சென்றது. றோட்டைக் கடந்து அவன் அந்த றோட்டுக்குச் செல்ல வேண்டும். அந்த றோட்டில் தான் புகைப்பட ஸ்ருடியோ உள்ளது. ஏ.எல். பரீட்சைக்கு அடையாள அட்டைக்காக அவனின் புகைப்படம் வேணும். ஆனால் இந்த றோட்டைக் கடந்து மறுகரையிலுள்ள றோட்டுக்குப் போக முடியவில்லை. யாரோ தடுக்கிறார்கள். அந்த வழியால் ஏதோ வரப்போகிறதாம். சற்று நேரத்தின் பின்தான் அந்த வாகனங்கள் கண்ணில் தென்பட்டன. றோட்டை அடைத்துக் கொண்டு அந்த வாகனங்கள் ஒன்றன் பின் ஒன்றாய் வந்து கொண்டிருந்தன.

அதன் உச்சி முகப்பில் துவக்கு பொருத்தப் பட்டிருந்தது. அருகில் ஒரு படைவீரன் உட்கார்ந் திருந்தான். பிரமாண்டமான வாகனங்கள் கடுமையான சத்தத்துடன் ஒன்றன் பின் ஒன்றாய் அவனைக் கடந்து சென்றன. அவன் முன்பின் பார்த்திராத கவச வாகனங்களே!

ஒரு மனிதனை அழிக்க இவ்வளவு பெரிய உருப்படியான வாகனங்களா? அவனுக்கு அச்சம் கலந்த வியப்பு. அவன் நின்றிருந்த நிலம் அவனைப் புரட்டித் தள்ளுவது போல் அதிர்ந்தது. திடுக்கிட்டு விழித்தான்.

அவன் றோட்டுக் கரையின் மிக அருகாமையில் படுத்திருந்தது உறைத்தது. எப்பொழுதோ அச்சுவேலி சந்தியில் நின்று கொண்டு கவச வாகனங்கள் ஊர்ந்து வருவதைப் பார்த்த ஞாபகத்தை இவை கிளறி விட்டிருக் கின்றன. சுற்றும் முற்றும் பார்த்தான். அங்குமிங்குமாக மற்றவர்கள் சற்றுத் தள்ளி படுத்திருப்பது தெரிய வருவது புலப்பட்டது. அவன் தான் றோட்டுக்கு மிகக் கிட்டவாக வந்து படுத்திருந்தான். அதனால் தான் றோட்டால் போகும் வாகனங்களின் சத்தம் அவனின் மண்டைக்குள் ஊர்வது போன்ற பிரமையை ஏற்படுத்தியிருந்தது.

கிழக்கிலிருந்து மேல் எழும்பி வரும் தேய் பிறைச் சந்திரனின் மங்கலான ஒளி திட்டுத் திட்டாக படுத்திருந்த மனித உருவங்களில் பட்டுத் தெறித்தன. அவன் அந்த பிறைச் சந்திரனைப் பார்த்துக் கொண்டிருந் தான். அவன் கட்டாந் தரையில் படுக்கத் தொடங்கியதி லிருந்து அவனுக்கு அந்த தேய்பிறைச் சந்திரன் பரீட்சய மாக இருந்து வந்தது. எவராலும் கவனம் பெறாத வினோதமான அதிகாலை இருட்டு மோனத்தில் வசீகரம் பெறும் இந்தப் பிறைச் சந்திரனோடு அவனுக்கு ஒரு மெலிதான நட்புணர்வு இருந்து வந்திருக்கிறது





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமாவாசைக்கு மூன்று நாலு இரவின் முன்பாகத் தோன்றும் இந்தப் பிறைச் சந்திரனை அவன் இங்கு வந்த மூன்றாம் நாள் அதிகாலை ஒரு முறை நடுவில் விழித்தெழுந்து விழிப்பு வந்து மறுபுறம் திரும்பிப்புரண்ட பொழுது இந்தச் சந்திரனைக் கண்டான். இப்படித் தோன்றும் சந்திரனின் எண்ணிக்கையைக் கொண்டு அவர்கள் வந்திருந்த நாட்களைக் கணக்கிட முடியும். மூன்றுமுறை பிறைச்சந்திரனை அவன் கண்டிருக்கிறான்.

தம் பூர்வீக நிலத்தை விட்டு தம்மை வெளியேற்றிய இராணுவம் போர் முடிந்து ஏழு ஆண்டுகளாகியும் நிலத்தை திருப்பித்தர மறுக்கிறது. தம் நிலத்தை திருப்பித் தரக் கேட்டு அவர்கள் நடத்தும் அறப் போராட்டத்தின் நூற்றி இருபதாவது நாள் இன்று. இராணுவ முகாம்களின் றோட்டின் எதிர்க் கரையின் நிலத்தின் அங்கேயே உணவு சமைத்துண்டு உறங்கி வாழும் மக்கள் இறுதிக் கட்டமாக போராட்டத்தில் இறங்கியிருக்கிறார்கள். இராணுவமோ அசைந்து கொடுப்பதாகத் தெரியவில்லை. உள்ளே வந்தால் சுடப்படுவீர்கள் என்று பலகையில் எழுதி வைத்துவிட்டு கம்பி வலையத்திற்குள் இருக்கிறார்கள்.

மேலே தென் மூலையில் கரிய மேகத் திரளொன்று நடு வானை நோக்கி முன்னேறி வந்து கொண்டிருந்தது. குளிர் காற்றும் வீசத் தொடங்கியது. மேகம் நடுவானில் வந்ததும் மழை பெய்யத் தொடங்குமோ? என்று அவன் யோசித்தான். தெற்கிலிருந்து வரும் இடைக்கால மேகத்திரள் இது.

அவன் நினைத்தது போல் அந்த மேகம் நடு வானை வந்தடைந்ததும் மழை தூறத் தொடங்கியது. படுத்திருந்த எல்லோரும் வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்து கூடாரங்களை நோக்கி நகரத் தொடங்கினார்கள் இரு கூடாரங்கள் ஒன்றோடு ஒன்று இணைக்கப்பட்டு ஒரு பெரிய கூடாரமாக இருந்த அந்த இடத்தின் அருகே அரிக்கன் லாம்பு தொங்கிக் கொண்டிருந்தது. மழை பலமாக பெய்யத் தொடங்கியது. கூடாரங்களின் உள்ளே பாய் விரித்து படுத்திருந்த குழந்தைகளும் பெண்களும் எழுந்து கொண்டார்கள். இணைக்கப்பட்ட கூடாரத்தின் நடுவே மழை கொட்டியது. கூடாரங்கள் முழுவதும் நனைய விடாமல் பெண்கள் ஓடிப்போய் பெரிய பெரிய பாத்திரங்களை வைத்தார்கள். வெளியே வெள்ளம் போட்டது. கூடாரத்துக்குள் இருந்து கொண்டே மழையை எல்லோரும் பார்த்துக் கொண்டிருந்தார்கள். வறண்ட நிலத்தில் இந்த மழை வரவேற்கப்படக் கூடியதுதான், ஆனாலும் மழை பெய்த ஈர நிலத்தில் எவ்வாறு படுப்பது... ஆண்கள் போய் வெளியே படுக்க முடியும் என்ற யோசனை எல்லோர் மனதிலும் எழுந்தது. சனங்களின் சலசலப்புக்கு மத்தியில் மழை ஓய்ந்து போனது.

காய்ந்து போன நிலம் மழை வெள்ளத்தை உடனே உறிஞ்சிக் கொண்டது. ஆண்கள் வெளியே போய் படுக்கத் தொடங்கினார்கள்.

அவன் விழித்த போது நன்றாக விடிந்து விட்டது. சுற்றிப்படுத்திருந்த எல்லோரும் எழுந்து விட்டனர்.

சூடாறிய மண்ணும் உலர்ந்து கொண்டிருந்த மண்ணின் குளிர்ச்சியும் அவனை அசந்து தூங்க வைத்திருக்கிறது.

எழுந்து கூடாரத்துக்குள் போய் அங்கிருந்த சட்டிக்குள் இருந்த உமிக்கரியை கையில் கொட்டிக் கொண்டான். பற்றைகளைத் தேடி நடக்கையில் சமையல் நடக்கும் பெரிய ஆல மரத்தடியின் கீழ் பெண்கள் ஈர விறகோடு போராடிக் கொண்டிருந்தார்கள். பற்றைக்குள் இருந்து வந்து கை, கால் கழுவித் திரும்புகையில் மரத்தடியில் தேனீர் தயாராகிக் கொண்டிருந்தது.

றோட்டுப் பக்கமாக வந்த பொழுது ஒரு வான் வந்து நின்று அதிலிருந்து பெட்டிகளை இறக்கிக் கொண்டிருந்தார்கள். நேற்றே சமைக்கிற பெண்களிடம் சொல்லியிருந்தார்கள். காலையில் ஒன்றும் சமைக்க வேண்டாம் பனிஸ் கொண்டு வருவோம் என்று பேக்கரிக்காரர்கள் சொல்லியிருந்தார்கள்.

அவன் கையில் ஒரு நீண்ட பனிஸூம் ஒரு வட்ட பனிஸூம் கிடைத்த போது தேனீர் கோப்பையும் வந்து சேர்ந்தது. வெறுந்தேனீரைக் கண்டு அவனுக்கு திருப்தி வந்தது. வெறும் தேனீரும் பனிஸூம் அவனுக்குப் பிடிக்கும் . தேனீரின் தேயிலைக் கசப்பும் பனிஸிலுள்ள லேசான இனிப்பும் கலந்த வினோதமான சுவையை அவன் எப்போது கண்டுபிடித்தான் என்பது பற்றி அவனுக்கு நினைவிலில்லை ஆனாலும் கனத்த இருள் போர்வையும் அலையடிக்கும் கடலின் இரைச்சலும் ஞாபகம் வரும். இரவில் அப்பாவோடு கடலுக்கு போகும் போது பசியெடுக்கும் வேளை சுடுதண்ணிப் போத்தலிலிருந்து ஊற்றிய தேனீருக்குள் பனிஸைத் தோய்த்துத் தின்ற நினைவுகள் நிழலாடும். கடும் குளிர் மறைந்து போகும்.

ஆனால் அப்பாவுக்கு இதொன்றும் தேவைப் படாது. அவருக்குத் தேவை ஒரு போத்தல் பனங்கள்ளு வாயில் ஊற்றிக் கொண்டால் குளிர் ஒன்றும் தெரியாது என்பார். நேற்றிரவு விரித்த வலையை இழுத்து படகுக்குள் போடுவார். இந்த முழுப் போத்தல் கள்ளின் உதவியுடன் அவனின் பங்கும் குறைவு தான்.

அப்பாவும் ஆரோக்கியமாக இருந்தவர் தான். சொந்தக் காணியை விட்டு வெளியேற்றப்பட்ட இந்த 30 வருடங்களில் அகதி வாழ்க்கையில் தொந்தரவுகளும் அனுபவித்த கஷ்டங்களும் அவர் உடம்பைக் கெடுத்து விட்டன. சொந்த நிலமும் கடலும் இருந்திருந்தால் அவர் இன்றும் உயிரோடு இருந்திருப்பார். இப்படி இராணுவத்திடம் அன்றும் நிலங்களை விடுவிக்க கோரி றோட்டோரம் உண்டு உறங்கி வாழும் நிலைமையை அவர் சகித்திருக்கமாட்டார்.

வெளியிருந்து ஆட்கள் வரத் தொடங்கி விட்டார்கள். அனேகமானவர்கள் பத்திரிகை நிருபர்கள். அன்று யாரோ பெரிய மனிதர் தங்களைப் பார்க்க வருவதாகவும் சொன்னர்கள். அரசாங்கத்திற்கு வெளியிலிருந்து கொண்டு ஆதரவு கொடுக்கும் ஒரு தமிழ்க் கட்சியின் தலைவராம். அவர் அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுத்தால் அரசாங்கம் இராணுவத்தை இங்கிருந்து வெளியேற்றி விடுமாம். அதனால் தான் இத் தலைவரின் வருகை முக்கியமானதென பேசிக் கொண்டார்கள். ஆனாலும் எந்த அளவுக்கு அழுத்தம் கொடுப்பார் எனத் தெரியவில்லை. இருத்தாற் போல் ஆட்கள் வரத் தொடங்கினார்கள். வரிசை வரிசையாக இருந்த கதிரைகளில் அமர்ந்து கொண்டார்கள். அப்படி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்த நிருபர்களிடையே தன்னோடு அச்சுவேலியில் படித்த மோகனையும் அவன் கண்டு கொண்டான். நீயுமடா? இங்கே இருக்கிறாய்? என்று அவன் நண்பன் வந்து அவனைக் கட்டிக் கொண்டான். இருவரும் குசலம் பேசி சிரித்துக் கொண்டார்கள்.

படிக்கும் போது அவனுடைய நல்ல நண்பன் இவன். ஒரு முறை ஏ.எல் எடுத்த பிறகு இருவரும் பிரிந்து விட்டார்கள். அவன் சொந்த ஊரான முல்லைத் தீவுக்கு வந்துவிட்டான். சண்டையும் இடையிடையே சமாதானமுமாக காலம் நீண்டு போயிற்று. எல்லைப் புறங்களிலிருந்த அமைதி பறிபோயிற்று. கடலோரங்கள் எல்லாம் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டுக்குள் வந்தது. அந்தப் பகுதி மக்கள் தங்களின் இருப்பு நிலங்களை விட்டு துரத்தப்பட்டார்கள். அகதி முகாம் வாழ்க்கை மழை வெள்ளம் போசாக்கான உணவு இன்மை நாளாந்தம் அல்லாட வைத்தது.

கடைசியாகத்தான் இந்த முடிவு. எப்படியும் இராணுவத்தினரிடமிருந்து தம் நிலங்களை மீட்பது என்ற முடிவு எடுத்தனர். அதனால் தான் இந்த அறவழிப் போராட்டம்.

தலைவர் வருகிறார், என பரபரப்பு ஏற்பட்டது. பொலிஸ் பாதுகாப்புடனே தலைவர் வந்து கொண்டிருந்தார். சிவந்த சற்றுக் குள்ளமான மனிதர். வெள்ளை வேட்டியும் அரைக்கை சட்டையுமாக வந்து கொண்டிருந்தார்.

வரிசையிலிருந்த நாற்காலிகளில் ஒன்றை அவர் முன் இழுத்துப் போட்டார்கள். பத்திரிகை நிருபர்கள் மக்களும் அவர் முன் கூட்டங்கூட்டமாய் நின்றனர். தங்கள் பிரச்சினைகளை ஏதேதோ சொன்னார்கள். தலைவர் பேசத் தொடங்கினார். உங்கள் அறப் போராட்டம் சம்பந்தமாக நான் ஜனாதிபதியிடம் பேசினேன். இதன் பின்னரும் பேசுவேன். இது சம்பந்தமாக அவரும் அக்கறையோடு இருக்கிறார். இராணுவத்தினரை விலக்குவது சம்பந்தமாய் பேசினேன். அது படிப்படியாய் செய்யப்பட வேண்டியது. யாரோ கத்தினார்கள். "போர் முடிந்து 8 வருடங்களாயிற்று இன்னும் எங்கள் பகுதிகளில் ஒரு சிறு பகுதியும் விடுவிக்கப்படவில்லை."

தலைவர் ஏதோ பேசிக் கொண்டிருந்தார். அவர் பேச்சில் எத்தனை தரம் "சம்பந்தம்" என்ற சொல் அடிபடுகிறது என்பதை அவன் எண்ணிக் கொண்டிருந்தான்.

தலைவர் பொறுமையைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார். ஒரு நிருபர் 'அரசாங்கத்திற்கு ஆதரவு கொடுக்கிறீங்கள். உங்களால் அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்க முடியாதா?' என்று கேட்டார்.

அழுத்தம் கொடுத்துக் கொண்டுதான் இருக்கிறோம். ஆனாலும் அவர் அழுத்தம் அதிகமானால் தீவிரவாதிகள் அவரை தம் பக்கம் சாய்க்கக் கூடும். இதனால் நிலமை மோசமாகக் கூடும். எனவே பொறுமை அவசியம். தலைவரின் பேச்சில் புதிதாக ஒன்றுமில்லை. ஒருவாறு கூட்டம் முடிந்து தலைவரும் அவரது குழுவும் எழுந்து சென்றார்கள்.

ஆனாலும் பத்திரிகை நிருபர்கள் போகவில்லை. மக்களிடையே புகுந்து புகுந்து அவர்களை பேட்டி கண்டு கொண்டிருந்தார்கள். பக்கத்தில் சிதம்பரம் அண்ண ஒரு நிருபரிடம் சொன்னது கேட்டது. இந்த அகதி வாழ்க்கை எங்களுக்குப் பழக்கமான தான், இந்த முறை றோட்டுக் கரையோரம் இருக்கிறோம். அதுதான் ஒரு வித்தியாசம்.

அவன் எண்ணமுற்றான். அனேகமான காலங்களை அவர்கள் வெறுந்தரையில்தான் கழித்திருக்கிறார்கள். சொந்த நிலங்களிலிருந்து வெளியேற்றப்பட்டபின் அவர்கள் அகதி முகாம்களில் தஞ்சமடைந்தார்கள். கூரைத் தகரம் வெயிலையும் வெப்பத்தையும் வாரியிறைத்தது. உள்ளே இருக்க முடியாமல் மணல் வெளியில்தான் வாசம். இரவு நேரங்களில் கூரை வழியாக கசியும் வெப்பம் உள்ளே படுக்கவிடாமல் செய்தது. மர நிழலில்தான் படுக்கை. மழை காலமென்றால் கேட்கவே வேண்டாம். மழை வெள்ளம் முகாமைச்சுற்றி நிற்கும் மேட்டு நிலம் தேடி குடி போய் இரவிரவாய் கும்பல் கும்பலாய் பேசித் தீர்த்தபடி விழித்திருந்த நாட்கள்.

அவனின் தோளில் யாரோ தொட்டார்கள். மோகன் தான். என்னாடா?, எப்படி போகுது என்று கேட்டபடி அவனருகில் வந்து அமர்ந்தான். பத்திரிகை நிருபர் அவன். ஆசிரியர் கேப்பாப்புல மக்களை கண்டு வந்து இரண்டு பக்கக் கட்டுரை எழுதச் சொன்னாராம் அதற்கு விபரம் சேகரிக்க வந்திருக்கிறான்.

அவனது குடும்ப நலன்களைப் பற்றியும் விசாரித்தான். அவன் திடகாத்திரமான தன் தந்தை சிறு வியாதியால் இறந்தார் என்றும் தமக்கை இந்தியாவில் அகதிமுகாமில் இருப்பதையும் கூறிவிட்டு தாயும் தங்கையும் தன்னோடு இருப்பதையும் கூறினான். அவன் ஆல மரத்தடியில் பெரிய சட்டியில் சோற்றை அகப்பையால் கிளறிக் கொண்டிருந்த தன் தங்கையைக் காட்டினான். அனேகமாக சமையலை இளம் பெண்களே கவனிக்கிறார்கள். தாய் மார்கள் கறிகளுக்கு உப்புப் புளி போட்டு பக்குவம் சொல்லி விடுவதோடு சரி. அவனின் தாயார் படுத்திருந்த இடத்திற்கு மோகனை அழைத்துச் சென்றான்.மோகன் தொழில் நிபுணன். ரேப் ரெக்கோட்டை தட்டிவிட்டு அம்மாவிடம் கேள்விகள் கேட்களானான். அம்மாவும் தன் கஷ்ர நஷ்ரங்களை சொல்லித்தீர்த்தாள். அவளைப் பேச விட்டு விட்டு இவன் கிணற்றடிக்கு போய் குளித்து விட்டு சாரம் மாற்றிவிட்டு வந்தான். அவர்கள் இருந்த இடத்திற்கு சாப்பாடு இரு தட்டில் வந்தது. செம்பு தண்ணீரும் அவர்கள் முன் வைக்கப்பட்டன. ரின் மீன் குழம்பும் பயிற்றங்காய் கறியும் புளுங்கல் அரிசி சோறும் இருந்தன. அவர்களுக்கு மட்டுமன்றி ஆதரவு தெரிவிக்க வந்திருந்த பொதுமக்களுக்கும் சாப்பாடு வழங்கப்பட்டது.

முன்னே விரித்த பாயில் சில பல்கலைக்கழக மாணவர்களும் இவர்களுக்கு ஆதரவாய் உண்ணா விரதம் இருக்க வந்திருந்தார்கள் அவர்களுக்கும் அவர்களின் மறுப்பை மீறி சாப்பாடு வழங்கப்பட்டது. மாலை ஐந்து மணியானதும் மோகனும் அவனது மற்றைய நிருபர்களும் விடை பெற்றனர். பல்கலைக் கழக மாணவர்களும் விடை பெற்றுச் சென்று விட்டார்கள்...

அன்றிரவு படுக்கப் போகையில் அவர்கள் எல்லோருடைய கைகளிலும் புதிய படுக்கை விரிப்புக்கள் இருந்தன. அவை அன்று மாலை ஏதோ ஒரு கிறிஸ்தவ பருவ உபகார நிறுவனத்தினால் வழங்கப்பட்டன. அவற்றைப் பெறுவதற்காக முந்தியடித்து தள்ளுபட்டிருந்தாலும் அவர்கள் எல்லோருக்குமே படுக்கை விரிப்புக்கள் விநியோகிக்கப்பட்டிருந்தன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அவன் தன் படுக்கை விரிப்புடன் தான் வழமை போல் படுக்கும் இடத்தை நோக்கி வந்தான். மணல்களை தட்டி ஒதுக்கிவிட்டு அந்த இடத்தில் படுக்கை விரிப்பை விரித்தான். நல்ல விசாலமான படுக்கை விரிப்பு. தடிப்பானதும் கூட மண் உருத்தலொன்றும் இருக்காத குளிர் காலத்தில் இதனை போர்வையாகக் கூட பயன்படுத்தலாம்.

அவன் படுத்துக் கொண்டு ஆகாயத்தை பார்த்தான். அமாவாசைக்கு முந்திய இருட்டு. ஆகாயம் கன்னங்கரேல் போலிருந்தது. கூடாரத்திலிருந்து வெளிப்பட்ட மங்கிய வெளிச்சம் ஒளிக்கீற்றாய் நிலத்தில் படிந்திருந்தது.

அவன் தன் மனைவியை நினைத்துக் கொண்டான். அவள் வேற்றூர்க்காரி. இவளுடைய நிலங்கள் இராணுவம் ஆக்கிரமித்திருக்கவில்லை. ஆகையால் அவளுக்கு இந்த நில மீட்பைப் பற்றி அக்கறையில்லை. தன் ஊரில் தனது பெற்றோருடன் தங்கிவிட்டாள். அவளுக்கு பிள்ளைகளும் இல்லை. இருந்திருந்தால் பக்கத்து கட்டாந்தரையில் அயர்ந்து தூங்குகின்ற வேலு பெடியனைப் போல் அவனும் இந்த மண்ணில் புரண்டு படுத்திருப்பான். அவனுக்கு கை நீட்டி அந்தச் சிறுவனை தொட்டு அணைக்க வேண்டும் போல இருந்தது. இதனால் சிறுவனின் நித்திரை கலைந்து விடுமோ? என்று எண்ணங் கொண்டான.

மோகன் இச் சிறுவனைக் கண்டிருந்தால் படம் பிடித்து பத்திரிகையில் போட்டிருப்பான் பாராட்டை யும் பெற்றிருப்பான். தூக்கம் வரவில்லை. மனதில் ஏக்கமும் தவிப்பும் நிறைந்திருந்தன. காணிகளை விடுவித்திருந்தாலும் அவை எந்த நிலையில் இருக்கும் என்பதை ஒருவாறு ஊகிக்க முடியும். வீடுகள் எல்லாம் தரைமட்டமாக்கப்பட்டிருக்கும். மரங்களும் தப்பி பிழைத்திருக்காது. பிள்ளையார் கோவில் கூட எந்த நிலையில் இருக்கும் என்று தெரியாது. நான் சிறு வயதிலே குதித்து விளையாடிய கடற்கரையும் வெற்றுக் காடாய் சுடு மணலாயிருக்கும் அம்மாவும் தங்கையும் மற்றப் பெண்களும் தலையில் அடித்துக் கொண்டு அழுவார்கள். சகிக்க முடியாமல் இருக்கும்.

அந்த நேரத்தில் வீட்டை விட்டு ஓடிய காலத்தை நினைத்துப் பார்க்க வேண்டியுள்ளது. அதிர வைக்கும் வேட்டுக்களின் சத்தம் வரவர அண்மையில் நெருங்கி கேட்ட போது வீட்டை விட்டு ஓடுவதைத் தவிர வேறு எந்த வழியும் தெரியவில்லை. வீட்டுக்குள் தனித்திருந்தால் வந்த இராணுவம் சுட்டுப்போட்டு போய்விடும் என்ற பயம் மேல் எழும்ப, தேவையான சாமன்கள் அடங்கிய பெட்டியுடன் தெருவழியாக இறங்கி குறுக்கே ஓடும் சின்ன ஒழுங்கை வழியாக ஓடிய காட்சி நிழலாடியது.


முதலில் நண்பன் முத்துராசாவின் வீடுதான் அவர்களுக்கு அடைக்கலம் கொடுத்தது. முத்துராசா ஏற்கனவே செல்பட்டு செத்திருந்தான். அவனுடைய மனைவியும் மக்களும் தான் அங்கிருந்தார்கள். ஓர் இரவுக்கு மேல் அங்கு தங்க முடியவில்லை. பிறகு ஒரு பிள்ளையார் கோவில் வெளி முற்றலில் வந்தவர்கள் எல்லோரும் தஞ்சமடைந்தார்கள். கோயிலின் உள்ளேயும் வெளியேயும் ஏராளமான சனங்கள் குந்தியிருந்தார்கள். அந்த நேரத்தில் தான் பக்கத்து ஊரிலுள்ள கிறிஸ்தவ தேவாலயத்தில் தஞ்சம் புகுந்த மக்கள் மீது குண்டு மழை பொழிந்து இருநூறுக்கு மேலானோர் பலி என்ற செய்தி வந்தது. வழிபாட்டு தலங்களில் தங்கியிருப்பது கூட பாதுகாப்பில்லை என்பதை உணர்ந்து கொண்ட போது வேறு எங்காவது ஓடிச் செல்லத் தூண்டியது.

பிறகு அரசாங்கம் ஏற்பாடு செய்த அகதி முகாம்களுக்குச் சென்று தங்கினார்கள். இடத்திற்கிடம் மாறி உடம்பு தேய்ந்து உள்ளம் தோய்ந்து நொந்த பிறகுதான் தங்கள் காணிகளை விடச் சொல்லி இராணுவ முகாம்களின் முன்னாலேயே உண்டு உறங்கி வாழ்வதென்றாயிற்று.

எல்லாவற்றையும் மனதில் சுமந்து கொண்டு தங்கள் காணிகளை இராணுவம் விடுவிக்கும் நாளை எதிர் பார்த்து அந்த நாள் கிட்டினால் புதிதாய் வாழ்க்கையை தொழிலை கட்டியெழுப்ப முயல வேண்டும். இந்தச் சிரமங்களுக்கும் கஷ்டங்களுக்கும் நடுவே “சொந்த மண் திரும்பக் கிடைத்து விட்டதே” என்ற மகிழ்ச்சியில் துன்பம் மறைந்து போகும் வாழ்க்கையை எப்படியாவது எதிர் கொள்ள வேண்டும். வரும் கஷ்டங்களுக்கு தயாராக வேண்டும் எப்படியோ ஒரு நாள் கழிந்துவிட்டது. வரும் நாட்களை இப்படி அர்த்தமற்று போக விடக் கூடாது.

ஒரு நாள் கழிந்தது. இனி வருவது 121 வது நாள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இலக்கியப் பரப்பில் ஒரு நீட்சி
# இளம் வளர்ந்தோர் இலக்கியம்

பேராசிரியர் சபா . ஜெயராசா

நவீன உலக இலக்கியப்பரப்பில் மிகுந்த செறிவோடு வளர்ந்து வருவது "இளம் வளர்ந்தோர் இலக்கியம்" (Young Adult literature) தமிழ்ச் சூழலில் வளர்ந்தோர் இலக்கியம் சிறுவர் இலக்கியம் ஆகிய இரண்டுமே மேலோங்கியுள்ளன. இளம் வளர்ந்தோர் இலக்கியமும் அதற்குரிய தனித்துவமான திறனாய்வும் இன்னமும் உரிய நீட்சியை அடையவில்லை.

இளம் வளர்தோரின் சமூக உளவியல் முக்கியத்துவம் அதிக கவன ஈர்ப்பைப் பெறத் தொடங்கிய சூழலில் அவர்களுக்குரிய தனித்துவமான இலக்கியங்களின் தேவையும் மேற்கிளம்பியது.

பதின்ம வயதினருக்கான இலக்கியம் எனவும் அது அழைக்கப்படுகின்றது. அவர்களுக்குரிய தனித்துவமான பிரச்சினைகளும் அவர்கள் எதிர் நோக்கும் அறைகூவல்களும் இலக்கிய வெளிக்கு கொண்டு வரப் படுகின்றன. இளம் வளர்ந்தோர் உளவியல் இலக்கிய மாகின்றது.

"வயதும் அனுபமும்" என்ற தொடர் இத்துறையில் திறனாய் வாளரால் பயன்படுத்தப்படுகின்றது. ஆங்கிய இலக்கிய மரபில் இவ்வகை இலக்கியம் பத்தொன்பதாம் நூற் றாண்டிலிருந்து வளர்ச்சி கொள்ளத் தொடங்கியது. றிம்மர் சாரா ( 1741-1810) என்ற பெண் எழுத்தாளரே இத்துறையைச் கால் கோல் கொள்ளச் செய்தவராகின்றார். சிறுவர் இலக்கிய வளர்ச்சியிலும் அவரது பங்களிப்பு முக்கியமான தாகக் கருதப்படுகின்றது.

அவர் முன்னெடுத்த "கல்வி யின் காவலன்" என்ற இதழில் இளம் வளர்ந்தோர் இலக்கியம்


றிம்மர் சாரா

தொடர்பான கருத்தாடல்கள் முன்வைக்கப்பட்டன. கல்விச் செயற்பாட்டாளராக விளங்கிய அவர் வயதுப் படிநிலைகளுக்கு ஏற்ற கல்வியையும் இலக்கிய ஆக்கங்களையும் வலியுறுத் தினார். இலவசமாகக் கற்பிக்கும் பணியையும் மேற் கொண்டார்.

அவரது எழுத்துக்களில் அக்காலத்துக்குரிய பிற் போக்குத்தனம் நீடித்து இருந்தது. சமூக ஏற்றத்தாழ்வு களும் ஏற்ற இறக்கங்களும் அருளப்பட்டவை என்றும் அவை மீறப்பட முடியாதவை என்றும் கற்பித்தார்.

பத்தென்பதாம் நூற்றாண்டில் விரிவாக்கம் பெறத் தொடங்கிய கல்வி நடவடிக்கைகளின் பின்புலத்தில் இளம் வளர்ந்தோருக்கான இலக்கிய ஆக்கங்களும் மேலரும்பத் தொடங்கின.

வால்டர் ஸ்கொட், சார்ல்ஸ் டிகின்ஸ், மார்க்டு வைன், ரொபேட் லுயிஸ், ரடியாட் கிப்லிங் முதலாம் நாவலாசிரியர்கள் இளம் வளர்ந்தோருக்கான நாவல் களை எழுதலாயினர், பெரும் நாவலா சிரியர்கள் இத்துறையிலே கவனம் செலுத்தியமை குறிப்பிடத்தக்கது.

மேலையுலகின் சமூக வாழ்வில் இளம் வளர்ந்தோரின் சமூக வகிபாகம் முக்கியத்துவம் பெறத் தொடங்கிய நிலையில் அவர்களை முதன்மைப்படுத்தும் ஆக்கங்களின் தேவையும் பரவலுற்றது.


தமிழ்ச் சூழலில் இளைஞர் போராட்டங்களைத் தொடர்ந்து இளம் வளந்தோர் தொடர்பான நோக்கு வலுப் பெறத்தொடங்கியது. ஆனால் உளவியலும் இலக்கியமும் நீட்சி கொள்ளவில்லை.

இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலிருந்து இளம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்ந்தோர் மீதான கல்வி சார்ந்த தாக்க விசைகள் உலகில் அதிகரிக்கத் தொடங்கின. தீவிர போட்டித் தன்மைகள் கல்விச்செயற்பாடு களில் மேலோங்கின. தொழில் உலகம் கல்வி உலகோடு தொடர்பு பட்டிருந்தமை மேலும் சிக்கல்களை உருவாக்கியது.

கலைத்திட்ட உள்ளடக்கம் அதிகரிக்கத் தொடங்க கற்றல் கற்பித்தற் செயற்பாடுகள் சிக்கலடைந்தன. பாட நெருக்குவாரம் பரீட்சை நெருக்குவாரம், தனிச் சொத்துரிமையுடன் இணைந்த போட்டி முறைமை, முதலியவற்றுக்கு கற்பித்தல் உளவியல் ஈடு கொடுக்க முடியாத நிலைதோற்றம் பெற்றது. மரபுவழி மனனமுறையும், திணிப்பு நிலைக்கற்பித்தலும் இளம் வளர்ந்தோரைப் பதகளிப்புக்கு உள்ளாக்கத் தொடங்கின.





அவர்களின் பதகளிப்புக்கு, வர்க்க நிலையுடன் தொடர்புபட்டிருந்தது. அதாவது மன முறிவுகளைச் சீராக்கிக் கொள்ளல் சமூக பொருளாதார நிலைப்பாட்டுடன் இணைவு கொண்டதாக அமைந்தது.

அத்தகைய பின்புலத்தில் "திகழ் வெளியாட்கள்" (The Outsiders) என்ற நாவல் உருவாக்கம் பெற்றது. அதனை எஸ் ஈ ஹின்டன் என்ற பெண் எழுதினர். கல்லூரியில் படித்துக் கொண்டிருக்கும் பொழுது பதினைந்து வயதளவில் எழுத தொடங்கினார். பதினெட்டு வயதளவில் அது நிறைவுக்கு வந்தது.

பதின்நான்கு வயதான மைகேல் கேட்டிஸ் என்ற மாணவனின் வாழ்க்கை வரலாற்றை அந்த நாவல் பதிவு செய்தது. ஐக்கிய அமெரிக்கச்சூழலில் சமூக பொருளாதார பின் புலத்தை அடிப்படையாகக் கொண்ட இரண்டு வன் குழுக்களுக்கு (gangs) இடையே நிகழும் மோதலும் முரண்பாடுகளும் நாவலிலே சித்திரிக்கப்பட்டுள்ளன.

திரைப்படமாகவும், நாடகமாகவும் பின்னர் அது அரங்கேற்றம் பெற்றது. அமெரிக்கச்சூழலில் இளம் வளரந்தோரிடத்துக் காணப்படும் வன் குழு உருவாக்கம், குடிபழக்கம், தீவிரமான செயற்பாடுகள் முதலியவற்றையும் குடும்பச் செயலிழப்பையும் பேச்சு மொழியில் எழுதியமை யால் அதனைப் படிக்கக் கூடாதென சில கல்லூரி கள் தடை விதித்தன. அதேவேளை சில உயர் கல்லூரிகளின் ஆங்கில இலக்கியப் பயில்வில் அது ஒரு பாட நூலாகவும் சேர்க்கப்பட்டது.



இளம் வளர்ந்தோரின் சமூக பொருளாதார பின்புலத்தில் இசைவாக்கற்குழுக்கள் உருவாதலும் செயற்பாட்டுக் குழுக்கள் தோன்றுதலும் பரவலாகக் காணப்படும் சமூக உளவில் தோற்றப்பாடு.

தற்கணிப்பு மற்றும் தமது உடற்படிமம் தொடர்பான பிரச்சினைகள் உள நெருக்கீடு வேதனைத் திணிப்பு (Bullying) உள அழுத்தம். இணையத்துக்கு அடிமையாதல், குடிப்பழக்கம், புகைத்தல் கருத்தரித்தல் அதீத பாலியல் ஈடுபாடு, விலகல் நடத்தை, உற்ற நண்பர்களின் அழுத்தங்கள், எதிர் காலம் பற்றிய நம்பிக்கையிழப்பு, பரீட்சை நெருக்கீடுகள் முதலியவை இளம் வளர்ந்தோர் எதிர் நோக்கும் பொதுவான பிரச்சினைகள்.

மேற்கூறியவற்றின் பின் புலத்தில் இளம் வளர்ந்தோர் மத்தியில் "பிரச்சினை நாவல்கள்" வளர்ச்சியடையத் தொடங்கியுள்ளன. சமூகப் பிரச்சினைகளை நடுநாயகப்படுத்தி எழுதப்படுபவை "பிரச்சனை நாவல்கள்" என்ற பிரிவில் இடம் பெறும். சமூக நோக்கில் இளம் வளர்ந்தோரின் பிரச்சினைகள் இலக்கிய வெளிக்குக் கொண்டு வரப்படுகின்றன.

அத்தகைய நாவல்கள் சமூகப் பிரச்சினைகள் தொடர்பான புலக்காட்சியைத் தெளிவு படுத்துவதுடன் உளப்பிரச்சினைகளுக்கு சிகிச்சை தரும் முறைமையையும் கொண்டுள்ளன. வாசிப்பதால் அவர்கள் தமக்குத் தாமே உளவலுவேற்றம் செய்து கொள்கின்றனர்.

வளர்ந்தோர் நிலையை அடையும் பொழுது எதிர் கொள்ளப்படும் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கக்கூடிய ஆற்றலும் அவ்வகை எழுத்துக்களால் வளர்க்கப்படுகின்றன.

தமது செயற்பாடுகளுக்குத் தாமே பொறுப்பேற்கும் திறனும் பயனுள்ள நாவல்களால் வளர்த்தெடுக்கப்படுகின்றன. அதாவது பொறுப்புக்களைத் தட்டிக்கழிக்காது ஏற்கும் மனத்திடம் வலிமை கொள்ளச் செய்யப்படுகின்றது.

வகுப்பறைகளிலே இளம் வளர்ந்தோரின் நாவல்களைப் பயன்படுத்தும் செயற்பாடுகள் மேலை நாடுகளில் அண்மைக்காலமாக வளர்ச்சி கொள்ளத் தொங்கியுள்ளன. கலைத்திட்டத்தில் அவர்களுக்குரிய நாவல்கள் சேர்க்கப்படுகின்றன.

மாணவரின் சுயபடிமத்தை வளர்த்துக் கொள்ளல், தற்கணிப்பைமேம்படுத்திக் கொள்ளல், சுய ஊக்கலை விசைப்படுத்திக் கொள்ளல், சுயமாகத் தொழிற்படும் நிதனத்தை ஏற்படுத்துதல் முதலியவற்றுக்கு இளம் வளர்ந்தோருக்கான நாவல்களின் வாசிப்பு வகுப்பறைகளிலே துணை செய்கின்றன.

பிரச்சினைகளுக்குப் போதைப் பொருள் தீர்வாக அமையமாட்டாது என்ற மனத்திடத்தையும் அவ்வகை நாவல் வாசிப்பு மாணவர்களிடத்தே வலுப்படுத்திக் கொள்ளதுணை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்கின்றது.

அத்தகைய நாவல்கள் வாயிலாகத் தடை செய்யப்பட்ட விடயங்களை மாணவருடன் கலந்துரையாடுவதற்குரிய வாய்ப்பும் ஆசிரியருக்குக் கிடைக்கப் பெறுகின்றது.

பால்நிலைச் சமத்துவத்தை மாணவரிடையே வளர்த்துக் கொள்வதற்கும் பாலியலை விகாரமாக நோக்காது நேர்நிலைப்படுத்திக் கொள்வதற்கும் அவை ஆற்றுப்படுத்தல் செய்கின்றன.

அவ்வகையில் ஆங்கில மொழியில் எல்.ஹெச். அண்டர்சன் எழுதிய “பேச்சு” என்ற நாவல் உலகப் புகழ் பெற்றது. அண்டர்சன் அவளுடைய தந்தையார் பெயர். அவளது பெயர் ஹெய்ஸி, அவரது ஆக்கம் பிரச்சினை நாவல் வகையைச் சேரந்தது. நூலாசிரியர் பதின்ம வயதில் இருக்கும் பொழுதே பாலியல் வன்செயலுக்கு உட்படுத்தப்பட்டவர். மெலின்டா சோர்டினோ என்ற பெண்ணே கதையின் முதன்மைப் பாத்திரம். தமது அனுபவங்களை அதிகம் ஏற்றம் செய்துள்ளார். நாட்குறிப்பு வகையில் அந்த நாவல் எழுதப்பட்டுள்ளது. அவள் அனுபவித்த மனவடுவின் காயங்கள் திரிபின்றி சித்திரிக்கப்பட்டுள்ளன. கதைக்கோப்பு நீள்முகத் தொடர்ச்சியைக் கொண்டிராவிடிலும் எழுத்து முறைமை வேதனை கலந்து விறுவிறுப்புடன் செல்கின்றது. தனது உணர்வுகள் அனைத்தையும், முதன்மைப்பாத்திரம் வாயிலாகக் கொட்டித் தீர்த்துள்ளார். நனவு அருவி நுண்முறையைத் தழுவி நாவல் எழுதப்பட்டுள்ளது.

பாலியல் வன்கொடுமைக்கு உட்படுத்தப்பட்ட அந்தப் பெண்ணைச் சமூகத்திலிருந்து ஒதுக்கி வைக்காது சேர்த்துக் கொண்டமை சக மாணவரின் நல்லெண்ணத்தை வெளிப்படுத்தியது. பாதிக்கப்பட்ட அவருக்கு ஓவிய ஆசிரியர் ஆதரவு காட்டியமை ஆசிரியரின் உளவியல் தழுவிய செயற்பாட்டை வெளிப்படுத்தியது.

நாவலின் பிறிதொரு பண்பு தேவதைக் கதை நுட்பங்களும் ஒன்றிணைக்கப்பட்டிருத்தலாகும். அதன் வழியாக வாசிப்புச் சுவையேற்றம் செய்யப்பட்டுள்ளது.


இளம் வளர்ந்தோர் இலக்கியத்திலே சிறப்பிடம் பெறும் இந்த நாவல் இருபதுக்கு மேற்பட்ட மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. உளவியலோடும் கல்வியியலோடும் சமூகப் பிரச்சினைகளோடும் இணைந்திருத்தல் நாவலுக்குரிய சிறப்பியல்பு. இளம் வளர்ந்தோர் எழுத்தாக்கங்களில் பன்மை நிலைகள் வளர்ச்சியடையத் தொடங்கியுள்ளன. கருமை இனத்து இளம் வளந்தோர், சிறுபான்மைத் தேசிய இனத்து இளம் வளர்ந்தோர் முதலியோரது பிரச்சினைகள் இலக்கிய வெளிக்குக் கொண்டு வரப்படுகின்றன. இலக்கிய வழியாக அவர்களிடத்து வலுவேற்றம் செய்யப்படுகின்றது.

மாணவரிடத்து வாசிப்புப் பழக்கம் தூண்டப்படுவதற்கு அந்த நாவல்களின் வகிபாகம் முக்கியம் பெறத் தொடங்கியுள்ளது. வகுப்பறைக் கற்றல் கற்பித்தலுக்கு அவை அனுசரணையாகி வருகின்றன. மாணவரிடத்து உளவியற் சுகம் மேம்படுவதுடன் கற்பனையாற்றலும் கண்டுபிடிப்பு ஆற்றலும் மேலெழுதல் கண்டறியப்படுகின்றன.

தமிழ்ச்சூழலின் இன்றைய தவிப்பு நிலையில், உலகில் நிகழும் நல்லவற்றைக் கண்டறிதல் மாணவரின் நேர் வலுவேற்றத்துக்குரிய தேவையாகின்றது.

---

## தொலைந்து போன ஓர் இரவில்...



நா.நவராஜ்

முழி சிவத்து வெளித்தள்ளியது
இனிக்கிடந்து பயனில்லை
நித்திரை
அது என் ஜென்மவிரோதி
தலைக்குள் தெறித்தோடிய மின்னல் ஒளியில்
புரண்டு புரண்டு
என் சிந்தனைகளை
நான் வாசித்துக்கொண்டிருந்தேன்

பிடரியை மேல் நோக்கி யாரோ
தள்ளிப்பிடிக்கிறார்.
நெற்றி மெல்லச் சுடேறக்
காதுகள் இரைந்து புகைகக்கின
மூச்சுத்திணற நான்
என்சிந்தனைகளைப் புரட்டிக் கொண்டிருந்தேன்

காலையில் நடந்தது
முன்னாள் மாலையில் நடந்தது
சென்ற மாதத்து மதியம் ஒன்றில் நடந்தது
முன்னிரவில் நடந்தது
என் வீட்டின் முன்னே நடந்தது
தெருவில் எங்கோ நடந்தது
தொலைபேசியில் சொன்னது
லீசிங்கால் வந்து விளைந்தது
மனைவியோடு மல்லுக்கு நின்றது
பிள்ளைகள் பிடுங்கி எடுத்தது
முதலாளி முக்கி முனகியது
இன்னும் ... இன்னும்...
முன்ஜென்மத்து நினைவுகள் கூட
பாயிற்கிடந்த என்னை வறுத்தெடுத்தன.

அதனால்
இரவுகள் தோறும்
கண்கள் வெறித்தபடி காத்துக் கிடக்கிறேன்
நீ எப்போ வருவாய் என...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு சிறுகதை

புகழ்

## பதுங்குக்குழி நாட்கள் - 1

காலமற்று
இருள் பரந்து உறைந்தது
பீதிநிறை கண்களும் செபிக்கும் வாய்களும்
அந்தரத்தில் தொங்கப்
போர்!
குண்டெறி விமானம் ஓய்ந்த துளிப்பொழுது
வெளிப்போத்த திண்மம் - மீள
குழிக்குள் பதுங்கிக் கூறு சேதியில்
கைகளில் உயிர்
இன்னும் நடுங்குண்டு போகும்
"கோ" என்ற முலையுடைத் திண்மத்தின் அலறலில்
திடுக்கிட்டுத் திரும்பவும்
யோனிவாய் பிளவுண்டு குருதி சீற
இன்னொரு சிறு திண்மம்.

-கவிதை - பா.அகிலன்.

கதையை எழுதிக் கொண்டிருக்கும் போதே எனக்குள் ஏதேதோ எண்ணங்கள் துண்டுபட்டு துண்டு பட்டு ஓடிக்கொண்டிருந்தது. ச்சா...இதை எல்லாம் நான் ஏன் எழுதவேண்டும். அப்படி அடிக்கடிக் கேட்டும் திரும்பத் திரும்ப அதையே எழுதிக் கொண்டிருக்கின்றேன். சிதைந்த உடல்கள், இரத்தம், காணமல் போன உயிர்...

இவ்வளவு மோசமான வர்ணிப்புகள் என்று எனக்குள் நானே நொந்து கொள்கின்றேன். ஆனாலும் அவ்வாறு எழுதாமல் உண்மையை எப்படி சொல்ல முடியும். எத்தனையோ எழுத்தாளர்கள் இதையே தான் கருவாய் வளர்த்து எழுதிக் கொட்டிக் கொண்டிருக் கின்றார்கள். நானும் ஏன் எழுதவேண்டும். அப்போது தான் நினைப்பேன். அன்றைக்கு நான் கண்களை மூடிக் கொண்டு உயிரை இழுத்துக் கொண்டு ஓடி வந்திருக்க வேண்டும். அப்படி இருந்திருந்தால் அந்த மனிதர்களை நான் பார்த்தும் கேட்டும் இருக்கமாட்டேன். எனக்குக் கனவுகளும் வந்திருக்காது. எழுது எழுது என்று உள்ளுக்குள்ளே குத்திக் கொண்டும் இருந்திருக்காது.

இப்படி எத்தனை கதைகளைத்தான் படிப்பது. பெரும்பாலும் எல்லாம் ஏதோ ஒரு வகையில் யுத்த ரத்தக் கதைகள் தான். இன்னும் சலிக்காமல் எப்படிப் படிக்க முடிகின்றது. நானே கூட அதையே தான் எழுதிக் கொண்டிருக்கின்றேன். உங்களுக்கெல்லாம் வேறு கருவே இல்லையா என்று யாரும் கேட்டாலும் அதையே தான் திரும்பத் திரும்ப எழுதுகின்றேன். அவர்களைப் போல காதலையும் காமத்தையும் தூக்கி வைத்து ஆயிரம் கதைகள் எனக்கு ஏன் எழுத முடியாமல் போனது என்று கூட யோசித்திருக்கின்றேன். நான் எழுத்தாளி ஆனதே சொல்ல அழுத்திக் கொண்டிருந்த இந்த மறக்க முடியாத காட்சிகளால் தான். அதற்காகத்தான் எழுதவே வந்தேன். எனக்காக எழுதவந்தேன். அதனால் தான் எழுதிக் கொண்டே இருக்கின்றேன். அதைவிட்டு இப்போது நான் தாவ முடியாது. ஆனால் ஒருநாள் நிறுத்திக் கொள்வேன். அந்தக் கெட்ட காட்சிகள் முற்றாக என்னிடம் இருந்து மறையும் போது, துரு துருத்திக் கொண்டிருக்கும் நினைவுகளை இழக்கும் போது நிச்சயமாக நிறுத்திக் கொள்வேன்.

"என்ன பலமான யோசனை" என்றபடி அருகில் இருந்த நாற்காலியை இழுத்து எதிரில் போட்டுக் கொண்டு இருந்தான் அறிவழகன்.

அவன் வந்ததைக் கூட நான் கவனிக்கவில்லை. புன்னகைத்துக் கொண்டே, "வழமையா இருக்கிற மாதிரித்தான் இண்டைக்கும் இருக்கிறன்." என்று பதில் சொன்னேன். எவ்வளவு நேரம் இவனை தான் எதிர் பார்த்துக் கொண்டு இருந்தேன். வருவதற்கு இப்போது தான் நேரம் கிடைத்திருக்கிறது போல,

"வழமையா இருக்கிறதை விடவும் இண்டைக்குக் கொஞ்சம் அதிகமா அழகாய் தான் தெரிகிறாய்." என்றான்.

என்னை காணும் எல்லா நேரமும் அவன் அலுக் காமல் சொல்லிக்கொள்ளும் ஒரே வசனம் அதுதான். கேட்டுக் கேட்டு சலித்திருந்தாலும் கூட கேட்காமல் போனால் அன்றைக்கு முழுவதும் எனக்குள் துன்பப் பட்டுக் கொண்டே இருப்பேன். ஒருவித விரக்தி என்மேல் எனக்கே உருவாக்கி இருக்கும்.

கடைசியில் எனக்கென்று இருக்கும் ஒரே ஆறுதல் அவன்தான். அவன் மட்டும் தான்.

"ம்க்கும்" என்று விசனப்பட்டுக் கொள்வதைப் போல பாசாங்கு செய்து கொண்டேன். அவன் அதை எல்லாம் பொருட்படுத்தவே மாட்டன். அடுத்து என்ன சொல்வான் என்று எனக்குத் தெரியும் இந்தக் கண் களைப் பற்றித்தான். பார்வை பறிக்கப் பட்டபின் இருக்கும் என் ஒரே ஒரு கண்ணைப் பற்றி, அவனைப் பார்த்துக் கொண்டிருக்கும் அதே கண்ணைப் பற்றி தான் பேசப்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

போகின்றான். அதைப் பற்றி பேசாதே என்று மனதுக்குள் வேண்டினேன். அவன் சொல்வது எல்லாம் என் மகிழ்ச்சிக்காக என்று புரிந்தாலும் கூட என் குறையை ஞாபகப் படுத்துவதுபோலவே அது இருக்குமே! அதற்காக அதைப் பற்றிப் பேசவே வேண்டாம்.

அவன் அதைப் பற்றிப் பேசவில்லை. "நான் வரும்போது என்ன எழுதிக் கொண்டிருந்தாய்.!"

"சிறுகதைப் போட்டிக்கு விளம்பரம் வந்திருக்கு. சில ஆயிரம் ரூபாய்கள் பரிசுத் தொகை. எதாவது எழுதுவம் எண்டு யோசிச்சன். அப்புறமா ஒரு கதை எழுதிக் கொண்டு இருக்கிறன்."

"பத்திரிகைக்கு எண்டால் நல்ல கருத்தா தானே எழுதவேணும். நீதான் சரியான கெட்டிக் காரி ஆச்சே! சரி என்ன கதை. நான் படிச்சுப் பார்க்கட்டுமா!" என்று கேட்டான்.

"கண்டிப்பா தாரன். கொஞ்சநேரம் சத்தம் போடாமல் இருந்தால் தாரன்."

"இது என்ன கோதாரி, ஏன் சும்மா இருக்கவேணும்."

"எழுதி முடிக்கவேணாமா!"

"அதெல்லாம் நான் போனப்பிறகு எழுதுமன்."

"ஒரே அவசரம்." முடிக்காத கதையின் சில பக்கங்களை அவன் கையில் கொடுத்தேன். அவன் வேகமாகப் படிக்க ஆரம்பித்தான்.

இறந்த காலம்...

கந்தகப்புழுதிக்குள் அவர்கள் இரவையும் பகலையும் இழந்தார்கள். வேட்டைக்காரர்களின் துப்பாக்கிக்கும் வேட்டை நாய்களின் மோப்பத்துக்கும் பலியாகிவிடப் போகின்றோமோ என்ற பயத்துடன் பலி எடுப்புக்களைப் புரிந்துகொண்டு முயல்களைப் போல பதுங்கியிருந்தார்கள். கடவுளே இல்லை இல்லை என்று சொல்லிக்கொண்டே வேண்டினார்கள். எப்போது அமைதி பிறக்கும் என்று காத்துக்கொண்டு இருந்தார்கள். வெட்டி எறியப்படும் தலைமுடி போலவோ நகம் போலவோ அவர்கள் உணர்வற்று இல்லை. அவர்களின் உயிர் எதிலோ அந்தரத்தில் ஊசலாடிக் கொண்டிருந்தது. ஒரு தாய் கடைசியாக இருந்த தண்ணீரையும் குடித்து விட்டு கையில் தவழ்ந்த தன் மகனுக்கு இரத்தத்தை கொடுத்தாள். அவன் செவிகள் குண்டுகளின் சத்தத்திற்குப் பலியாகிப்போய்விடுமோ என்று அஞ்சி அவன் காதுகளை பொத்திப் பொத்திப் பார்த்துக்கொண்டிருந்தாள். குண்டுகள் இப்போது அவர்களைவிட்டு ஒதுங்கிபோய் எங்கோ விழுந்தன. இறுகிய மூச்சு மெல்ல விடுபடுகையில் அவளுடன் இருந்த அண்டை வீட்டு மலர் வெளியில் எட்டிப்போய்ப் பார்த்தாள். பிறகு மறுபடியும் பதறி அரண்டபடி உள்ளே வந்து சொன்னாள். எல்லா வீடுகளும் பத்தி எரிகின்றன. சனங்கள் ஓடிக்கொண்டிருக்கின்றார்கள் மண்படைகள் சிவந்து கிடக்கின்றது.. அதன் மேல்... அவள் விக்கினாள், உடல் சிதறி உருக்குலைந்தவர்களை நான் பார்த்தேன். இந்தப் பதுங்குக்குழியும் பாதுகாப்பற்றது, என்றபடி வெளியில் ஓடினாள். எங்கோ ஓர் மரண ஓலம் கோரமாகக் கேட்டது. அந்தத் தாயும் வெளியில் வந்தாள். மலர் பின்னால் ஓடினாள். இன்றைக்குப் புறப் படலாம் என்ற கணவன் இன்னும் வந்து சேரவில்லை. அவனை நினைத்து ஒருபுறம் கலங்கிக்கொண்டு ஓடினாள். கண்ணில் பட்டவர் எல்லாம் அலறினார்கள். எதிர்வீட்டில் கேட்ட அலறல் குடல் புடுங்கி எறியப்பட்ட, தொடை துண்டாடப்பட்ட பெண்ணின் உடையது. அவள் இன்னும் உயிரோடு இருந்தாள். அவள் ஈனசுரத்தின் குரலை கடந்துபோனார்கள். சிலர் இறந்து கிடந்தவர்களின் நகைகளை உருவிக்கொண்டு எதிர்காலத்துக்கு உயிரைப் பிடித்தபடி ஓடிக்கொண்டிருந்தார்கள். அதற்குப்பிறகு அவர்கள் அதிகாலையில் சுளகுகளுடன் பற்றைக்குள் மலம்கழிக்கும் சுதந்திரத்தைப் பிறந்த மண்ணில் இழந்தார்கள்...

அவன் சிரித்த முகம் இப்போது புன்னகையை இழந்தது. சற்று நேரத்திலேயே அவனுக்குள் முழு மௌனம் உண்டாகி இருந்தது. இடையிடையே என்னைப் பார்த்தான். அவன் கண்கள் பனித்தன. அவன் சோக நாடகத்தையும் அதன் அவலத்தையும் உணர்ந்தவன் போல அந்த வெளிக்குள் மூழ்கி பிரமை பிடித்தவனாய் இருந்தான். இதெல்லாம் என் வாழ்க்கையோடு பின்னிப்பிணைந்தது என்பதை அவனுக்குச் சொல்லிக் காட்டவேண்டிய தேவையில்லை."

ஒரு பெருமூச்சு விட்டபடியே என்னிடம் திருப்பித் தந்தான். நீண்ட நேரம் எதுவும் பேசவில்லை.

நான் எழுதும் எல்லாவற்றையும் படித்துவிட்டு இப்படித்தான் இருப்பான்.

"உன் கையெழுத்து வர வர அழகாகிக் கொண்டே வருகின்றது." என்றான்.

"இருக்கின்ற கையால் தானே எழுதமுடியும். எல்லா நேரமும் உன்னையே எதிர் பார்த்துக் கொண்டு இருக்க முடியாதுதானே! அதுசரி கதை எப்படி இருக்கின்றது. எனக்குத்தானே பரிசு கிடைக்கும்." என்றபடி சிரித்தேன்.

"இதை நீ பரிசுக்காகவா எழுதினாய்!" அவன் அசட்டையாகச் சிரித்தான். "படித்தபோது நான் அழுதேன் தெரியுமா! என்னை அழச் செய்யாமல் உன்னால் ஒரு கதை கூட எழுதமுடியாதா! எல்லாவற்றையும் மறக்கத் தான் எல்லாரும் விரும்புகிறார்கள். நீ ஞாபகப்படுத்திக் கொண்டிருகின்றாய். இவற்றில் இருந்து நீ வெளியில் வரவேண்டும். வேறு எதையாவது எழுத்து அல்லது எழுதுவதை நிறுத்தினால் தான் கொஞ்ச நிம்மதி ஆவது உனக்குக் கிடைக்கும் என்று எத்தனை தடவை சொல்லி இருக்கின்றன்." என்றான்.

பதிலுக்கு நானும் ஒரு அசட்டுப் புன்னகையை உதிர்த்தேன். எதையும் கேட்கமாட்டேன் என்று அவனுக்குத் தெரியும். அன்றைக்கு கூட அத்தனை பேர் தடுத்தும் கேட்டகாமல் கொள்கையே குறியாக முன்னுக்குப் போய் நின்றிருக்கின்றேனே!

எனக்கு எழுதுவதுதான் நிம்மதி. எழுதித் தீர்க்க முடியாதது தான் இன்னும் நிறைந்து வழிகின்றது. எல்லாம் வலிகள்.

காயங்கள் ஆறாதவை.

பெண்களும், குழந்தைகளும், ஏன் ஒரு சந்ததியே சீரழிந்த கதை, சிதைந்த உடல், இரத்தம், காணாமல் போன உயிர்


பெருமூச்சு ஒன்றை வெளியே விட்டு புன்னகையை வரவழைத்துக் கொண்டே, உன் எழுத்துக்களுக்கு இந்தப் பரிசுகள் எல்லாம் சாதாரணம். எதிர்காலத்தில் நீ மிகச்சிறந்த எழுத்துப்புலி ஆவாய் என்றான்.

நான் பரிசுகளைப் பற்றி கவலைப் படுவதில்லை.

நான் மெல்லச் சிரித்தேன். இந்தப் பொய்களுக்காகவே அவனை எனக்குப் பிடிக்கிறது. என் விருப்பத்தைச் சொல்லிவிடலாம். ஏன் இப்போதே எழுந்து ஓடி முத்தம் கொடுக்கவும் விருப்பம் தான். ஆனால், அவன் என்ன நினைப்பானோ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பெண்ணிய அழகியல்

கொ.றொ.கொண்ஸ்ரன்ரைன்

பொதுவாகவே மெய்யில் துறையின் பல்வேறு கிளைத்துறைகளிலும் ஆண் மேலாதிக்கப் பார்வை ஓர் ஏற்றுக் கொள்ளப்பட்ட நியதியாக அமைந்திருப்பதனை பெண்ணியவாதிகள் கேள்விகளுக்குள்ளாக்கியுள்ளனர். அறுபது - எழுபதுகளில் இத்தகைய கருத்து முன்னெடுப்பு பெண்ணிய அழகியல் என்ற ஒரு புதிய அறிவுத்துறையின் வளர்ச்சிக்கு வித்திட்டது.

பெண்ணிய அழகியலானது கலைப்படைப்பிலும் விமர்சனத்திலும் கலைக்கொள்கையிலும் கலை ரசனையிலும் பால்நிலை செலுத்தும் செல்வாக்கினை படிப்படியாகக் கட்டுடைப்பு செய்துவருகிறது. பெண்ணிய அழகியல் கருத்துநிலையானது பால்நிலை, பால் நடத்தை, பால் அடையாளம் என்பவற்றைக் கலாசார பண்பாட்டு அம்சங்கள் எவ்வாறு பாதிக்கிறது, அதேவேளை இவற்றில் சாதி, மதம், சமூக அடையாளம், வரலாற்றுத்தடம் எவ்வகையான செல்வாக்கைச் செலுத்துகிறது என்பதனையும் தனது விசாரணைப் பரப்பிற்குள் உள்வாங்கியுள்ளது.

பெண்ணிய அழகியலின் நோக்கம் கலைக் கொள்கையை விசாலிப்பதும், கலைஞர்களின் நோக்கப்பரப்பில் புதிய பாய்ச்சல்களைக் கொணருவதும், கலைநுகர்வோரது நோக்கு திசையை மாற்றியமைப்பதும் ஆகும்.

## கலையும் பால்நிலை வேறுபாடும்

கலை என்ற பதத்திற்கு ஈடான கிரேக்க சொல் "கலை" என்ற சொல்லைவிட பரந்த பிரயோகத்தை உடையது. இந்த "Techne" என்ற பதம் மனித முயற்சியினால் உருவாக்கப்படும் பொருட்களிலிருந்து இயற்கையாகப் பெறப்படும் பொருட்களைப் பிரித்தறிய உதவியது.

பண்டைய காலத்தில் "Art" என்ற பதம் ஏறக்குறைய "இயற்கையை போலச் செய்யக்கூடிய" அல்லது பிரதிநிதித்துவப்படுத்தக் கூடிய (Mimetic) செயற்பாடுகளான ஓவியம், சிறபம் போன்றவற்றையும், கருத்துக்களை வெளிப்படுத்தும் நாடகம் போன்றவற்றையும், சுட்டவே பயன்படுத்தப்பட்டது. பின்னளில் கலையானது நுண்கலையாக பிரித்துப் பார்க்கப்பட்டதும் கலையும், கைவினைகளும் (Crafts) நிரந்தரமாகவே வேறுபடுத்தப் பட்டு பார்க்கப்படத் தொடங்கியது.

இந்தக் கலை கைவினை என்பவற்றில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைவினைகள் பெரும்பாலும் பெண்களுக்கு உரிய தாகவே பார்க்கப்படுகின்றது. தையல், பின்னல், கோலம் போடுதல், வீட்டு அலங்கார வேலைப்பாடுகள் எல்லாமே பெண்களுக்கான கைவினைகளாகவே சமூகத்தில் கணிக்கப்படுகிறது. இவை கலைத்துவம் குறைந்தவையாகவும் பொதுவாக தேவைகருதியே மேற்கொள்ளப்படும். அலங்கார வடிவங்களாக கருதப் படுகிறது. இவை எல்லாமே கலைத்துவ முக்கியத்துவ மற்றவையாகவும், எந்தவித அறிவியல் ஆய்வுக்கும் உட்படுத்தத் தகுதியற்ற இரண்டாம் பட்சமான கலைவடிவங்காளாகவே கருதப்படுகிறது.

ஆதிகாலம் தொட்டே பெண்களுக்கான கலை பயிலும் சந்தர்ப்பங்கள் மட்டுப்படுத்தப்பட்டதாகவே காணப்பட்டது. அத்துடன் பெண்களது கலைப்படைப்பு களின் முக்கியத்துவமும் ஆண்மேலாண்மை சமூகக் காரணிகளாலேயே நிர்ணயிக்கப்பட்டு வந்துள்ளது. பெண்களது கலையீடுபாடு இயற்கையுடன் சார்ந்ததாக வும், தமது வீடு, குடும்ப சூழலுடன் மட்டுப்படுத்தப் பட்டதாகவே இருந்து வந்துள்ளது.

கலை ஆண் நிலைப்பட்ட ஒரு ஊடகமாகவே இருந்து வருகிறது. பெண்களை நிர்வாணமாக சித்திரிக்கும் ஓவியங்களும் சிற்பங்களும் அழகினைப் பிரதிபலிப்பதாக கருதப்படுகிறது. இந்த ஓவியங்களை படைப்பவர்களும் அதனை நிர்ணயிப்பவர்களும் ஆண் களாகவே இருந்து வருகின்றனர். பெண் நிர்வாண ஓவியங்களை பெண் ஓவியர்கள் வரைவது ஏற்புடைய ஒன்றாக மேற்கில் கூட கருதப்படுவதில்லை.

கோஸ்மேயரின்(Korsmeyer) கருத்துப்படி கலை நுகர்வுக் கொள்கைகளில் ஆண்சார்பான உணர்வு களான பார்வைப்புலம், கேட்டல் போன்றவையே பிரதானமாகக் கருதப்படுகிறது. அதேவேளை பெண் களது சமூக செயற்பாடுகளுடன் தொடர்புடைய தொடுகை, மணம், சுவை போன்ற உணர்வுகள் இரண்டாம்பட்சமானவையாகவே கருதப்படுகிறது. இது கலையில் ஆண்மேலாண்மை உள்ளார்ந்து அமைந்திருப்பதையே காட்டுகிறது.

**படைப்பாற்றலும் மேதமையும்**

மேதமை என்பது கலைத்துறையிலும் சரி விஞ்ஞானத்திலும் சரி ஆண்நிலைப்பட்ட ஒரு சொல்லாகவே பாவிக்கப்பட்டு வருகிறது. இது பொது வழக்கில் மட்டுமன்றி காண்ட் (Kant), சோனோர் (Schoponhaner) போன்ற மெய்யியலாளர்களாலும் வலியுறுத்தப்பட்டுள்ளது. ஆரம்பகாலந் தொட்டே அறிவு பூர்வமான விடயங்களும் பகுத்தறிவு சார்ந்த விடயங்களும் ஆண்கள் சார்ந்த விடயங்கள் என்ற எண்ணம் அறிவுத்துறைகளில் புகுத்தப்பட்டு வந்துள்ளது.

பெண்களது படைப்பாற்றல் பற்றியும் அதன் வெளிப்பாடுகள் பற்றியும் பல்வேறுபட்ட கருத்து நிலைகள் பெண்ணிய அழகியலாளர் மத்தியிலே நிலவி வருகிறது. ஒரு சாரார் பெண்ணினது வாழ்க்கை அனுபவங்கள் பெண்ணினது வெளிப்பாட்டு வடிவத்தி லும் ஒரு தனித்துவமான பெண்ணிலைப்பட்ட பார்வை யினை முதன்மைப்படுத்துகிறது எனக் கருதுகின்றனர். வேறும் சிலர் சமூகத்திலுள்ள வர்க்கமுரண்பாடு, சாதி சமயம வேறுபாடுகளுடன் பார்கையில் பெண்ணியம் ஏற்படுத்தும் தாக்கம் வேறுபட்ட ஒரு பெண்ணிய படைப்பாற்றலுக்கான தளத்தை உருவாக்கும் சாத்தியப் பாட்டை இல்லாது செய்கிறது எனக் கருதுகின்றனர்.

**பெண்ணிய கலை இயக்கம்(Feminist art movement)**

பெண்ணியக் கலை இயக்கமானது பெண்ணியக் கருக்களை முன்வைத்து கலைபடைத்தல் செயற்பாட்டில் ஈடுபட்ட கலைஞர்களின் முனைப்பினால் 1960 களில் முன்னெடுக்கப்பட்ட ஒரு கலை செல்நெறியாகும்.

இந்த செல்நெறி பெண்ணிய அழகியலுடன் தொடர்புபட்டிருந்தாலும் இதனைப் பெண்ணிய அழகியலிலிருந்து வேறுபடுத்திப் பார்ப்பது முக்கிய மானது. காரணம் பெண்ணிய அழகியலானது மெய்யில் அடிப்படையில் கலையின் பொதுவான புரிதலைக் கேள்விக்குள்ளாக்கி ஒரு புதிய அழகியற் தளத்தினை உருவாக்க முனையும் ஒரு கருத்தியலாகும். இது பெண்ணிய கலைகளை மட்டும் ஆராயும் ஒரு குறுகிய வட்டத்திற்குள் சுருக்கிவிடக் கூடிய ஒரு அறிவியற் செயற்பாடு அல்ல.

ஓவியர் சூசன் லேசியின்(Susanee Lucy) கருத்துப்படி பெண்ணியம் கலையின் குறிக்கோளானது கலாசாரப் பண்பாட்டு மனநிலைகளை மாற்றியமைப்ப தும், வரன்முறையான ஒற்றைப் பார்வையை மாற்றியமைப்பதுவுமாகும்.

பெண்ணிய கலைஞர்கள் தமது படைப்புகளுக் கூடாக பெண்ணியக் கருத்துக்களை வலியுறுத்தினர். பெண்ணிய கலைஞர்கள் பெண்களுக்கு மறுக்கப் பட்டிருந்த உரிமைகளையும், பெண்களது முக்கியத்து வத்தையும் தமது கலைப்படைப்புகளில் வலியுறுத்தினர். இவர்கள் கலைப் பொருட்களை வெறும் கலை ரசனைக் கான பொருளாக மட்டும் பார்க்காது அவற்றை சமூக மாற்றத்திற்கான ஒரு ஊடகமாகவும் கருதினர். அறுபது களில் செல்வாக்குப் பெற்றிருந்த ஆணாதிக்க அரூப வெளிப்பாட்டு வாதத்தினை இவர்கள் வெறுத்தார்கள். இவற்றிற்கு மாற்றீடாக புதிய கருத்துக்களையும் அவற்றை ஆதரித்த ஓவியக்கூடங்களையும் முன்னிலைப்படுத்தினர்.

பெண்ணிய கலைஞர்கள் புதிய படைப்புச் சாதனங்களையும், புதிய வெளிப்பாட்டு வடிவங்களையும் நாடினார்கள். இவர்கள் துணிவானவர்கள். அலங்காரப் பொருட்கள் போன்ற பொருட்களையும் நாளாந்தம் வீட்டில் பாவிக்கும் பொருட்களையும் தமது கலைப் படைப்புகளில் பாவித்தார்கள். அதேவேளை நிகழ்த்துகை கலை(Performance Art) வீடியோ போன்ற வெளிப்பாட்டு வடிவங்களையும் அதிகம் பாவித்தார்கள். இந்த புதிய சாதனங்கள் வாயிலாக இவர்களுக்கு தமது செய்திகளை எளிதாக வெளிப்படுத்தக் கூடியதாயிற்று.

**பெண்ணிய அழகியலின் முனைப்புகள்**

பெண்களின் கலைப்படைப்புகள் ஆண்களது கலைப்படைப்புகளிலிருந்து வித்தியாசமானவை எனப் பெண்ணிய அழகியல் கூறவில்லை. பெண்களின் கலையுணர்வு வித்தியாசமானது எனவும் அது கூற வில்லை. பெண்களினது கலைப்படைப்புகள் ஆண்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களது கலைப்படைப்புகளிலிருந்து வேறுபட்டதல்ல. அதேவேளை பெண்களது கலைப்படைப்புகள் எல்லாவற்றையும் ஒரு பிரிவிற்குள் அடக்கிவிட முடியாது. பால்நிலைப்பட்ட நுகர்வு காரணமாகவே கலைநுகர்வு தரும் அனுபவமானது ஆண்களுக்கும் பெண்களுக்குமிடையில் வேறுபடுவதாக பெண்ணிய அழகியல் கருதுகிறது. இதுவே பெண்ணிய அழகியலின் தொடக்கப்புள்ளி.

கலை நுகர்வோனை ஒரு பொதுமைப்பாடெய்திய நுகர்வோனாகக் கருதியே மேலைத்தேய அழகியல் உருவாக்கப்பட்டுள்ளது. நுகர்வோனது சமூகப்பொருளாதார சார்பு நிலைக்கேற்ப கலையனுபவமும் வேறுபடுகின்றது. ஆக பெண்ணிய அழகியலின் படி கலையனுபவமானது பால்நிலையுடனும் வேறுபடக்கூடியது. இந்த வித்தியாசம் என்ன? அது எப்படி கலையாக்கத்தையும் கலைநுகர்வையும் பாதிக்கிறது. என்பதைப் பற்றிய அறிமுறையே பெண்ணிய அழகியலாகும்.

**அழகியல் நியமங்கள் மீதான பெண்ணிய அழகியலின் விமர்சனம்**

உருவம் ஒரு கலைப்படைப்புக்கு மிகவும் முக்கியமானதாகும். இந்த உருவம் கலை ரசனைக்கான அடிப்படையாகக் கொள்ளப்படுகிறது. உருவத்தைக் கொண்டே கலை ரசனையின் அடிப் படைகள் தீர்மானிக்கப்படுவதாக பல மெய்யியலாளர்கள் கருதினார்கள். தற்காலக் கலைக் கொள்கைகளில் உருவம் முக்கிய இடத்தைப் பெறாவிடினும் அழகியல் வரலாற்றில் உருவமானது ஒரு முக்கிய நியமமாகக் கருதப்படுகிறது.

இருபதாம் நூற்றாண்டில் ஒரு கலையில் அதன் பயன்பாடு, வரலாற்று கலாசார பின்புலம் என்பவற்றை விட அது நுகரப்படுவதற்கு அதன் உருவம் வாயிலாக ஏற்படும் அழகியல் தாக்கம் தான் அடிப்படையானது என உணரப்பட்டுள்ளது.

இந்த உருவவாத அணுகுமுறையிலிருந்து பெண்ணிய அழகியலானது கலைப்படைப்பை அதன் சமூக அரசியல் பயன்பாட்டுத்தளத்தில் வைத்து நோக்குவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது. ஒரு கலைப்பொருள் சார்ந்து நிற்கும் பின்புலத்தினை நிராகரிப்பதன் மூலம் அல்லது கணக்கிலெடுக்காத பட்சத்தில் அக்கலைப் பொருளின் கலாசார அரசியல் முக்கியத்துவம் இழக்கப்படுகிறது. ஒரு கலைப் பொருளானது அதனை உருவாக்குபவர், அது உருவான பின்புலத்துடன் பார்க்கப்படுகையில் அதற்கு ஒரு புதிய பரிமாணம் உருவாகிறது. இதன் மூலம் ஒருவருக்கு கலைப் பொருளின் கலை வரலாற்று முக்கியத்துவத்தை விடவும் அதன் அன்றாட வாழ்வியலின் பங்கினை உணர முடிகிறது.

பெண்ணிய அழகியலாளர் ஒரு கலைப் பொருளை அது உருவாகிய பின்புலத்தில் தான் வைத்துப் பார்க்க விரும்புகின்றார்கள். ஒரு கலைப் பொருளை அதற்கான சூழலிலிருந்து பெயர்த்து ஒரு காட்சிக் கூடத்தில் காட்சிப்படுத்துவதை அவர்கள் ஆதாரிக்கவில்லை. கலைப் பொருட்கள் காட்சிப் படுத்தப்படும் பட்சத்தில் அக்கலைப் பொருளுடன் தொடர்புடைய கலாசார அம்சங்களைஅத்துடன் இணைத்து காட்சிப்படுத்துவதால் அதன் தக்க பின்புலம் உருவாக்கப்படலாம். பெண்ணிய அழகியலாளர் பார்வையாளருடன் ஊடாட்டத்தை அதிகரிக்கும் வகையில் பின்புலத்தை அமைப்பதையும், பார்வையாளருடன் நேரடியாக ஊடாடக்கூடிய நிகழ்த்துகைகலை(Performance art) போன்றவற்றையும் உக்கப்படுத்தினர். இவை கலைப் படைப்புகளுக்கான கலாசாரப் பின்புலத்தை உருவாக்குகிறது.

**பெண்ணிய அழகியலும் ஈடுபாடற்ற (Disinterestness) கலாரசனையும்**

இமானுவேல் கான்டினது கருத்துப்படி கலை நுகர்வானது கலைத்துவ அழகு(Beauty) எப்படி பெறப்படுகிறது அல்லது பரிமாறப்படுகிறது என்பதிலே தங்கியுள்ளது. கலைத்துவ அழகு ஈடுபாடற்ற நுகர்வாகவும், சகலருக்கும் பொதுவானதான தன்மையினதாகவும்(Universal) கட்டாயமானதாகவும்(necessary), நோக்கமற்ற நோக்குடையதாகவும்(Purposive with out a purpose) அமைய வேண்டும் என கான்ட் கருதினார். இதிலே ஈடுபாடற்ற நுகர்வின் அடித்தளமாக உருவம் அமைவதனை நாம் நோக்கலாம்.

இந்த ஈடுபாடற்ற நுகர்வு உடல் இச்சைகளின் வாயிலாக ஏற்படும் ஈடுபாடுள்ள நுகர்வுகளான பசி, காமம் போன்றதல்ல. இந்த இச்சைகளைப் போலல்லாது எந்த ஈடுபாடுமற்ற நிலையில் கலைப்பொருள் ஏற்படுத்தும் கலை இன்பம்(aesthetic pleasure) தான் கலையின் அடிநாதம். இது கலைப்பொருளுக்கும் நுகர்வோருக்குமிடையில் ஓர் "உளநலை இடைவெளியை" (Psychical distance) உருவாக்குவதாக எட்வட் புலோ(Edward Bullough) கருதுகிறார். உதாரணமாக ஒரு ஓவியம் மீதான கவர்ச்சி அதில் காணப்படும் உருவக் கூறுகளான வர்ணம், ரேகை, வடிவம் என்பவற்றினாலேயே ஏற்படுகிறது. இந்த அடிப்படைக்கூறுகள் ஏற்படுத்தும் அழகியல் தாக்கத்திலேயே ஓவிய ரசனை ஏற்படுகிறதே அன்றி அந்த ஓவியத்தின் உள்ளடக்கம் ஏற்படுத்தும் தாக்கத்தினால் அல்ல. அதாவது ஓவிய உள்ளடக்கத்திற்கு அந்நியப்பட்டு ஓவிய ரசனை அமைய வேண்டும். அப்பொழுதுதான் அந்த ஓவியம் ஒரு கலைப்படைப்பாக கருதப்பட முடியும்.

இதனடியாக ஒரு பொருள் கலைப்பொருளாகக் கருதப்படுவதற்கு அது அதன்பின்புலத்துடன் தொடர்பில்லாது அணுகப்படக் கூடியதாக இருக்க வேண்டும். அதற்காக கலைப்பொருள் எந்தவிதமான நடைமுறைப் பயன்பாடும் அற்றதாக இருக்க வேண்டும் எனக் கருதிவிடமுடியாது. இருப்பினும் கலை நுகர்ச்சியானது இந்த நடைமுறை பயன்பாடு சார்ந்ததாக இருக்கக் கூடாது. இந்த அடிப்படைகளை வைத்து நோக்கும் பொழுது பெண்கள் பெருமளவில் ஈடுபடும் கைவினைகளான தையல், அலங்கார அமைப்புகள், மலர் அலங்காரம் எல்லாம் கலைப்பொருட்களாக கருதப்படாது கைவினைகளாக கலைப்பொருள் என்ற தரத்தை எட்டத் தகுதி அற்றவை எனப் புறந்தள்ளப்படுகிறது.

இந்த ஈடுபாடற்ற நுகர்வு என்ற கருத்தாக்கம் பல பெண்ணிய அழகியல் வாதிகளால் கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ளது. சில பெண்ணிய அழகியல்வாதிகள் இதனை


பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிராகரித்துள்ளனர். பெகி பிரான்ட் (Peggy leglin Brand) போன்ற சிலர் ஈடுபாடற்ற நுகர்வும் ஈடுபாடுள்ள நுகர்வும் இணையும் போதுதான் பூரணமான கலைநுகர்வு சாத்தியப்படுகிறது எனக் கருதுகின்றனர்.

பால்நிலையானது கலை நுகர்விற்கு முக்கியமானது என்பதனை ஏற்றுக் கொள்வதன் மூலம் நாம் ஒரு புதிய அழகியல் அணுகுமுறையின் தேவையினை ஏற்றுக் கொள்கிறோம். அத்துடன் அது கலையில் உருவம், ஈடுபாடற்ற நுகர்வு என்ற கருத்தாக்கங்களிலுள்ள பலவீனத்தையும் சுட்டுகிறது.



Marine Abramovic


பெண்ணிய அழகியலானது கலை படைக்கப்படும் பின்புலத்தை முக்கியத்துவப்படுத்துகிறது.

**ஆண்நிலை நோக்கு (Male Gage)**

கட்புலக் கலைகளிலே பெண்ணுருவமானது ஆண்நிலைப்பட்ட பார்வைப் பொருளாகவே பொதுவாக சித்திரிக்கப்படுவது நாம் அறிந்ததே. இந்தப்பெண் உருவங்கள் பெருமளவில் ஆண் கலைஞர்களாலேயே உருவாக்கப்படுகிறது இதுவும் பெண்ணிய அழகியலிலே ஒரு முக்கிய விடயமாகக் கருதப்படுகிறது.

பெண்கள் சமூகத்திலே வெவ்வேறு சூழ்நிலைகளில் எவ்வாறு ஆண்களால் நோக்கப்படுகிறார்கள் என்பது பற்றிய தன் ஆய்வினை ஜோன் பேஜர் (Jhon Berger) 70 களின் ஆரம்பத்தில் ஒரு நூலாக வெளியிட்டார். இந்த ஆண் நிலைப்பட்ட நோக்கினை அல்லது பார்வையை நாம் ஓவிய வரலாற்றிலே துல்லியமாகக் காணலாம். பெண்களினது நிர்வாண உருவங்களும் அவர்களது பல்வேறுபட்ட நிலைகளும் "ஈடுபாடற்ற" கலை நுகர்விற்கான ஒரு விடயமாக இருந்து வருகிறது. இந்த பெண்கள் சார்ந்த கலைப் படைப்புகள் பெருமளவில் ஆண்கலைஞர்களாலேயே படைக்கப்படுகிறது. இவை பொதுவில் ஆண்நிலை நுகர் விற்காக அல்லது ஆண்நிலை நோக்கிலிருந்தே படைக்கப்படுகிறது. இதுவே நாம் திரைப் படங்களிலும் விளம்பரங்களிலும் நாளாந்தம் காணும் நோக்கு நிலையாக அமைகிறது.

"Male Gage" என்பது லோரா முல்வேயின்(Laura Mulvey) திரைப்படம் சம்பந்தமான ஆய்விலேயே முதல் முறை பாவிக்கப்பட்ட ஒரு சொற்றொடராகும். முல்வே திரைப்படத்தில் பாவிக்கப்படும் கமரா கோணங்களும் படச்சட்டங்களும் எப்படியாக பெண்ணுருவம் ஆணுக்கான ஒரு நுகர்வுப் பொருளாக காட்சிப்படுத்தப் படுகிறது என்பதைப் பற்றி ஆராய்ந்தார். இது பாரம்பரியமாக பெண்ணின் உருவம் பெண்ணிய அசைவுகள் பற்றிய "எண்ணங்களின் அடிப்படையில் பெண்ணின் பெண்மையை" வெளிக்கொணர/காட்சிப்படுத்த பாவிக்கப்படும் உத்திகளாக நாம் இனங் காணலாம். இவற்றினால் பெண் ஒரு பதுமையான ஒரு பார்வைப் பொருளாக எந்தவித செயலூக்கமுமற்ற ஒரு காட்சிப் பொருளாக கட்டமைக்கப்படுகிறாள். ஆண் செயலூக்கமிக்க (active) பார்வையாளனாக உருவாக்கப்படுகிறான். இந்த நோக்க நிலைக்கு இசைவாக ஆண்களும் பெண்களும் பயிற்றப் படுகிறார்கள்.



Karen Finley

ஆண்களாயினும் பெண்களாயினும் பெண்களைப் பார்க்கும் பொழுது எதைப்பார்கிறார்கள் எதற்காகப் பார்க்கிறார்கள் என்பதெல்லாம் நாம் எப்படி உலகைப் பார்க்கப் பழக்கப்படுத்தப்பட்டுள்ளோம் என்பதிலேயே தங்கியுள்ளது.

இந்த ஆண் நிலை நோக்கு ஏற்படுத்தும் பால்நிலை வேறுபாடு பெண்ணிய அழகியலுக்கு அடித்தளமாக அமையும் இன்னொரு கருத்தாக்கவாதம்.

**கலையில் உடல் சார்ந்த அழகியல்**

கலைஞன் தனது உடலை ஊடகமாகப் பாவித்து கலை வெளிப்பாட்டைச் செய்வது பல்வேறு கட்புலக் கலைகளுக்கும் பொதுவான ஒரு விடயமாகும்.

உடலானது கலாதிகாலமாக பயன்படும் பெண்ணுருவத்தைப் போல ஒரு காட்சிப் பொருளாக அன்றி வெவ்வேறு கலாசாரங்களினதும் அரசியல் நிலைப்பாடுகளினதும் அடையாளப்படுத்துகைக்காகவும் பாவிக்கப்படுகிறது. தற்கால பெண்ணிய கருத்துகளின் படி உடலானது வரலாற்று சூழ்நிலைகளையும், இனத்துவ அடையாளத்தையும், சமூக அந்தஸ்து போன்றவற்றை விமர்சிக்கும் ஒரு ஊடகமாகவும் பயன்படுகிறது. இந்த வகையில் நிகழ்த்துகைக் கலை(Performance art) உடலின் அரசியலை மிகவும் கச்சிதமாக பாவிக்கும் ஒரு கலை வடிவமாக உருவாகியுள்ளது. குறிப்பாக 60களிலும் 70 களிலும் பெண்ணிய கருத்துக்களை வெளிப்படுத்த நிகழ்த்துகைக் கலை ஒரு முக்கிய கலை வடிவமாகச் செயற்பட்டது.

நிகழ்த்துகைக் கலையிலே பெண்ணுட லானது வரன்முறையாக ஓவிய வரலாற்றிலே பெண்ணுடல் பெற்று வந்த "நியம அழகு" என்ற நிலையைக் கேள்விக் குள்ளாக்கியுள்ளது. இதற்கு ஒரு சிறந்த உதாரணமாக சோனியா குரானாவின் (Sonai Kurana) "Bird"(பறவை) என்ற நிகழ்த்துகைகளைக் குறிப்பிடலாம். இதிலே அவரது உடலமைப்பும், வெள்ளை யரல்லாத பெண்ணுருவ பாவனையும் ஒரு அதிர்ச்சி வைத்தியமாகவே தொழிற்படு கிறது. பெண்ணுடல் மட்டுமல்லாது பெண் சம்பந்தப்பட்ட சமூக கட்டுமானங்கள் பலவற்றையும் நிகழ்த்துகைக்கலை மூலம் பெண்ணியக் கலைஞர்கள் கேள்விகளுக்குள்ளாக்கியுள்ளனர். உதாரணமாக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரன் பின்லே(Karen Finley) பெண்களின் பாலியல் துஷ்பிரயோகத்தை மையப்படுத்தி தனது உடலில் உணவுப் பதார்த்தங்களையும் இரத்தத்தையும் பூசி ஒரு நிகழ்வை (We Keep our victims ready) நிகழ்த்திக் காட்டினார். மரீனா அபரபகிச்(Marine Abramovic) தனது உடலை கத்தியால் கீறியும் சவுக்கால் அடித்தும் சித்திரவதை செய்து (Thomsa lips) ஒரு நிகழ்வை நிகழ்த்தினார். இந்த நிகழ்வை சகிக்க முடியாத பார்வையாளர் இடையில் புகுந்து அதனை நிறுத்தி அவருக்கு முதலுதவி அளித்தனர்.

இத்தகைய அணுகுமுறைகள் பெண்ணிய அழகியலுக்கு மட்டுமன்றி பொதுவான அழகியலுக்கும் ஒரு புதியபாதையை திறந்துள்ளது. இது இதுவரை காலமும் உவகையளிக்கும் அனுபவங்களை மையப் படுத்தியிருந்த அழகியல் வெறுக்கத்தக்க(Displeasure) அனுபவங்களின் அடியாகவும் எழுவதை காட்டி நிற்கின்றன. இது ஒருவகையில் "ஆண் நிலைப்பட்ட நோக்கை" மாற்றியமைக்கவே அழகியலில் புகுத்தப் பட்ட ஒரு புதிய கோணமாகத் தொழிற்படுகின்றது.

புறவயமான தோற்றப்பாட்டை மையப்படுத்திய கலைப்படைப்புகளும், இது வரையில் தனிப்பட்ட, உள்ளார்ந்த, பகிர்ந்து கொள்ளப்பட முடியாதவை எனக் கருதப்பட்ட பலதரப்பட்ட விடயங்களும் நிகழ்த்துகைக் கலையில் முக்கிய விடயங்களாக பாவிக்கப்பட்டன. உதாரணமாக மாதவிலக்கு சம்பந்தப்பட்ட அல்லது கருத்தரிப்பு/குழந்தை பிறப்புடன் சம்பந்தப்பட்ட பல விடயங்கள் சுய அனுபவ வெளிப்பாடாக பெண்ணிய கலைப்படைப்புகளில் பாவிக்கப்பட்டுள்ளன.

தற்கால நிகழ்த்துகைக்கலை, நிர்மாணக் கலை (Installation Art), விடியோ கலை(Video art), ஊடகக் கலை(Media Art) என்பவற்றில் பெண்ணிய கலைஞர் களால் முன்னெடுக்கப்படும் மாற்றங்கள் அழகியலில் ஒரு தள மாற்ற அணுகுமுறையினைக் கோரி நிற்கின்றன.

**நாளாந்த வாழ்வியலின் அழகியல்**

பெண்ணிய அழகியலானது எமது கவனத்தை கலையுடன் மட்டும் குறுக்கிக் கொள்ளாது அதற்கு அப்பாலும் வியாபிக்கச் செய்கிறது. இது உடலுக்கும் உடல் சார்ந்த உணர்வுகளுக்கும் நாளாந்த வாழ்க்கை யில் வரும் கலை உணர்வு சார்ந்த முயற்சிகளுக்கும் புதிய அர்த்தத்தினைக் கோரி நிற்கிறது.

பெண்கள் அநேகமாக ஈடுபடும் வீட்டுச் சூழல் சார்ந்த அலங்கார/அழகியல் நடவடிக்கைகள், கை வினைக் கலைகள், வீட்டுத் தோட்டம் போன்றவற்றை முக்கியமான அழகியல் முயற்சிகளைக் காட்டுவதோ "நாளாந்த வாழ்வியலின் அழகியல்"(everyday aesthetics). "நாளாந்த வாழ்வியலின் அழகியல்" குடும்ப வாழ்வு, குடும்ப உறவு என்பவற்றில் இளையோடி நிற்கும் அழகியற் கூறுகளை இணைத்து மொத்தமாகவாழ்வின் அழகியலை முதன்மைப்படுத்தும் ஒரு அறிமுறையாக விருத்தியடைந்து வருகிறது. இதுவும் பெண்ணிய அழகியலின் முக்கிய கவனிப்புப் பெற்றுள்ளது.

பெண்ணிய அழகியல் என்பது பெண்களுக் கான அழகியல் அல்ல. அதுபெண்களது கலைப் படைப்புகளுக்கான ஒரு அழகியலுமல்ல. பெண்ணிய அழகியலானது இதுகாலும் ஆண் நிலைப்பட்டு நோக்கப்பட்டு வந்த பொதுவான அழகியலுக்கு ஒரு புதிய திருப்பத்தை கொண்டு வந்துள்ள அல்லது ஒரு புதிய தரிசனத்தைக் காட்டிநிற்கின்ற, அத்துடன் "பொதுவான அழகியலின்" நோக்குப் பரப்பினை விசாலிக்கக் கோரி நிற்கும் ஒரு புதிய அழகியல் செல்நெறியாக நாம் பெண்ணிய அழகியலைக் கருதலாம்.

---

# கனவே கலையாதே..!!!

**ஜெயம் நதியன்**



எறும்பூர தேயும் பாறை போல் – மனம்
அன்பினில் அமிழ,
போர் முனையில் பெற்றவள் நிற்கையில் – பாசம்
எனும் தூதுவன் சமாதான உடன்படிக்கை செய்துகொள்ள,
என் ராணி நீட்டோலையில் நிலவரம் கேட்க, ஆசையை
நிராயுதபாணியாக்கிய என் வீரத்தை எங்ஙனம் உரைப்பேன்...!!!

தனிமை எனும் நெடுங்காட்டில் கற்பனை மிருகத்தில் – சவாரி
செய்து நான் வாழ்ந்துகொண்டு உன்படைத் தளபதி என்று
எங்ஙனம் உரைப்பேன்...!!!
கட்டறுத்தோடும் காளை போல முட்டிமோதும்
வாலிப மனத்தின் சிறகை, காகித வெளியில்
பறக்க விடும் என்தனிமை,
கற்பனை விருட்சத்தை உரமூட்டட்டும்...!!!


கழிந்து விட்ட சக்கரையில் காதல் கொள்ளும் கட்டெறும்புபோல்
நீண்டே செல்லும் பேருந்து பயணத்தின்
யன்னலோர காற்றோடு கரைந்தே போகும் – என்
கனவுகள் கலையாதிருந்திருப்பின், மகன் அப்பிள் போனும்,
மகள் கொறிகீறீமும் கேட்டிருப்பாள்.
எத்தனை சக்காளத்திகளோடுதான் என் மனையாள்
முட்டிமோதியிருப்பாளோ....!!!
கனவுகள் கலைந்து போவது தானே நியதி,
அதுகூட சாதகம் தான் எனக்கு.
மீண்டும் நிலாப்பழம் பறிக்கும்
.........என்கனவு...!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகற்கனவு

மலரன்னை



பத்து வருடங்களின் பின் இன்று மண்ணில் கால் பதிக்கப்போகிறேன். என்னுள்ளத்தில் இனம் புரியாத கிளுகிளுப்பு. கட்டுநாயக்காவில் வந்து இறங்கியதும் அங்கு அப்பா வாகனத்துடன் வந்து எனக்காக காத்திருந்தார். பொது இடம் என்பதைக் கூட கணக்கெடுக்காது ஓடிப்போய் அப்பாவை கட்டி யணைத்துக் கொண்டேன். என் செய்கையால் அப்பா வும் நெகிழ்ந்து போனார் என்பதை அவரது கண்களில் துளிர்ந்த கண்ணீர் எனக்கு காட்டிக் கொடுத்து விட்டது.

ஒரு விநாடியும் தாமதிக்காமல் உடனேயே வீடு போய்ச் சேர்ந்துவிட வேண்டும் என்ற அங்கலாய்ப்பு என் மனதை உந்தித்தள்ள, நாங்கள் புறப்பட்டு விட்டோம். இரண்டொரு தரம் அப்பா என்னிடம் பேச்சு கொடுத்துப்பார்த்தார். என் ஆழ் மனத்தை அது உறுத்தியபோதும் என்னால் பதிலளிக்க முடியவில்லை என் மனத்தில் எதிர்பார்ப்புடன் கூடிய கற்பனைகளின் சஞ்சரிப்பு என்னை மற்றுமோர் கற்பனை உலகத்திற்கு கொண்டு போய் விட்டது.

நான் பதினெட்டு வயது வாலிபனாக வளர்ந்து நின்ற போதும் எனக்கு உணவு ஊட்டி விடும் அம்மா. அம்மாவின் கையினால் சாப்பிடும் உணவுதான் எத்தனை சுவையாக இருக்கும். ஊரில் அம்மாவுடன் இருந்த போது எனக்கு அது புரியவில்லை. அம்மாவைப் பிரிந்து போனாபின் தான் அந்த அருமை புரிந்தது. ஏனோ அம்மாவுக்கு நான் என்றும் குழந்தை என்ற நினைப்பு தான் மேலோங்கி இருந்தது. அயலவர்கள்... ஏன் என் அருமைத்தங்கை கூட என்னை ஏளனம் செய் வாள். நான் எதற்கும் மசிய மாட்டேன். இரவு வேளை களில் எனக்குப் பசிக்கவில்லை என்று பிகு பண்ணிய வாறு படுக்கைக்கு போய் விடுவேன். அம்மா என்னை பசி வயிற்றோடு படுக்க விடமாட்டாள். என்னை எழுப்பி வந்து தன் கையினால் பிசைந்து ஊட்டி விடுவாள்.

" இது என்ன விநோதமான பழக்கம்" அப்பா அம்மாவைக் கடிந்து கொள்வார். ஆனால் அவரே சில சமயங்களில் "தம்பி ரெண்டு வாய் சாப்பிட்டானோ?" என்று கேட்பது படுக்கையிலிருக்கும் என் காதுகளில் வந்து மோதும். அத்தனை செல்லப்பிள்ளையான எனக்கும் வீட்டை விட்டு பிரிந்து போக ஒரு சந்தர்ப்பம் அமைந்தது.

எங்களுடைய பூமியில் போர் உக்கிரமடைந்திருந்த வேளையில் எனது ஆருயிர் நண்பன் கண்ணன் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி சாவடைந்த போது எங்கள் வீட்டில் பெரும் பதற்றநிலை உருவாகிவிட்டது. எனக்கு வீட்டுச் சூழலை விட்டுப்பிரிய துளியளவிலும் இஷ்டமில்லை. ஆனால் அப்பாவும் அம்மாவும் என்னை அங்கு வைத்திருக்க பயந்து நடுங்கினார்கள். எதுவித பாவமும் அறியாத நான் அப்பாவுடன் கொழும்பிற்கு பயணமாகினேன். அத்துடன் எதுவித பொறுப்புமற்றுத் திரிந்த எனது சொகுசு வாழ்க்கைக்கும் முற்றுப்புள்ளி வைக்கப்பட்டு விட்டது.

என் மனதில் புதைந்து வைத்திருந்த மற்றுமொரு விடயத்தையும் நான் இங்கு சொல்லித்தான் ஆக வேண்டும். என் தங்கை லதாவுடன் பக்கத்து வீட்டு பாமா அடிக்கடி எங்கள் வீட்டிற்கு வந்துபோவாள். ஒரு நாள் மாலை மங்கிக் கொண்டிருந்த வேளை. நான் லதாவை பயங் காட்டுவதற் காக வாசற்கதவின் பின் ஒளிந்திருந்தேன். ஏற்கனவே லதா கிணற்றடிக்கு முகம் கழுவுவதற்காய் போயிருந்ததை அவதானித்து விட்டேன். லதா சரியான பயந்தாங் கொள்ளி. அடிக்கடி நான் அவளை இப்படிச் சீண்டுவது வழக்கம். அன்றும் அப்படித்தான். அவள் வந்து கொண்டிருப்பதை கதவிடுக்கினூடு அவதானித்த நான், சட்டென அவள்முன் பாய்ந்து கண்களைப் பொத்தினேன். லதா சத்தம் போட்டு ஆர்ப்பாட்டம் பண்ணாததால் எனக்கு சந்தேகம் ஏற்பட்டது. உற்றுப்பார்த்தால் அது பக்கத்து வீட்டு பாமா.

"ஸொறி. ஸொறி. நான் லதா என்று நினைச்சிட்டன்."

எனக்கு தூக்கி வாரிப்போட நா மட்டும் குழறியது.

"பறவாயில்ல" என்று மெதுவாகச் சொல்லி விட்டு அவள் லதாவைத் தேடிப்போய்விட்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கு மனதில் ஒரே குழப்பம். என்னையறியாமலே எனக்கு அவள் மீது ஒரு இது உருவாகுவதை என்னால் உணர முடிந்தது. அவள் அப்படியொன்றும் கவர்ச்சியானவள் என்று கூறிவிட முடியாது. சுருக்கமாக சொல்லப்போனால் அவள் ஒரு ஏழைக்குடும்பத்துப் பெண். அவளுடைய அப்பா அன்றாடம் கூலிவேலை செய்து தான் குடும்பத்தை காப்பாற்றுகிறார். எந்தக் காரணியால் ஈர்க்கப்பட்டேனோ தெரியவில்லை அவளது நினைவுகளால் என் நெஞ்சம் நிறைந்து கிடந்தது. தவிர எனக்கும் அது இரண்டும் கெட்டான் வயது.

அதற்குப்பின் அவளைச் சந்திக்க நேரும் போது என்னையறியாமலே என் உதடுகள் மலரும். அவளும் பதிலுக்கு புன்னகைத்துவிட்டுப்போவாள். அவளைப் பற்றிய இனிய கற்பனைகளை நான் வளர்த்துக் கொள்ள முற்பட்ட போது... பிரிவு எங்களிருவருக்குமிடையில் ஒரு தடுப்புச்சுவராக எழும்பி விட்டது. போகும் போது அவளிடம் சொல்லிக் கொண்டு போக வேண்டுமென மனம் விரும்பிய போதும் அது சாத்தியமாகவில்லை.

"ரூறிஸ்ற்" விசாவில் சிங்கப்பூர் போன நான் மலேசியாவில் இருந்த மாமாவின் உதவியால் அவரது நண்பர் ஒருவர் ஸ்பொன்சர் பண்ணி என்னை மெல்போர் வரை கொண்டு சென்று விட்டது. அங்கு நான் ஒரு கார்க்கம்பனியில் வேலை செய்கிறேன். எனக்கு முன்னரே அங்கு போனவர்கள் கூட இன்னும் நிரந்தர வேலை கிடையாமல் அலையும் போது நான் அங்கு நிலை கொள்ளுமளவிற்கு கிடைத்தது பெரும் பேறுதான். என்னால் முடிந்தளவு உழைத்து வீட்டிற்கு அனுப்புகிறேன். இப்போது கூட தங்கை லதாவின் திருமணத்தில் பங்கு பற்றுவதற்காகத்தான் யாழ்ப்பாணத்தை நோக்கி என் பயணம் தொடருகிறது.

வீட்டில் உள்ள அனைவருக்கும் பரிசுப் பொருட்களை பார்த்துப்பார்த்து வாங்கினேன். கூடவே பாமாவுக்கும் ஒரு விலையுயர்ந்த கைக்கடிகாரம் அவள் கையில் கட்டியிருக்கும் போதெல்லாம் என் நினைவில் திளைக்க வேண்டும். ஏழைகளான அவர்கள் இப்படியொரு கடிகாரத்தை வாங்கியிருக்கவே முடியாது. எனது தங்கை லதா ஏ.எல். லுடன் படிப்பை நிறுத்தி விட்டாள். பாமாவும் ஏ.எல். படித்து விட்டு ஏதாவது வேலைக்குப் போய்க் கொண்டிருப்பாளோ... மனம் அலை பாய்கிறது. நான் அதை அடக்கி வைக்கிறேன். இன்று நேரில் போய் எல்லாவற்றையும் அறியத்தானே போகிறாய் அதற்குள் என்ன அவசரமான கற்பனை. கடிவாளத்தை இறுக்கிப் பிடித்து நிறுத்திவிட்டேன்.

நாங்கள் பணித்த வாகனம் ஒரு குலுக்கலுடன் நிற்க. அலையெனப்புரண்ட என் நினைவுகளுக்கும் திடீரென ஒரு முற்றுப்புள்ளி குறுக்கறுத்து விடுகிறது. அப்பா என்னை அழைக்கிறார்.

"திரு! வா ராசா நாங்கள் போய் ஏதாவது சாப்பிட்டுவிட்டு வரலாம். இது நல்ல றெஸ்றோரன்ற்".

பதிலேதும் சொல்லாமல் நானும் இறங்கி அவருடன் போகிறேன். அப்பாவும் டிறைவரும் தோசை இடியப்பம் என வெளுத்துக் கட்டுகிறார்கள். நான் ஒரு வடையை மட்டும் எடுத்துக் கொண்டு சூடான தேநீருக்காக காத்திருக்கிறேன். அப்பா என்னையும் தோசை சாப்பிடுமாறு வற்புறுத்திய போது நான் அவரை சமாளித்து விட்டேன்.

"வீட்டுக்குப் போனதும் அம்மாவின் கையால் சாப்பிடப்போகிறேன் தானே. அம்மாவின் சாப்பாடு சாப்பிட்டு எவ்வளவு கால மாச்சுது"

என் மன ஏக்கம் புரிந்ததோ என்னவோ... அப்பா அத்துடன் நிறுத்திக் கொண்டார். வயிற்றை நிரப்பிக் கொண்டு வந்தபின் மீண்டும் எங்கள் பயணம் தொடர்ந்தது. நான் போகும் போது குண்டும் குழியுமாகக் கிடந்த சாலைகள் இப்போது புதுப்பொலிவுடன் தோன்றின. வாகனம் சொகுசாக சாலையில் மிதந்து போய்க் கொண்டிருந்தது. காட்டுப்பிரதேசங்களைத் தவிர நகர்ப்புறங்களில் வானுயர்ந்த கட்டடங்களும் வியாபார நிலையங்களுமாக இடங்கள் மெருகேறியிருந்தன..

அப்பாடா... ஒருவாறு வீட்டிற்கு வந்து சேர்ந்து விட்டேன். அம்மா முன்னர் மாதிரி மெலிந்த தோற்றத் தோடு இருப்பாளென நான் கருதியது தவறு என்று புரிந்தது. நன்றாக உடம்பு வைத்து இரட்டை நாடி சரீரத்துடன் நடக்க முடியாமல் வீட்டு வாசலிலேயே நின்று என்னை வரவேற்றாள். நான் விரைந்து போய் அவளைக் கட்டிக் கொண்டாலும் முன்னர் அம்மாவிட மிருந்த தவிப்பு இப்போது அவளிடமில்லை. லதாவும் மாறிப்போய் பெரிய மனுஷியாக வளர்ந்திருந்தாள். அவளைப்பார்த்தவுடன் என் மனதில் பாமாவைப் பற்றிய நினைப்பு வந்தது. அவளும் இப்படித்தான் வளர்ந்திருப்பாளோ...

எங்களுடைய வீடு முற்றாக மாறிப்போயிருந்தது. கிணற்றடியில் போய் குளிக்கும் சாக்கில் பக்கத்து வீட்டை எட்டிப் பார்க்கலாமென்றால்... வீட்டுடன் இணைந்த பாத்ரூம் சகல வசதிகளுடன் அமைந்திருந்தது. அப்பா பாத்ரூமைக்காட்டி என்னைப் போய் குளித்துவிட்டு வருமாறு பணித்தார். நானும் வேறு வழியின்றி குளிக்கப் போனேன். மனமோ பாமா ! பாமா என்று அடித்துக் கொண்டிருந்தது. குளித்து முடித்து வந்ததும் அப்பா அம்மாவை விரட்டினார்.

என்ன பாத்துக் கொண்டிருக்கிறீர், பிள்ளைக்கு சாப்பாட்டைக் குடுமன்"

தொலைக்காட்சிப் பெட்டியில் லயித்திருந்த அம்மா, லதாவை அழைத்தாள்.

" லதா! அண்ணாவுக்கு சாப்பாடு போட்டுக்குடு. இண்டைக்கு வெள்ளனவே சமையல் காரி வந்து சமைச்சு வைச்சிட்டு போயிட்டாள். பிரிட்ஜூக்கை வைச்சிக்கிறன். நீ பார்த்து போட்டு மைக்ரோவேவில சூடாக்கி போட்டு குடு. என்ன..."

எனக்கோ... ஏமாற்றத்தின் மேல் ஏமாற்றம். அம்மா தன் கையால் சமைத்து ஆசை ஆசையாக எனக்குப் போட்டுத் தருவாள். பாசத்துடன் சேர்த்து அவள் பரிமாறும் உணவைச் சுவைக்க வேண்டும் என்ற அங்கலாய்ப்புடன் வந்த எனக்கு, எல்லாமே சப்பென்று போய்விட்டது.

லதா தந்த உணவு எனது வாய்க்கே ருசிக்கவுமில்லை. வயிறு நிறையவுமில்லை. அப்பா குளிர் சாதனப் பெட்டியில் இருந்து கறுத்தக் கொழும்பான் மாம்பழங்களை எடுத்து வந்து எனக்கு வெட்டித் தந்தார். அது வாய்க்கு ருசியாக இருந்தது. ஆவலுடன் வாங்கி சாப்பிட்டேன். தொலைக்காட்சியில் போய்க் கொண்டிருந்த சீரியல் தொடர் முடிந்து விட்டது போலும், அம்மா வந்தாள். நான் அவர்களுக்காக வாங்கி வந்த பரிசுப் பொருட்களை ஆராயத் தொடங்கினாள். அதற்கிடையில் மாமா என்னைத் தேடி வந்து விட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வாங்கோ மாமா"

நான் இருக்கையிலிருந்து எழுந்து அவரை வர வேற்றேன். அவரும் என்னைக் கட்டி தழுவிவிட்டு என் அருகிலே அமர்ந்து கொண்டார். அவரது கையில் ஒரு சிறு பார்சல் அதைப் பிரித்தவர் என்னிடம் நீட்டினார்.

"இந்தா திரு. பனங்காய்ப்பணியாரம். உனக் கெண்டு தான் ஆசை ஆசையாய் வாணி சுட்டுத் தந்து விட்டவள்.

நானும் ஒரு உருண்டையை எடுத்து வாயில் போட்டேன். நன்றாக இருந்தது மேலும் சிலவற்றை எடுத்து சாப்பிட்டேன். மாமாவுக்கு என் செயல் பிடித்திருந்தது என்பதை அவரது மலர்ந்த முகம் காட்டிக் கொடுத்தது. லதாவின் திருமண ஒழுங்குகளைப் பற்றித் தான் எல்லோரும் கதைத்துக் கொண்டிருந்தார் கள். மண்டபம் ஒன்றில் தான் திருமணம் அங்கேயே சாப்பாடும் ஒழுங்கு செய்து விட்டிருந்தார்கள். எனவே வீட்டில் வேலைகள் பெரிதாக இல்லை.

மாமா புறப்பட்டபோது எனக்கு மனதில் உறைத்தது. அவருக்கு ஏதாவது கொடுத்துவிட வேண்டும் என்ற உந்துதலோடு நான் அறைக்குள் போனேன். உண்மையில் நான் அவர் குடும்பத்தினருக் காக எதுவித பரிசுப் பொருட்களும் வாங்கி வர வில்லை. லதாவுக்கென நான் வாங்கி வந்த சாறிகளுள் ஒன்றைத் தெரிவு செய்து அத்துடன் சாக்லேட்டுகளை யும் வைத்து அவரிடம் கொடுத்து விட்டேன்.

மாமா போன பின் அம்மா கேட்டாள்.

அண்ணரிட்டை என்ன குடுத்து விட்ட நீ?

"சாறி ஒன்றும் சாக்லேட்டுகளும் தான்"

"அதுதான் சரி. வாணி தாயில்லாப்பிள்ளை உனக்காகவே காத்திருப்பவள்"

மன நிறைவோடு அம்மா சொல்ல எனக்கு தூக்கி வாரிப்போட்டது. நான் பாமாவுக்காக வாங்கி வந்த கைப்கடிகாரத்தை அம்மாவினதும் லதாவினதும் கண் பார்வையிலிருந்து மறைத்தே வைத்திருந்தேன். கூடவே என் உள்ளக்கிடக்கையையும் தான்.

நாட்கள் ஓடி மறைந்தனவே தவிர என்னால் பாமாவைச் சந்திக்கவே முடியவில்லை. வீட்டிலோ திருமணத்திற்கான ஏற்பாடுகளால் எந்த நேரமும் கலகலப்பு குடியிருந்தது. லதா கால்களில் சக்கரத்தை கட்டி சுழன்று கொண்டிருந்தாள். அவளிடமும் விசாரிக்க வசதியில்லாமல் போயிற்று.

திருமண நாளும் வந்தது. எனக்கும் மாப் பிள்ளையைப் போன்ற அலங்கரிப்பு. மாப்பிள்ளைத் தோழனல்லவா. சமய அனுஷ்டானங்களுடன் சம்பிரதாய பூர்வமாகவும் மங்கள வாத்தியங்கள் முழங்க மாப்பிள்ளை லதாவின் கழுத்தில் தாலி கட்டினார். மாங்கல்யதாரணம் இனிதே நிறைவேறியது. அடுத்து மணமக்களை அட்சதை தூவி ஆசீர்வதிக்கும் நிகழ்வு. வீடியோ படப்பிடிப்பாளர்கள் ஒவ்வொரு விருந்தினரையும் மணமக்களுடன் நிறுத்தி படம் பிடித்துக் கொண்டிருந்தனர். என்னையும் வேறு வலுக்கட்டாயமாக அவர்களுடன் நிற்குமாறு பணித்தது தான் எனக்குப் பிடிக்கவில்லை. என்ன செய்வது நாய் வேஷம் போட்டாயிற்று குரைத்துத்தானே ஆக வேண்டும். வேண்டா வெறுப்பாக நின்று கொண்டிருந்தேன்.

"ஹலோ லதா! விஷ் யூ போத் எ கப்பி பெடட் வைப்"

திடீரென கேட்ட அந்த பரிச்சயமான குரல் என்னை ஈர்க்க அந்த குரலுக்குரியவரை நான் கூர்ந்து பார்த்தேன். அது பாமாவேதான் உருவத்திலும் சிறிது மாற்றம் இருந்தாலும் அதே பழைய குரல் மாறவில்லை. என் உள்ளுணர்வுகள் விழித்துக் கொண்டன. நான் அவளைக் கவனிப்பதைக் கண்ட லதா, அவளை எனக்கு அறிமுகப்படுத்தினாள்.

"அண்ணா ! இது என்னுடைய பெஸ்ற் பிரண்ட் டொக்டர் பாமா. முந்தி எங்கட பக்கத்து வீட்டில இருந்தவ ஞாபகம் இருக்குதா?"

பாமா என்னைத் திரும்பி பார்த்து "ஹலோ அண்ணா!" என்று கூற பதிலுக்கு நானும் "ஹாய்!" என்று சொல்லி சமாளித்துக் கொண்டேன். என் முகத்தில் அசடு வழி வதை என்னால் உணர முடிந்தது. லதா விடுவதாயில்லை.

"அண்ணா! வாற மாதம் இவவுக்கு வெடிங் நடக்கப் போகுது. டொக்டர் தனசேகரன் தான் மாப்பிள்ளை"

என் மனக் கோட்டை இடிந்து விழுவதைப் போன்றதோர் பிரமையில் திளைத்துப் போனேன். பாமாவும் லதாவின் அருகில் நின்று போஸ் கொடுக்க வீடியோ கமரா அதை கிளிக் செய்து கொண்டது.

வெறும் நடைப்பிணமாக நின்று மிகுதி நிகழ்வுகளைச் சமாளித்த போது எனக்கு போதும் மென்றாகி விட்டது. ஊருக்கு புறப்பட்டு வரும்போது தான் என் மனத்தில் எத்தனையெத்தனை இன்ப கனவுகள் இப்போது எல்லாமே சப்பென்று போய்விட்டது. எப்போது மெல்போனுக்குத் திரும்பலாம் என மனம் ஏம்பலிக்கத் தொடங்கியது.

ஒருவாறு புறப்படும் நாளும் வந்தது. புறப்படும் வேளையில் அம்மா சொன்னாள்.

"திரு தங்கச்சியின்ரை கலியாணத்துக்கு பட்ட கடன் கொஞ்சம் இருக்கு, மாதா மாதம் கொஞ்சம் கூடுதலாய் அனுப்பினியெண்டால் நல்லது."

நான் பதிலேதும் சொல்லவில்லை. மனதுக்குள் நினைத்துக் கொண்டேன்.


" ஓ... அங்கை நான் இரவு பகல் என்று பாராது ஓய்வில்லாமல் உழைத்து அனுப்பி வைக்கிறன். நீங்கள் சமைப்பதற்கு கூட பஞ்சிப்பட்டு ஆடம்பர வாழ்க்கை வாழ்ந்து கொண்டு சுகமாக இருங்கோ. இனித்தான் நான் எனக்காக உழைக்கப்போகிறேன். எனக்கென ஒரு வீடு வாங்க வேணும். எனக்கெண்டு ஒரு வாழ்க்கையை அமைக்க வேணும். இதுதான் என்னுடைய முடிவு"

தனியார் பஸ் ஒன்றில் சீற் புக் பண்ணி அதில் கொழும்புக்குப் புறப்பட்டேன். எனது பயணப்பை வரும்போது இருந்ததைப் போல் கனமாக இருக்க வில்லை. பஸ் புறப்பட்டது. கண்ணுக்குள் ஏதோ விழுந்து விட்டது போல் இருந்தது. பயணப்பையின் பக்கவாட்டிலுள்ள "சிப்பை" இழுத்து அதற்குள் கையை விட்டு ஹாண்ட் டவலை எடுப்பதற்காகத் துழாவினேன் எதுவோ தட்டுப்பட்டது. மெதுவாக அந்தப் பொருளை வெளியே எடுத்துப்பார்த்தேன். பாமாவிற்காக நான் அங்கிருந்து ஆசை ஆசையாக வாங்கி வந்த கைக்கடிகாரம் என்னைப் பார்த்துச் சிரித்தது.

ஒரு நீண்ட பெருமூச்சை வெளிப்படுத்தி என்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டேன். நிராசையாகப் போய் விட்ட என் பகற்கனவை கலைத்து விட்ட நிம்மதியுடன் இனிவரும் காலத்தில் நான் எனக்காக அமைத்துக் கொள்ளப்போகும் வாழ்க்கைப் பயணத்தை நோக்கி என் கற்பனை விரிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பருவம் அடையும் வரை!

மீண்டும்
வட்டமிடத் தொடங்கி விட்டன
வல்லூறுகள்.

இடி மின்னல் காற்று மழை
எல்லாம் தாண்டி
உலா வரத் தொடங்கி விட்டன.

சிலிர்த்துக்கொள்கிறது உடல்
பகுத்தறிய முடியாமல்
பதறுகிறது மனம்

எங்கள் குறையை சொல்ல
எங்களுக்கு உரிமையுண்டு
எவரிடம் சொல்வது
மனம் புழுங்குகிறது

எங்கள் நிலங்களில்
எங்கும் கால் பதிக்க
எங்களுக்கு உரிமையுண்டு – இருப்பினும்
அஞ்ச வேண்டியுள்ளது.

எவரையும் நம்ப முடியவில்லை.

பாதுகாப்போம் குஞ்சுகளை
பருவம் அடையட்டும் திறந்து விடுவோம்.

திகைக்கட்டும்
வல்லூறுகள் மட்டுமல்ல!...

– செல்லக்குட்டி கணேசன்

## வெறித்துக் காயும் மனம்

ஒளியெறிந்து சிரிக்கும் நிலவை
ஸ்பரிசித்து மூடும் முகிலாய்...
கனவைத் தின்றிற்றுக் காலம்.

காலமுகிலின் ஒவ்வொரு துளிகளும்
துயர் கலந்தொழுகி,
ஈரமாயிற்று மனமேடு.

உலராதூறும் மனமேட்டின் துயர்,
முகில்களைக் கடந்து
போகிறது.

மனமேட்டில் பூத்த கனவை
இருளாக்கிற்று,
காற்றறைந்த ஓலம்.

இருட்கனவின் கைகள் நீண்டு தழுவ
சிலிர்த்திற்றுக் காற்றின் மேனி.

மௌனித்துக் குனியும் காற்றை
அள்ளிக் குடித்துச் சிரிக்கும் கனவில்...
தேய்ந்திற்றுக் காலம்.

வலிகாவிப் போகும் காலத்தை
வெறித்துக் காய்கிறது மனம்.

– பொலிகை சு.க.சிந்துதாசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரஜிதாவின் இரண்டு கவிதைகள்

## பேருவகை

பெரும் நேசமொன்றின்
விருட்சமென பற்றி
படர்கையிலெலாம்
பேரன்பாய் சில
கண்ணீர்த்துளிகள்
முழுதாய்
நனைக்கும்...

சிலிர்த்த இன்பமெலாம்
மலராய் இதழ்விரிக்கையில்
எங்கிருந்தோ வருகின்றன
மகரந்தம் தேடி
வண்டுப்பூச்சிகள்...

தேவைகள் தீர்த்தனுப்பிய
திருப்தியில் காயென
நிறையும் குழந்தைகள்
வாடியும், சோர்ந்தும்
மண்ணோடு
மடிந்துவிடும்...


தப்பித்த களிப்பில்
இதமாய் கனிந்து
நெஞ்சு நிறைந்த
தேவாமிர்தமாய்
நாசி இறங்கும்
பேரன்பின் கனிகள்....

இத்துணை பாடெலாம்
நம் நாசி நனைக்கவே எனில்
நம் பங்கென்று ஏது செய்தோம்?

இப் பேர் உவகை யாதெனில்
நான் நட்ட கன்றொன்று
பற்றிப்படர்ந்து
பயனறிந்து
நிழல்பரப்பி
உதிரும் இலையை உரமாக்கி
உற்ற நேரம் தரும்
ஒப்பற்ற நேசமொன்றே..

## ஜன்னல் பக்கம்

தென்றலோடும்
இயற்கை எழிலோடும்
கதைபேசவென
தேடி அமரும்
ஜன்னலோர இருக்கைகளுக்கு
பல அத்தியாயங்கள்
உண்டு..



விரைந்தோடும் கட்டடங்கள்
கடந்து
விசும்பும் மனதின்
எண்ண ஓட்டங்களை
அவை உலுப்பி விடும்.

மழைத்துளிகளின் தூறலால்
உச்சந்தலையேறும் குளிர்காற்று
நம் மொத்தத்தையும்
தனக்குள் ஈர்த்துக்கொள்ளும்..

போதாதற்கு
பேருந்து பாடல்களும்
நமக்கே நமக்கானதாய்
எழுதப்பட்டதாக
உணர வைக்கும்...

இப்படி பல வேதாந்த
நினைவுடு பயணிக்கையில்
முன்னிருக்கையிலோ,
பின்னிருக்கையிலோ
அமர்ந்திருப்பவர்
"உந்த ஜன்னல ஒருக்க
பூட்டுறீங்களே?" என்பதை
நான் கேட்டு கிரகிக்க முதலே
இழுத்து ஒரு
சாத்து சாத்துவார்
எனக்கும் சேர்த்து

ஆனால்
ஒண்டுமே செய்யேலாது..
மூடிட்டு இருக்க வேண்டியது தான்
ஜன்னலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறும்பா

மூர்த்திவந் தமர்ந்தாராம் மேடை
காட்டிநின்றா ராம்தன்கண் ஜாடை
பார்த்திருந்த பரமருமே
படமெடுக்கச் சொல்லிவிட்டு
போர்த்தி விட்டாராமோர் பொன் னாடை

யோகி உடுத்துவந் தானாம் காவி
யோகமென்றானாம் சொர்க்கச் சாவி
பாகிடை தேனென பேசிய
பாவியை ; நம்பியே போனவள்
ஆகிவிட் டாளாம் நோய் காவி..!


வரப்பினை வளர்மதியாள் முந்தி
வந்தாளாம்; வைததாம் சந்தி
சுரந்தது தீர்ந்து போக அவன்
சுருட்டி விட்டான் தன்னுடமை
நிரம்பி விட்டதாம் இவள் தொந்தி

பாடுமென் றாராம் கல் யாணி
பாடி னாளாம் அவள் நாணி
மேடுபள்ளம் காட்டிஅவள்
மோகித்து பாடியதை கேட்ட
தோடுசொன்னார்; நீயே கலை வாணி.!

பொன்னி மகள்நகை களவாம்
போனதுக்கும் சாட்சிகளும் உளவாம்
பின்,அவளேன் ஏங்கவில்லை?
பொன்னியிடம் கேட்டதற்கு
சொன்னாள்அது "கவரிங்"கென்ற இழவாம்!

தன்புகழ் படிப்பதிலே பொன்னர்
தரணியிலே நிகரில்லா வின்னர்
கஞ்சாகுடு வென்றுபல
கடத்தல்களில் அவர்
சின்னமகன் ராமனாம் மன்னர்...!

தேடியவர் போனாராம் பரத்தை
தேய்த்து நின்றார் தன் தரத்தை
நாடியவள் வீடுசென்று
நாசநோயென்றே ஊர்
கூடிநின்று தேடுகிறார்சுந் தரத்தை!



தக்கனுக்கு வந்ததுவாம் ஈகோ
தாரத்தை வைதார்; கோகோ
சிக்கலினி சேர்ந்துவாழல்
செண்பகமோ சொல்லிவிட்டாள்
வக்கீலுக்கு வாழ்விலினி ஓஹோ..!!

எழுபத்தைந்து வயதான வின்ஷன்
எடுக்கப்போனாராம் பென்ஷன்
முழுப்பெயர் இல்லை
முகாமை சொல்லப்பொங்கி
எழுந்து; ஆகிவிட்டாராம் ரென்ஷன்

வரமென்றாராம் இந்த சம் பந்தம்
வருமாம் வரனுக்குநூறு பந்தம்
இரண்டான பின்னால்
எட்டியும் பார்க்கவில்லை
தரகர்பெயராம் ஞானசம் பந்தம்!

■ எஸ்.சிவசேகரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

# எல்லாம் போச்சுது போ!

அலெக்ஸ் பரந்தாமன்

பட்டணத்துக்கு ஓர் அலுவலாக வந்த இடத்தில் அலுவல்கள் முடிய நேரம் நகர்ந்து விட்டிருப்பதை உணர்ந்து கொண்டார் காசிநாதர். அன்று வெள்ளிக்கிழமை. அவர் புறப்படும் போது உணவு எதுவும் உட்கொள்ளவில்லை. பசி வயிற்றினுள் தனது தேவைக்கான உணர்வை வெளிப்படுத்திய வண்ணம் இருந்தது. இனியும் தாக்குப்பிடிக்க முடியாதவராக... தனது கைக்கடிகாரத்தைப்பார்க்கின்றார்.

நேரம் **1.36**... எனக் காட்டியது

"அடக் கடவுளே!"

அவரிடமிருந்து எழுகிறது மெதுவானதொரு முணுமுணுப்பு. பிரதான வீதியில் இருந்து சிறிது வடதிசை நோக்கிச் செல்லும் இரண்டாம் குறுக்குந் தெருவில் அமைந்திருந்தது. "ஐங்கரன் சைவ உணவகம்!" உணவத்தை நோக்கி நடக்க ஆரம்பித்தார் காசி நாதர்.

ஓர் ஐந்து கடை தூரம் சென்றதும் திடீரென அவரது மனதுக்குள் சந்தேகமும், அதனைத் தொடர்ந்து சலனமும் தொற்றிக் கொண்டன.

"நேரம் ஒண்டரைக்கு மேலாகியிட்டுது. அங்கை சோறு கறி கிடைக்குமோ தெரியாது?"

அவர் எட்டி நிமிர்ந்து நடந்து கொண்டிருந்தபோது, இன்னொரு எண்ணம் அவரது மனதினுள் உருவாக்கம் பெற்றது. அது அவரின் வேக நடையைச் சற்று தளர்வுறச் செய்தது.

"இண்டைக்கு வெள்ளிக்கிழமை! இந்த நாளேலை தான் சனங்கள் நிறைய வாறதுகள் சோறுகறி கொஞ்சம் மெண்டாலும் கிடக்கும் ஆனா பாயாசம் தான்...?"

காசிநாதர் உணவகத்தின் முன் நெருங்கி விட்டார்.

அதன் முன்பாக பல யாசகர்கள் விதமொரு தோற்றப்பாட்டுடன் குழுமியிருந்தார்கள்.

"ஐயா.. அம்மா... ஏதாச்சும் தந்திட்டுப்போங்கோ!"

உணவகத்துள் செல்வோரிடமும் உள்ளிருந்து வெளிவருவோரிடமும் அவர்கள் தங்கள் யாசக வேண்டுதல்களை விடுத்த வண்ணமிருந்தனர்.

இவர்களது வேண்டுதல்களைச் சிலர் கண்டும் காணாமல் சென்றார்கள். வேறுசிலர் காணாமலேயே உள்நுழைந்தார்கள். இன்னொரு ரகத்தினர் அருக்களிப்புடன் அந்த யாசகர்களைப் பார்த்து மனம் சுழித்தபடி... உள்ளே போனார்கள். ஒரு சிலர் மட்டும் அவர்களைக் கண்டு தமக்குள் அனுதாபப்பட்ட படி... உணவகத்தை விட்டு வெளியேறும் போது, தங்களால் இயன்றளவு தருமத்தை வழங்கி விட்டுச் செல்வார்கள்.

காசிநாதர் அந்த யாசகர்களைக் கடந்து உணவகத்தினுள் சென்று, ஒரு காலியான கதிரையில் அமர்ந்து கொண்டார். அவருக்குள் அந்த யாசகர்கள் குறித்து பலவித சிந்தனைகள் எழத் தொடங்குகின்றன.

இந்த யாசகர்கள் யார்? அவர்கள் ஏன் இப்படியானார்கள், இவர்கள் கண்ணீர்க் கதைதான் என்ன?





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காசி நாதருக்கு 2009, மே மாதத்திற்கு முன்னைய காலங்கள் மனதினுள் விரிவடைகின்றன... அந்தக் காலங்களின் எழுச்சியும் வீழ்ச்சியும் அவரைக் கண்கலங்க வைக்கின்றன. ஒரு குறுகிய வட்டத்திற்குள் பட்டினி கிடந்து பசியால் மெலிந்த போதும், நிம்மதிப்பெருமூச்சு நிறையவே இருந்தது. சுதந்திரக் காற்றை சுவாசிக்கக்கூடியதாக அவர்கள் அரசியல் அமைந்திருந்தது. றோட்டுகள், தெருவுகளில் இப்படியான யாசகர்களைக் காணவோ முடியாது. ஒரு பக்கம் ஓர் இனத்தின் விடுதலைக்கான போராட்டம் முனைப்படைந்து சென்று கொண்டிருக்கையில் மறுபுறத்தில் சமூகசீர்திருத்த நடவடிக்கைகளும் இடம் பெற்றுக் கொண்டிருந்தன.

பெற்றோரை இழந்த குழந்தைகள்... எவருடைய பராமரிப்பின்றி வாழ்ந்த முதியவர்கள்... வாழ்க்கையில் நெறிதவறிப்போன பெண்கள்... சந்தர்ப்ப சூழ்நிலைகளின் நிமித்தம் நடத்தைப் பிறழ்வுகளால் உளவிரக்திக்கு ஆளாகிப் போனவர்கள்.. எனப் பல வகைப்பட்ட மனக்காயங்களுக்கு உள்ளானவர்கள் இனம் காணப்பட்டார்கள். அவர்களுக்குத் தேவையான காப்பகங்கள் அமைக்கப்பட்டன. உடல் மற்றும் உளவியல் சிகிச்சைகள் அளிக்கப்பட்டன. அவர்கள் அனைவரும் சமூகத்துக்குப் பிரயோசனமான வேண்டுதற்குரியவர்களாக மாற்றப்பட்டார்கள்.

2009 மே மாத்திற்குப் பின்பு... இந்த அனைத்து நடவடிக்கைகளும் தலை கீழாகப் போய்விட்டன. "சுதந்திரம் அடைந்து விட்டதான" ஒரு தேசத்தில் மறுபடியும் வீதிகள் தோறும் யாசகர்கள் தோற்றம் பெறத் தொடங்கினார்கள். போரிலே பெற்றோரை இழந்த குழந்தைகள் வீதிகளில் ஊதுவர்த்தி விற்க ஆரம்பித்தார்கள். இரவு வேளைகளில் வர்த்தக வாணிப நிலையங்களுக்கு முன்பாக யாசக முதியவர்கள் உறக்கம் கொண்டு எழுந்தார்கள். பாதுகாப்பற்ற சூழ்நிலைகளுக்குள் பெண்கள் தள்ளப்பட்டு பலவற்றையும் இழந்தார்கள். வீதிக்கு விரட்டப்பப்பட்டார்கள். காப்பகங்கள் பலவும் போருக்குள் சிதைவுற்று காணாமல் போனதன் நிமித்தம், மீண்டும் ஒரு யாசக கலாசாரம் உருவாகி ... சமூகம் அசிங்கப்பட ஆரம்பித்தது.

"ஐயா! என்னையா... சோத்தைச் சாப்பிடாமல் என்ன யோசிக்கிறியள்...?"

ஒலிக்கிறது உணவு பரிமாறுபவரின் குரல்.

திடுக்கிட்டுக் கொண்டார் காசிநாதர்.

" ம்... ஒண்டுமில்லை..." கூறிக் கொண்டே சுற்று முற்றும் பார்க்கிறார்.

உணவு பரிமாறுபவரின் குரலால் அக்கம் பக்கத்தில் உணவருந்திக் கொண்டிருந்தவர்கள், தன்னைக் கவனிப்பது கண்டு மனம் சங்கடப்பட்டுக் கொண்டது அவருக்கு.

அவர் சாப்பிட ஆரம்பித்தார். ஏனோ அவரால் அது முடியவில்லை. உணவகத்தின் வாசலில் நிற்கும் அந்த யாசகர்களின் முகங்களே ஒவ்வொரு சோற்றுப் பருக்கைகளிலும் தெரிவதான பிரமை அவருக்குள்.

அதிலும், இரண்டு வயது கூட நிரம்பாத கைக்குழந்தையுடன் நின்ற ஓர் இளம் பெண்... அவரது மனக்கண்கள் முன்பே வந்து நின்றார். அவளைத் தொடர்ந்து இடதுகால் முழங்காலுக்குக்கீழே இல்லாத நிலையில் ஊன்றுகோல்களின் உதவியுடன் ஒரு முதியவர். அவர்களோடு உடல்வலுவான தோற்றப்பாட்டுடன் காட்சியளித்த இன்னொரு நபர். இவர்களுடன் இன்னும் சில ரகத்தினர்...

காசி நாதருக்கு மனம் அமைதியில்லாமல் தவித்தது. அதே சமயம் இலையில் சோறும் முடிந்திருந்தது. இலையை உரிய இடத்தில் போட்டுவிட்டு கைகளைக் கழுவிக்கொண்டு உணவகத்தைவிட்டு வெளியே வந்தார்.

உணவத்தின் வெளிவாசலில் குழுமியிருந்த அத்தனை யாசகர்களும் காசிநாதரையும் வேறொரு சிலரையும் சூழ்ந்து கொண்டார்கள். எல்லோருடைய கரங்களும் அவர்களை நோக்கி நீட்டிய வண்ணம் இருந்தன.

" ஐயா... ஐயா... ஏதாச்சும் தந்திட்டுப்போங்கோ...?"

திரும்பத்திரும்ப அவர்களிடமிருந்து கோரஸ்ஸாக ஒலிக்கத் தொடங்கின இரத்தல் வார்த்தைகள்.

காசிநாதருக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை.

"ஒருவர் ரண்டு பேருக்கொண்டால் உள்ளுக்கை போய் ரண்டு பார்சலையாவது வாங்கிக் கொண்டு வந்து குடுக்கலாம் ஆனால் இவ்வளவு பேருக்கும்...?"

அங்கே ஆகக்குறைந்தது பத்துப் பேராவது நின்றார்கள் உணவகத்தின் உள்ளிருந்து வெளிவருபவர்களிடம் தம் இரந்துதலை மேற் கொண்டபடி இருந்தார்கள்.

சாப்பிடுவதற்கு முன்பு உணவகத்திற்குள் வரும் போது கண்டு கொண்ட கைக்குழந்தைக் காரியைத்தேடினார். காசிநாதர் அவளோ அந்த உணவக வாயிலின் ஒரு மூலையோரம் இருந்தபடி... அவரையும் அவரைச் சூழ்ந்து நின்று கைகளை நீட்டியபடி நிற்பவர்களையும் வெறித்துப்பார்த்தபடி இருந்தாள்.

"எல்லோரும் வந்து என்னட்டை கைகளை நீட்டிய படியிருக்க இவள் மட்டும் ஏன்...?"

காசிநாதர் அவளை ஆச்சரியத்துடன் நோக்கியபடி... அவளருகில் சென்றார். அவளையும் அவளது குழந்தையையும் இரக்கத்தோடு பார்த்தவர், தனது சேட் பொப்கெற்றில் இருந்து ஐம்பது ரூபாத்தாள் ஒன்றை எடுத்து அந்தப்பெண்ணிடம் கொடுக்க முற்பட்டபோது அவள் அந்தத் தொகையை எதிர்பார்க்கவில்லை. மிகுந்த முகமலர்ச்சியோடு அவரிடமிருந்து அந்தப் பணத்தைப் பெற்றுக் கொண்டாள்.

"என்ன.. அவளுக்கு மட்டும் காசு குடுக்கிறியள்? இஞ்சாலை எங்களுக்கும் ஏதேனும் தாங்கோவன்.."

அவருக்குப் பின்னால் இருந்து எழுகிறது ஒரு குரல்.

காசிநாதர் திகைப்புடன் திரும்பினார். தனக்கு முன்னால் நிற்கும் யாசகர் கூட்டத்தைப்பார்த்தார்.

"என்ன அவளுக்கு மட்டும் காசு குடுக்கிறியள் எங்களுக்கும் ஏதேனும் தரவிருப்பமில்லையோ?"

உடல்வலுக்கொண்ட நபரிடமிருந்து மீண்டும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒலிக்கிறது குரல்.

அந்த வார்த்தைகள்... சற்று "தடிப்புடன்" கூடியதாக இருப்பதை அவரால் உணரமுடிந்தது. அதேசமயம், "அவளுக்கு மட்டும்" என்ற சொல் அவரது மனதைச்சற்று நெருடவும் செய்தது.

காசிநாதருக்கு பற்றிக் கொண்டது எரிச்சல்.

ஒருவருக்கு தானம் வழங்குவதும் வழங்காமல் விடுவதும் அவரவர்க்கான சுயமான விருப்பின் வெளிப்பாடு. அதை இன்னோருக்குத்தான் வழங்கவேண்டுமென்பது அவசியமில்லை.. .என்பதை அந்த நபருக்கு உணர்த்த அவர் விரும்பினார்.

அதற்கிடையில் -

அவருக்குப்பின்னால் குழந்தையோடு இருந்தவளிடமிருந்து வெளிக்கிளம்பின வார்த்தைகள்.

"ஐயா! அவருக்கு ஒண்டும் குடுக்காதையுங்கோ.. ஏதாவது குடுக்க விரும்பினால் அதை எனக்குத் தாங்கோ"

காசிநாதர் திரும்பி அவளைப்பார்த்தார். பின்பு அந்த நபரைப் பார்த்தார். அந்த நபரோ கைக்குழந்தைக்காரியை தனது பார்வையினால் முறைத்த வண்ணம் இருந்தார்.

காசிநாதருக்கு குழப்பமாக இருந்தது.

யாசகம் பெறுவதற்காக ஒருவேளை யாசகர்களுக்கிடையில் நிலவுகின்ற போட்டி மனப் பான்மையின் நிமித்தம் அந்தக் கைக்குழந்தைகாரி மேற்கண்டவாறு கூறியிருக்கலாம்... என நினைத்தவர், அந்தப் பெண்ணைப்பார்த்துக்கேட்டார்.

"அவருக்கு எதுவும் குடுக்க வேண்டாமென்று நீ எதுக்காக அப்படிச் சொல்கிறாய்? குடுக்கிறதும் குடுக்காமல் விடுகிறதும் எனது விருப்பம்"

அவள் ஒரு கணம் தயங்கிவிட்டு, அவரின் கேள்விக்கான பதிலைக் கூறினாள்.

"அவர் என்ர புருஷன்!"

"என்னது!? உன்ர புருஷனா...?"

அவளது பதில்... அவரை நிலைகுலைய வைத்தது.

"ஓம் ஐயா! உழைக்கக்கூடிய உடம்மை வைச்சுக்கொண்டு, பிச்சை எடுத்துக் குடிச்சுத்திரியுது. போதாக்குறைக்கு, நான் எடுக்கிற காசையும் பறிச்சுகொண்டுபோய் குடிச்சு வெறிச்சு ஆடுது."

காசிநாதர் திரும்பி அருக்களிப்புடன் அந்த நபரை பார்த்தார்.

அந்த நபரோ முற்றும் துறந்த முனிவர்களின் எதிலும் பற்றற்ற மனோ நிலைக்கொப்பான பார்வையை வெளிப்படுத்தினார்.

அடுத்த கணம் -

யாசகர் மீதான அன்பு இரக்கம் அனுதாபம் பரிதாபம் கருணை போன்ற மனிதத்தன்மையான உணர்வுகள் அனைத்தும் சிதிலமாகிக் கொண்டிருந்தன காசிநாதருக்குள்.

2009 மே மாதத்துக்கு முன்னைய காலங்கள்... மீண்டும் அவர் மனதில் நிழலாட ஆரம்பிக்கின்றன.

ஒரு குறுகிய நிலப்பரப்பாக இருந்தாலும் வீதிகள், கடைகள், தெருவுகள், கோயில்கள், உணவகங்கள் முன்பு காணக்கிடைக்காத யாசகர் சமூகம் இப்பொழுது பல்கிப் பெருகி சோம்பேறிகளாகி, இருப்பது இயன்றளவும் ஈனமல்ல... என்ற கொள்கையோடு எப்படியும் வாழ்ந்துவிட்டுப்போகலாம் எனும் மனவுணர்வு கொண்டு வாழத்தலைப்பட்டமைக்கு யார் காரணம்?

வினாவைத் தொடுக்கிறது மனம்! விடைதேட அவர் விரும்பவில்லை.

" எல்லாம் போச்சுது... போ!" என்று மட்டும் முணுமுணுத்துக் கொண்டது அவரது வாய்!


## ஷெல்லிதாசனின் 2 கவிதைகள்

### விருது!

தெரிந்தவனா என
பெயர் பார்க்கும்
ஊர் பார்க்கும்
உறவு பார்க்கும்
அதற்கு மேலாக
சாதியையும் உரசிப்பார்க்கும்
நட்டம் நயம் பார்க்கும்
எப்பவோ நடந்த மோதலை
இரை மீட்டிப் பார்த்து
பழி தீர்க்க ஒரு சந்தர்ப்பமாய்
புள்ளியாலே உதைபோடும்
நகல்களை அசலாக்கி சிலவேளை
அரங்கமேற்றி நீதி சொல்லும்.

### ஒன்றுக்காய் ஒன்றை...

சட்டைப் பையில்
சொருக எத்தனித்த
விரல்களிலிருந்து எகுறிக்குதித்து
கீழே விழுந்தது எனது பேனா.
அதனை எடுக்கக்
குனிந்த போது
காதில் மாட்டியிருந்த
மூக்குக் கண்ணாடி
கழன்று தரையில் விழுந்து
இரண்டானது!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கே.எஸ்.சிவகுமாரனின்

**மனத்திரையில் - 7**



# என் ஆரம்ப தொழில் முயற்சிகள்

இலங்கைப்பல்கலைக்கழகத்தில் சேருவதற்கு நான் எடுத்த முயற்சிகள் தோல்வியுற்றன. வீட்டில் நான்தான் மூத்தபிள்ளை. என் பெற்றோர்களின் எதிர்பார்ப்பு கைகூடவில்லை. தம்பிமாரும் கல்வியில் அதிகம் அக்கறை காட்டவில்லை. எனது பெற்றோர் கடுமையாக உழைத்து எங்களை வழிநடத்தினர்.

பெற்றோருக்கு நான் என்ன கைமாறு செய்யலாம் என்று யோசித்தபோது, ஒரு வேலையைத் தேட வேண்டும் என்று எண்ணினேன். அத்துடன் அவர்கள் சொற்படியே நான் கல்யாணம் செய்வது என்றும் காதல் வலைகளில் சிக்கவேண்டாம் என்று சங்கற்பம் கொண்டேன்.

இதற்கிடையில் தம்பிமார் இருவரும் தமது காதலிகளைத் தேடிக் கொண்டனர். இதனால், வைராக்கியமும் மனத்திடமும் உறுதியாயிற்று.

இதற்கிடையில், நான் லண்டன் ஜி.சி.ஈ. பாடங்கள் பற்றிக் குறிப்பிட்டதை நினைவூட்டுகிறேன். பிரிட்டிஸ் யாப்பு, தமிழ் ஆகிய பாடங்களில் சித்தியெத்தியிருந்தேன். சமஸ்கிருதத்தில் குண்டடித்தேன். எனவே எனது ஆகக் கூடிய கல்வித்தகுதி லண்டன் பரீட்சையில் இரண்டு பாடங்களில் தேறியவையே. இது காணாது என்பதை உணர்ந்தேன்.

எனவே என் பெற்றோருக்குத் தெரியாமல் ஒரு வேலையைப் பெற முயன்றேன். சாதாரணமாக எனது தம்பிமாருடன் கதைத்துப் பார்த்தேன். என் இளைய தம்பி "கவலை வேண்டாம் அண்ணா! நான்ஒரு வேலையைத் தேடித் தருகிறேன்" என்றான். அவன் பெயர் ஞானகுமார். அவன் தற்போது உயிரோடு இல்லை.

ஞானகுமாரின் நண்பன் பெயர் சத்தியமூர்த்தி. அவன், கொழும்பு mascows நிறுவனத்தின் சொந்தக்காரனான சுப்ரமணியத்திடம் என் பெயரைச் சொல்லி, நான் ஆங்கிலம், தமிழ்மொழிகளில் பரீச்சயமானவன் என்று கூறி விதப்புரை செய்துள்ளான்.

அடுத்தநாள் மறைந்த சுப்பிரமணியம் அவர்கள் தனது மகன் தியாகமூர்த்தி மூலம் செய்தியொன்றை அனுப்பினார். அதாவது, வணிகச் சம்மேளனத்தில் தலைவர் ஆர்.ஈ.ஜயத்திலக்கவை நான் சந்திக்க வேண்டுமென்று. கொழும்பு Chambers of commercial சுப்புமணியிடம் அவர்களும் அங்கத்தவராவார்.

டபிள்யூ தஹாநாயக்கா பிரதம மந்திரியாக இருந்த பொழுது ஆர்.ஈ. ஜயத்தில ஒரு அமைச்சராக இருந்தவர். அவர் நாவலப்பிட்டித் தொகுதி பாராளுமன்ற அங்கத்தவராகவும் இருந்தவர். அக்காலத்தில் நான் Westernised ஆகவும் இருந்தேன்.

ஜயத்திலக்க என்னை அவர்கள் வெளியிடும் ஆங்கில ஏட்டில் ஒரு நிபுணராக வேலை தந்தார். அது மாத்திரமல்ல ஆண்டு மலருக்கு விளம்பரம் தேடித்தரும்படி கேட்டுக்கொண்டார்.

எனது personality காரணமாக முதல் நாளே மூன்று பெரிய விளம்பரங்களை பெற்று வந்தேன். லிப்டனஸ், குடிசன மதிப்பீட்டுத் திணைக்களம், கார்கில்ஸ் ஆகியவற்றில் விளம்பரத்தைப் பெற்றுக் கொண்டேன்.

ஜயத்திலகவுக்கு ஆனந்தம் எனது சம்பளம் மாதம் ரூ 300/- இல் இருந்து 350/- ஆக உயர்த்தினார். அதுமட்டுமல்லாமல் Industry என்ற சஞ்சிகையின் உதவி ஆசிரியராகவும் நியமித்தார். நான் கைத்தொழில் பிரமுகர்களை பேட்டி கண்டு, கட்டுரைகளை எழுதி வந்தேன்.

அழகாக உடுத்து, டை கட்டி, ஸ்மார்ட் ஆக நான் தொழில் பார்த்து வந்தபொழுது, அங்கு வேலை பார்த்த சிங்களப் பெண்கள் என்னிடம் அடிக்கடி பேசுவார்கள். நான் கட்டாயமாக தூர விலகி இருந்தேன்.

அடுத்த மாதம் சம்பளம் 400/- ஆக உயரும் என்ற நம்பிக்கை இருந்தது. அக்காலத்தில் 400 ரூபாய் பெரிய காசு.

எனது பெற்றோருக்கு போஷாக்கு உள்ள பால்மாவை எனது முதற் சம்பளத்தில் வாங்கி என் நன்றிக் கடனைச் செலுத்தினேன்.


இப்படியிருக்கையில், எனது தந்தையார் excise திணைக்களத்தில் (சவோய் கட்டடத்தில்) கணக்களராகப் பதவி ஏற்றிருந்தார். அவர்தான் அந்த அலுவலகத்தில் பிரதம அரசாங்க உத்தியோகத்தராவார்.

அவரிடம் Gazette பத்திரிகை வந்து சேரும். ஒரு நாள், அந்த வர்த்தமானியில் ஒரு விளம்பரத்தை கண்டு, அதனை என்னிடம் காட்டி, "கொவரண்மேந்து உத்தியோகமடா, நீ இதற்கு விண்ணப்பி" என்று. விண்ணப்பத்தையும் அவரே பூர்த்தி செய்து என்னிடம் தந்தார். நான் விரும்பா விட்டாலும் அவர் சொல்கிறாரே என்று கையொப்பமிட்டுக் கொடுத்தேன்.

*இனி அடுத்த இதழில்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நகரமயமாக்கலில் சிதைந்து போன ரம்மியங்களுக்கான அழுகையாய்...

**கெக்கிறாவ ஸுலைஹா**

வில்லியம் ப்ளேக் ஆங்கில இலக்கியத்தின் அழகியல் காலக் கவிஞன் என்ற பிரிவிலே அகப் பட்டாலும், அதிலிருந்து மாறுபட்ட சிந்தனைகளோடு வெளிப்பட்ட வித்தியாசமான படைப்பாளி எனலாம். பிரித்தானியக் கவிஞர் அவர். கூடவே ஓவியராகவும், சிற்பியாகவும் திறமை காட்டியவர். மட்டுமன்றி தன் புத்தகங்களை தானே அச்சிடவும், கோர்க்கவும் செய்தவர். அவரது காலத்தே அவர் அதிகம் பேசப்பட வில்லை. ஆயினும், பின்னாட்களில் அவர் ஆங்கில கவிதை இலக்கியத்துக்கும், கலைத்துறைக்கும் பெரும் பங்காற்றியவராகப் புரிந்து கொள்ளப்பட்டிருந்தார். 1757 நவம்பர் 28ம் திகதி இலண்டன் நகரிலே பிறந்த வில்லியம் ப்ளேக்கிற்கு தாயே வீட்டில் கற்பித்தார். பெற்றோர்கள் அவரது காரியங்களில் அவருக்கு நிறைய ஊக்குவிப்பை வழங்கினார்கள். தன் பதினான்காம் வயதில் ஜேம்ஸ் பேஸியார் என்பவரிடம் ஓவியம் சம்பந்தமாக அதிக பயிற்சி எடுத்துக் கொண்டு, ரோயல் அகாடமி கல்லூரியில் அது பற்றி மேலும் கற்றுத்தேர்ந்து, 1789இல் திருமணமானபின் மனைவி கேத்தரின் பௌச்சருக்கும் அது பற்றிய கல்வியை யூட்டினார் ப்ளேக்.

கவிதைகளை அயராமல் வாசித்தார் வில்லியம் ப்ளேக். அவரது முதல் கவிதைத் தொகுதி 1783 இல் வெளியானது. அவரது கவிதைகள் இரண்டு வகைப் படுத்தப்பட்டன. சிறுவயதுப் பரிதாபங்கள், அப்பாவித் தனங்கள் (Songs of Innocence) ஒரு வகையாகவும் அனுபவப் பாடல்கள் (Songs of Experience) இன்னொரு வகையாகவும் பிரிக்கப்பட்டன. அவரது "டைகர்"- "புலி" கவிதை ஒரு சிறுவனின் பார்வையிலிருந்து எழுதப் படினும், அது பெரியோர்களுக்கான பட்டவர்தனமான பல செய்திகளை முன்வைக்கிறது. "The Book of Thiel (*1789*), The Marriage of Heaven and Hell (*1790*), Amerika (*1793*), The Book of Urizen (*1794*), Milton (*1804*), Jerusalem(*1808*) போன்றவை அவரது பேசப்பட்ட படைப்புகள் எனலாம். வில்லியம் ப்ளேக் ஆகஸ்ட் பன்னிரண்டாம் திகதி 1827 இல் இறந்தார்.

சிலர் அவரைப் பைத்தியம் என்றார்கள். "அந்த பைத்தியக்காரத்தனம் தான் அவரிடமிருந்து உன்னதக் கவிதைகளை நமக்குத் தந்தது" என்கிறார் ஏ.ஈ. ஹெவ்ஸ்மன் என்கிற விமர்சகர். 18,19ம் நூற்றாண்டு இங்கிலாந்தின் குறுக்கு வெட்டுமுகத்தை அவர் அழகாய்க் கவிதைகளுக்குள் கொணர்ந்தார். சில விமர்சகர்கள் அவரை "இருபதாம் நூற்றாண்டுச் சிந்தனைகளுடன் வெளிப்பட்ட பதினெட்டாம் நூற்றாண்டுக் கவிஞன்" என்றார்கள். துயரம், போராட்டம், குடும்ப வாழ்க்கையின் சிதைவுகள், பாதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோரச் சிறார்கள், ஊழல், இலஞ்சம், சிறுவர்களை வேலைக்கமர்த்தல், விபசாரம், தடைகள், சமய ரீதியிலான முரண்பாடுகள் போன்றன அவர் கவிதைகளில் நிறைய பேசப்பட்டன.

தொழிற்சாலை முறைமைகளில் கோபம் கொண்டு அவர் "இலண்டன்" கவிதையைப் படைத்தார். கைத்தொழிற் புரட்சியின் பின்னரான நகரவாழ்க்கை அவரை மிக வருத்திற்று. நாட்டின் தலைநகரமான இலண்டன் நகர் இருட்டிலே இருப்பதாக அவர் அறிந்து கொள்கிறார். அதன் அங்கத்தவர்கள் துயர மிகையில் உழலுவதைக் கண்டு சினம் கொள்கிறார்.

London

இலண்டன்

William Blake

வில்லியம் ப்ளேக்

வணிகமயமாய் மாறிப்போன வீதியெலாம்,
அங்ஙனமேயான தேம்ஸ் நதியின் புறத்தெலாம்
நான் வெறுமனே நடந்தேகினேன்;
எதிர்கொள்ளும் எல்லார் வதனத்தேயும்
துர்பலத்தினதும், துயரத்தினதும்
குறிப்பையே நான் தரிசித்தேன்.

ஒவ்வோர் மானிடனும் அழுது உழன்றான்.
போலவே,
அச்சத்தின் தொனியென
கைக்குழந்தைகளின் அழுகைகள்.
ஒவ்வோர் குரலிலும், ஒவ்வோர் சாபத்திலும்
நான் மனசைக் கட்டிப்போட்ட
கைவிலங்கின் ஒலிதனையே செவியுற்றேன்.
புகைக்கூடுகள் துப்புரவு செய்யும்
சிறுவனின் அழுகையாய்,
படைவீரனின் தோற்றுப்போன பெருமூச்சாய்,
முடிவுறாப் பாவங்களினால் கறுத்துப்போன
தேவ ஆலயங்களின் சுவர்களாய்,
அரசமாளிகைகளின் சுவர்கள்
இரத்தக்கறைகள் வடித்தன.

நடுநிசி தெருக்களிலெலாம்
இளந்தாசிகளின் கோப சாபங்கள் கேட்டன எனக்கு.
சம்சாரச் சவப்பெட்டிகள் எல்லாம் தொற்றும்
பிணிகளுடன்
பிறப்புக் கண்ட குழந்தைகளின் அலறல்கள் ஒலித்தன.

அக்கால இலண்டன் நகரிலே அரசும் அது சார் நிறுவனங்களும் மக்கள் மீது எண்ணிலடங்கா சட்டங்களையும், தடைகளையும் விதிக்க, மக்கள் முகங்கள் எல்லாம் கவலையின் குறிகளையே காட்டின. தேம்ஸ் நதி ஓரத்திலெல்லாம் தொழிற்சாலைக் குப்பைகள் மிதந்தன. விலங்குகள் மேய்ந்து திரிந்த நதிக் கரையோரப் புல்வெளிகள் எல்லாம் அழிந்து அவலட்சணங்கள் தலைவிரித்தாடின. அரசின் ஆதரவோடு முதலாளிகள் சிலர் சிறுவர்களை வேலைக் கமர்த்தினார்கள். அவர்கள் அவர்களது வயதுக்கு மீறிய வேலைகளில் அமர்த்தப்பட்டார்கள். வீரதீரச் செயல்கள் பல தேசத்துக்காய்ப் புரிந்து இறக்கச் சித்தம் கொள்ளும் படைவீரர்கள், பணம்படைத்தோரின் கையாட்களாய் மாறி வெறுமனே பெருமூச்சு விட்டார்கள். வில்லியம் ப்ளேக்கின் தேர்ந்தெடுக்கப்பட்ட வார்த்தைப் பிரயோகங்கள் அவரது சினம் கொண்ட மனதைத் தெளிவுற வாசகனுக்குப் படம் பிடித்துக் காட்டியது.

நடு இரவுகளிலே இளம் பெண்கள் பாலியலில் பயன்படுத்தப்படுகின்ற கோரங்கள் நிகழுவதையும், கைக்குழந்தைகள் கண்ணீரோடு திரிவதையும், விபசாரிகளாய் மாறிப்போன இளம் பெண்கள் தமது திருமண மேடைகளை சவப்பெட்டிகளில் காண்பதாகவும் அவர் சொல்லி வேதனையுறுகிறார். மனித மனங்கள் சிந்திக்கக் கூடத் திராணியற்று விலங்கிடப்பட்டிருந் ததாய்ச் சொல்கிறார் அவர். மனோரதிய உணர்வு களுக்குமப் பால், சமூகத்தை, அநீதத்தை, சமய ஸ்தாபனங்களை, அரசை நேரிடையாகத் தாக்குகின்ற தன்மை ப்ளேக்கின் கவிதைகளில் காணக்கிடக்கிறது என்பதற்கு சாட்சியாய் இலண்டன் கவிதையைச் சொல்லலாம்.

2. வேலைக்கமர்த்தப்படும் சிறார்களின் தொடரும் துயர் மிகைத்த கண்ணீரில்...

வில்லியம் ப்ளேக் தன் "இலண்டன்" கவிதையிலே இடைநடுவரியில் இப்படிச் சொல்வார்:-

"புகைக்கூடுகள் துப்புரவு செய்யும்
சிறுவனின் அழுகையாய்,
படைவீரனின் தோற்றுப்போன பெருமூச்சாய்,
முடிவுறாப் பாவங்களினால் கறுத்துப்போன
தேவ ஆலயங்களின் சுவர்களாய்,
அரசமாளிகைகளின் சுவர்கள்
இரத்தக்கறைகள் வடித்தன."

வில்லியம் ப்ளேக் எழுதிய 'The Chimney Sweeper' கவிதை அவரது "இலண்டன்" கவிதையிலே மேலே ஒற்றை வரியில் கூறப்பட்ட சிறுவனின் முழுமொத்த சோகக் கதையைச் சொல்லும் இன்னுமொரு கவிதையாகும். உயரமான கட்டடங்களின் உச்சிகளில் நிறுவப்பட்டிருந்த புகைபோக்கிகளின் (சிம்னி) மீது படியும் புகையையும், ஒட்டடைகளையும் துடைத்து நீக்க வசதியான மெல்லிய உடலமைப்போடு கூடிய நான்கு, ஐந்து வயதுடைய சிறுவர்களை பத்துப் பன்னிரண்டு, இருபது என முதலாளிகள் தம்வசம் வைத்துக் கொண்டு வேலை வாங்கினார்கள். அவர்களுக்கு கூலி கூட கொடுக்கப்படுவதில்லை.

அந்த புகைக்கூட்டுத் தொழிலாளிகள்

William Blake

வில்லியம் ப்ளேக்

என் அன்னை இறக்கையில் நான்
ரொம்ப சின்ன வயதினன் அறிக;
அழு அழுவென்று அழக்கூட
சரியாய்த் தெரியவராத வயதில்
அப்பா என்னை விற்றார்
ஆதலினால் நான் உங்கள்
புகைபோக்கிகள் துடைக்கலானேன்,
அவற்றின் ஒட்டடைகளுடனே உறங்கலானேன்.
இன்னொரு சிறுவன் ஆங்கே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழுது அரற்றி நின்றான்
அவன்தன் சுருள் கேசம் சிரைக்கப்பட்டபோது
ஆட்டின் பிண்டப்பகுதி போலும் வழுவழுப்பாய்.
அவனுக்கு நான் ஆறுதல் சொன்னேன்,
"கறுத்த ஒட்டடைகள்
உன் அழகிய வெண்ணிற மயிர்களின்
அழகியலில் ஆதிக்கம் செலுத்தாதிருக்கிறதே
ஆதலினால் கவலைகள் வேண்டாம்.."

அங்ஙனமே அவன் அமைதியானான்
அன்றிரா அவன் ஓர் கனாக்கண்டான்.
அப்படியோர் அழகிய கனா அஃது.
"டிக்"கென்றும், "ஜோ"வென்றும்,
"நெட்"என்றும், "ஜெக்" என்றும் நம்மோடு பல சிறார்கள்
கரும் சவப்பெட்டிகளுள் அடைக்கப்படுகிறார்கள்.

அங்கு தரிசனம் தந்த வானத் தூதுவர்
தன் கரங்களில் ஏந்திவந்த
பிரகாசத்தின் திறவுகோல் கொண்டு
அவர்களை விடுவித்து
விடுதலைக்காற்றை சுகிக்கச் செய்தார்
ஆதலினால் அவர்கள் புற்றரை எங்கிலும்
சிரித்துக் குதூகலித்து ஓடோடித் திரிந்தார்கள்,
ஆற்றில் குளித்துப் பின் வெயிலில் காய்ந்தார்கள்.

நிர்வாணத்தின் பிரகாசத்தில் அவர்கள் ஒளிர்ந்தார்கள்
அவர்கள் தம் பைகள் ஆங்கே தொலைவில்.
மேகங்களில் அவர்கள் மிதந்தார்கள்
காற்றில் அவர்கள் விளையாட்டும் பயின்றார்கள்
திறப்பைக் கொண்டு வந்த இறைதூதர்
அந்தச் சிறுவன் அருகே வந்து மெல்லச் சொன்னார்
இப்படி
நல்ல பிள்ளையாய் நீங்கள் இருந்தால்
கடவுளே உங்களின் தந்தையாய் ஆவான்
அப்புறம் வேறு குஷிகளுக்குத் தேவை வராது.

அவன் இருட்டில்
சட்டென விழித்தான் கனாக் கலைந்து.
மறுபடி நாம் நம் வேலைக்குச் சுமந்து போகும்
பைகள், தூசிதுடைப்பான்கள்
தமை ஏந்தி போயினோம் கடமை நிமித்தமாய்,
காலையின் குளிர்பனி வாட்டித் எடுத்தாலும்
மகிழ்ந்திருந்தான் என் நண்பன் அவன்,
இப்படியே அவரவர் தம் கடமைகளைச் செய்தால்
அச்சங்கள் ஒன்றும் நமை அணுகாதே என்றே.

இந்தக் கவிதையானது புகைபோக்கிகள் துடைக்கும் ஒரு சிறுவனின் குரலாய் ஒலிக்கிறது. அம்மா இறக்க, அழக்கூடச் சரியாகத் தெரியாத வயதில் தந்தையால் ஒரு முதலாளியிடம் விற்கப்பட்ட கதையை அவன் சொல்வான். அக்கவிதையின் அடுத்த பந்தியில் அதே தொழிலில் ஈடுபடும் இன்னொரு சிறுவன் தன் துயரக்கதையைச் சொல்வான். அவனது சுருள் தலை மயிர் சிம்னிகளை துடைப்பதற்கு இடராக இருக்கக் கூடாதென்று மந்தையின் பிற்பகுதிபோல வழுவழுப்பாய் சிரைக்கப்படும். அவனுக்கு அது பெரும் கவலை. அவனது கனவு ஒன்று பற்றியும் அக்கவிதை பேசும்.

புகைபோக்கிகள் துடைக்கிற அவனும், அவனது ஆயிரக்கணக்கான நண்பர்களும் அமைதியான ஒரு நடுநிசியிலே வானப்பரப்பிலிருந்து வரும் ஒரு தூதுவரால் பிரகாசம் மிக்க ஒரு திறவுகோல் கொண்டு கறுப்புநிறச் சவப்பெட்டிகளுக்குள் இருந்து மீட்கப்படுகிறார்கள். மீட்பராய் வந்த தூதுவர் அவர்களை உல்லாசமாக விளையாட அனுமதிக்கிறார். அவர்கள் ஆற்றிலே குதித்துக் குதூகலிக்கிறார்கள். ஆடைகள் துறந்து நிர்வாணமாய் வானத்துக்கும் தரைக்கும் குதிக்கிறார்கள். சட்டென அந்தத் தூதுவர் சொல்கிறார், "நீங்கள் நல்ல பிள்ளைகளாய் நடந்து கொண்டால் இறைவனும் உங்களை நேஸிப்பான்." ஆக, வானத்தூதுவரும் அப்பிள்ளைகளைக் காப்பாற்ற வரவில்லை. மாறாக பெரியவர்கள் சொற்படி நடக்கும் பிள்ளைகளாக இருக்கச் சொல்லி மதத்தின் பேரால் துஷ்பிரயோகம் செய்கிறார் என்பதை உள்ளார்ந்த கோபத்துடன் ப்ளேக் முன்வைக்கிறார்.

சிறுவன் கனவு கலைந்து எழுகிறான். இருட்டிலே புகைபோக்கிகள் துடைக்கும் துடைப்பான் மற்றும், பைகளோடு வேலைக்குப் புறப்படுகிறான். கடும் குளிர் வீசுகிறது. காரியத்தை சித்தமாக முடித்தால் அச்சப்படத் தேவையில்லை என்று வானவரே சொல்லிப் போனதாய்ச் சொல்லி கவிதை நிறைவுறுகிறது.

இதிலே சிறுவர்கள் பற்றி கரிசனை கொள்ளாத மத ஆலயங்கள் மீது ப்ளேக் கடும் சினம் கொண்டிருப்பதை நாம் புரிந்து கொள்ளலாம். இன்றைக்கும் பொருந்தும் வண்ணமாய் இருக்கும் இந்தக்கவிதையானது, அவரது சமூகத்தின் மீதான கரிசனையை அகலமாய் நம் கண் முன்னே விரித்து நிறுத்துகிறது. விடுலைக்கான அவரது வேண்டுதல் இங்கே புலனாகிறது. கருமையான சவப்பெட்டிகளாய் பளிச்சிடும் சின்னஞ் சிறார்களை அவர் காண்கிறார். பெரியார்களும், மற்றும் மத ஆலயங்களும் அதன் பிரதிநிதிகளும் இச்சிறுவர்களின் மீதில் செலுத்துகின்ற வன்மம் வாசகனை வதைக்கச் செய்கிறது. பதினாறு வயதினளான என் மகள் ஸகீனத்துக்கு இந்தக் கவிதையை அவளது உயர்தர கற்கைநெறிக்காகக் கற்பிக்கிறேன். கண்கள் கண்ணீரில் மிதக்கின்றன. சமீபத்தில் காஷ்மீரில் ஆடு மேய்க்கச் சென்ற அழகான ஒன்பது வயதுப் பெண்குழந்தையை கோயிலுக்குள் கொண்டு சென்று பலநாட்கள் வைத்து, வன்மம் புரிந்து கொன்று தீர்த்த மிருகத்தனமும், "எல்லா இடங்களிலும் அவளைத் தேடினோம்; கோயில் என்பதால் அங்கே மட்டும் அவளைத் தேடிப் போகவில்லை என்று சொன்ன அச்சிறுமியின் பெற்றோரது முகங்களும் காட்சிப்படமாய் கண் முன் விரிவதைத் தவிர்க்க முடியவில்லை.

### 3. பிணி கொண்ட மலரின் துயரப் பாடலில்...

வில்லியம் ப்ளேக்கின் **"இலண்டன்"** கவிதையில் வருகின்ற இன்னொரு வரி இப்படி அமையும்.

"நடுநிசி தெருக்களிலெலாம்
இளந்தாசிகளின் கோப சாபங்கள் கேட்டன எனக்கு.
சம்சாரச் சவப்பெட்டிகள் எல்லாம் தொற்றும் பிணிகளுடன்
பிறப்புக் கண்ட குழந்தைகளின் அலறல்கள் ஒலித்தன."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பாலியல் பலாத்காரம், விபசாரம் என்பவற்றின் விளைவாகப் பிள்ளைகளைப் பெற்றுக் கொள்ளும் ஒரு இளம் பெண்ணை அவர் ஒரு பிணி கொண்ட ரோஜா வுக்கு உவமித்துப் பாடுகிறார் அவரது இன்னொரு கவிதையிலே. ஆண் அனுபவித்துக் கைவிட, தந்தையற்றுப் பிறப்புக் காணுகின்றன குழந்தைகள். அழிவின் சாட்சியாக ஆண் உருமாறுகிறான். அவனது காதல் இருளின் திரள்வாக மட்டுமே இருக்கிறது. அவன் தன் போலிப்பாசத்தில் ஒளி கிஞ்சித்துமில்லை. புயலின் வெறியாய் ரகசியமாய்க் காமத்தில் உழன்று, இரவு நோக்கி ஏவுகிறான் அவன் பெண் மீதில். பிணி கொண்ட ரோஜா மீதில் ஊருகின்ற புழுவாய் தான் குடியிருந்த பூவையே அழிவுக்கு ஆளாக்குகிறான் அந்த ஆண். அழகியதோர் குறியீடாக ரோஜா அவரது இந்தக் கவிதையில் பேசுபொருளாகிறது.

பிணி கொண்ட ரோஜா

William Blake
வில்லியம் ப்ளேக்

ஓ! ரோஜாவே,
நீ பிணியில் உழல்கிறாய்.
கண்ணுக்குப் புலப்படா புழுவொன்று,
இரவில் கர்ச்சிக்கும் புயலெனப்
பறந்து வந்து,
உன் படுக்கையைக் துயர மகிழ்வாய்க்
கண்டு கொள்கிறது.
இருளடர் அதன் ரகசியக் காதல்
உன் ஜீவிதத்தைக் குடித்தழிக்கிறது.

## 4. கைக்குழந்தையின் துயரங்களோடு...

வில்லியம் ப்ளேக்கின் "இலண்டன்" கவிதையில் வருகின்ற இன்னொரு வரி இது.

"ஒவ்வோர் மானிடனும் அழுது உழன்றான்.
போலவே,
அச்சத்தின் தொனியென
கைக்குழந்தைகளின் அழுகைகள்..."


பிறந்ததும் குழந்தை அழுவதும், அழுகையை பிரதிபலிப்பதான செய்கைகளில் ஈடுபடுவதும் இயல்பே. ஆனால் ப்ளேக் வித்தியாசமான ஒரு கோணத்திலே இந்த அழுகையைக் காணுகிறார். ஒரு குழந்தை பிறந்ததுமே பேசுகிறது வில்லியம் ப்ளேக்கின் இந்தக் கவிதையிலே. வெளியே அக்குழந்தைக்கு வையகம் அபாயங்களை அளிக்கவே காத்திருக்கிறது என அவர் அஞ்சுகிறார். பெற்றோர்கள் இந்த அபாயம் சூழ்ந்த உலகைத் தம் பிள்ளைகளுக்குப் பரிசளிக்கிறோமே என்ற குற்றவுணர்ச்சியில் மூழ்கிக் கிடக்கிறார்கள்.

Infant Sorrow
கைக்குழந்தையின் துயரம்

William Blake
வில்லியம் ப்ளேக்

என் அம்மா முனகினாள்,
என் அப்பாவும் அழுதார்;
நான் ஊர்ந்து வந்து விழுந்த
இவ்வையகம் சூழ்ந்திருக்கும்
அபாயங்கள் கண்டு.
நாதியற்றுப் போயினோம்,
வெறுமையில் எதுவுமற்றோம்
சப்தித்தோம் யாம்.
மேகங்களுள் மறைந்திருந்த
பிசாசினைப் போலும்.
என் தந்தையின் கரங்களுள்
நான் போராடினேன்,
என்னைச்சுற்றிப் போர்த்தியிருந்த
துணிமணிகளுள் உழன்றே
களைத்துச் சலித்தேன் யான்.
எவரையும் காணச் சகியா மனதோடு
அம்மாவின் மார்பகப் பக்கம் திரும்பி
எனைப் புதைப்பேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்



# பக்தி இலக்கியங்கள் சமயத்தை மட்டுமன்றி மொழியையும் வளர்த்தன

ச.முருகானந்தன்

சைவசமயத்தை வளர்த்த திருமுறைப் பாடல்கள் தமிழ் மொழியையும் வளர்த்தது மாத்திர மன்றி அழிவிலிருந்தும் பிறமொழிகளின் அக்கிரமிப்பி லிருந்தும் மீட்டெடுத்தவை என்பதால் தேவரா திருவாசகங்களை என்றும் பக்திப் பாடல்களாக மட்டும் நோக்க முடியாது. தமிழ் இலக்கியப் பரப்பின் ஆரம்ப கால ஐம்பெரும் காப்பியங்களைப் போலவே திருக்குறளும் பின்னர் வந்த தேவார திருவாசகம் உள்ளிட்ட பக்தி பாடல்களும் தமிழ் இலக்கியங் களாகவே கொள்ளப்படுகின்றன. இவர்களது பாடல்கள் வெறும் சமயப் பரப்புரை என்ற எல்லையைத் தாண்டி, தமிழ் மொழியானது இலகு நடையில் பாமர தமிழ் மக்களை சென்றடையவும் வழி வகுத்தன எனலாம். கூட்டுப்பிரார்த்தனைகள் இவ்வாறான ஓர் ஆரோக்கிய நிலைக்கு இட்டுச் சென்றன. ஓலைச்சுவடி களில் பதிக்கப்பட்ட இப்பாடல்கள் பின்நாளில் தமிழ் மொழியை அழிவிலிருந்து மீட்கவும் பெரிதும் உதவின. இன்று நூற்றாண்டுகள் பல கடந்தும் ஓதப்படுகின்ற இப்பக்தி இலக்கியமானது தமிழ் மொழியின் இருப்பை உறுதிப்படுத்தி நிற்கின்றது.

தமிழ்மொழி இன்று பல்வேறு நெருக்கடிக்குள் சிக்கி சரிவுப் பாதையில் பயணிக்கும் இன்றைய கால கட்டத்தில் தேவார திருவாசகம் உள்ளிட்ட பக்திப்பாடல் களை நம்மில் பலரும் ஒதுக்குவது எம்மொழியை மேலும் சிதைவடைய வைக்கும். நாயன்மார்களும், ஆழ்வார்களும் பாடிய பதிகங்கள் யாவும் வெறும் பக்தி இலக்கியம் மாத்திரமல்லாது, சுய மொழி ஈடுபாட்டின் பாற்பட்டதாகவும் நோக்கப்படுகின்றது. இவர்களது பக்தி இலக்கியமானது சூழல்சார் அயல்மொழிகளின் தாக்கங்களை மீறி, தமிழ்மொழி அழிவுப் பாதையி லிருந்து மீண்டெழுந்து எழுச்சி பெற வெண்டும் என்பதான நோக்கும் கொண்டிருந்தது. பக்தியையும் மொழியையும் ஒருங்கே இவை வளர்த்தன.

இன்று சிங்களமும், ஆங்கிலமும் எமது மொழிக்கு இலங்கையில் அச்சுறுத்தலாக இருப்பதைப் போன்றே அன்றும் சமஸ்கிருதம், பாளி, பிராகிருதம் முதலான மொழிகள் தமிழ் மொழிக்கு அச்சுறுத்தலாக இருந்தன. அவற்றை தோற்கடித்து தமிழைக் காப்பதில் இந்த இலக்கியங்கள் பெரிதும் பங்காற்றின. பக்தி இலக்கியங்கள் சமய நிலைகளில் மேற்கொண்ட செயற் பாடுகள் தமிழுக்கு ஒரு வலுவான இயங்குதளத்தை ஏற்படுத்தின.

வடமொழியான சமஸ்கிருதம் இன்று பேச்சு வழக்கிலிருந்து மறைந்துவிட்ட நிலையிலும் அம்மொழியி லுள்ள சிறப்பம்சங்கள் சில தமிழிலக்கிய உருவாக்கத்தி லும் பங்களித்தமையையும் மறுப்பதற்கில்லை. வடமொழியிலிருந்த வால்மீகி இராமாயணமே கம்ப இராமாயண உருவாக்கத்தில் பங்களித்தது. வடமொழி சார்ந்த சிந்தனைகள், சமய தத்துவ அம்சங்கள், புராண கதை மரபுகள் படைப்பாக்க உத்திகள், தமிழில் பக்தி இலக்கியங்களின் உருவாக்கத்தில் முக்கிய பங்காற்றி யதை மறுப்பதற்கில்லை. மேலும் பக்தி இலக்கியங்கள் தமக்கு முன்னதாக தமிழ் இலக்கிய பாரம்பரியத்தில் காலூன்றி முகிழ்ந்தெழுந்தமையும் கவனிக்கத்தக்கது. சங்க காலம், சங்கம் மருவிய காலம் என கடந்து வந்த பக்தி இலக்கிய கால கட்டங்களை இருவேறு கால கட்டங்களாக ஆய்வாளர்கள் நோக்குவர். தமிழோடு பக்தி இசை பாடிய சைவ நாயன்மார்களும் வைஷ்ணவ ஆழ்வார்களும் சமய நிலையில் பாடிய திருப்பதிகங்கள் தமிழுக்கு ஒரு வலுவான இயங்குதளத்தை அமைத்தன. முன்னைய இலக்கிய பாடல்களிலிருந்த பாண்டித்திய தமிழும், அவை மீதான பரவலான புரிதலற்ற தன்மையும் மாற்ற மடைந்து, உள்ளத்தை உருக்கும் பண்ணிசை யோடு கூடிய இலகு தமிழிலான பாடல்களை இவர்கள் பாடினர். இப்பதிகங்களினூடாக சராசரி சமான்ய சமூக மாந்தர் மத்தியில் தமிழ் மொழியின் செழுமை புரிதலுடன் இட்டுச் செல்லப்பட்டன. பக்தி இலக்கிய படைப்பாளிகள் பலரும் சிறந்த தமிழ்ப் புலமையுடனும், மக்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்புடனும் இருந்தமையினாலேயே இது சாத்திய மானது.

இவ்வாறாக புதிய திசையில் தமிழ் இலக்கியம் பயணிக்க பக்தி இலக்கிய தமிழுணர்வானது பெரிதும் உதவியுள்ளதாக மொழியில் ஆய்வாளர்கள் குறிப்பிடு கின்றார்கள். மேலும் இவர்களது இவ் அறுவடைகள் பொதுவான தமிழ்மொழி ஈடுபாடு என்பதற்கு அப்பால் அயல் மொழிகளின் தாக்கங்களை மீறி எழுச்சி பெற வேண்டும் என்பதான நோக்கு இருந்தது. அயல்மொழி செல்வாக்குப் பெற்றிருந்த அன்றைய சூழலில் சம்பந்தர், அப்பர் போன்ற நாயன்மார்கள் சைவத்தை மட்டுமன்றி தமிழையும் அழிவிலிருந்த மீட்டனர் எனலாம். தமிழ் மொழிக்கு வேண்டிய வாய்ப்புகளை ஏற்படுத்தி அதனை வலுப்படுத்தும் குறிக்கோளுடன் இவர்கள் செயற்பட்டார்கள். இதனால் பண்டைய தமிழிலக்கிய பாரம்பரியத்தில் பக்தி இலக்கியம் தடம் பதித்தது எனலாம். மணிவாசகரின் பாடல்களில் இறையருளுக்கு ஏங்கும் தவிப்பு நிலை அற்புதமாக வெளிப்பட்டுள்ளதால் அப்பாடல்களின் சுவையானது பரவலாகி மக்கள் மனங்களில் தமிழ்த் தேனூற்றையும் பாய வைத் துள்ளது. ஆண்டாளின் பாடல்களும் சிறந்த இலக்கியச் சுவையைக் கொண்டுள்ளதையும் குறிப்பிடலாம். மக்களை ஈர்த்த இப்பக்தி இலக்கிய மானது முன்னைய தமிழ் இலக்கிய ஆக்கங்களை விட அதிகமானளவு மக்களுடன் தொடர்பு கொண்டு மக்கள் பிரச்சினை களையும் தொட்டுச் சென்றது.

அன்றைய மன்னர்களின் மத மொழி மாற்றங் களை தமிழ் மக்கள் விரும்பாத நிலையில் அவர்களது போராட்டக் குரலாகவும் பக்தி இலக்கியங்கள் குரல் கொடுத்தமையினால் மக்களிடம் இவற்றிற்கு வரவேற்பும் பரவலாக இருந்தது. பக்தி இலக்கிய பாடல்கள் இறைபக்தியையும் தமிழறிவையும் மக்களிடம் கொண்டு சென்றன. மகாவிஷ்ணுவின் மக்கள் அவதாரங்கள் பத்தும் பக்தி இலக்கியத்தை அலங்கரித்து சமூகத்துடன் நெருக்கமான உறவு நிலையை ஏற்படுத்தின எனலாம். அத்துடன் அன்றைய சமூக மக்களின் பிரச்சினைகளை அவை உள்வாங்கி அவற்றிற்கான தீர்வுகளையும் கூட பதிவு செய்துள்ளன.

திருநாவுக்கரசரின் எழுச்சி மிக்க பாடலான நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம் என்ற அறைகூவல் இன்றைய எமது தேசிய இன விடுதலைப் போராட்ட காலத்திற்கும் பொருந்தி வருகின்றது. கல்லுடன் கட்டி கடலில் வீசினாலும் சுண்ணாம்பு அறையுள் தகிர்க்க விட்டாலும் அஞ்சாத போக்கை அண்மைய எமது போராட்ட காலத்திலும் தரிசித் துள்ளோம் அல்லவா? போராட்டம் என்று தான் இல்லை?

பக்திப்பாடல்கள் இறையன்புடன் நின்று விடாமல் புலமைப்பதிவுகள் மற்றும் காலக்கண்ணாடி கள் முதலான அடையாளங்களுடன் மட்டும் திகழ்வன அல்ல. தமது கால சமூகப்பிரச்சினைகள் சார்ந்து மக்களின் எழுச்சியின் வெளிப்பாடாகவும் இருப்பதை இன்றைய ஆய்வாளர்கள் பலரும் சுட்டி நிற்கின்றனர். இப்பாடல்கள் எழுச்சியின் குரல்களாக போராட்டங் களின் படிகளாக தமிழரின் வரலாற்று பின்னணியுடன் நோக்கத்தக்கன.

இலக்கிய வெளிப்பாட்டு நிலையிலே பாடல் வடிவ நிலையில் முக்கிய வளர்ச்சிப் போக்கை கொண்ட காலமாக நாயன்மார்கள், ஆழ்வார்கள் காலத்தை குறிப்பிடலாம். விருத்தம் என்ற வகை சார் பாவினமாகவே பக்தி இலக்கியப்பரப்பின் பிரதான வடிவமாக இருப்பதை காணலாம். இலக்கிய வகைமை வளர்ச்சி என்ற நிலையில் பாவினம் என்று நோக்கும்போது அது முழுமையான பாடல் வடிவமாக முதன்மைப்பாடல் வடிவமாக முகிழ்ந்தது. பக்தி இலக்கிய காலத்தில் தான் என மொழியியலாளர்கள் கூட்டுவர்.

தமிழின் மகத்தான இலக்கியங்களில் ஒன்றாக கருதப்படும் திருக்குறள் பக்தி இலக்கிய காலத்திற் முந்தியது, எனினும் அது பக்தி இலக்கியமாக கொள்ளப்படுவதில்லை. தமிழ்ப்பண்பாட்டு மரபில் செல்வாக்குச் செலுத்திய நூல் இதுவாகும்.

இசையால் வசமாகா இதயம் எது? என்ற கருத்து தொன்று தொட்டு ஏற்றுக் கொள்ளப்பட்ட விடயமாகும். இதை நாங்கள் இன்றைய தமிழ்ப்பட காதல்களிலும் காணலாம். இந்த இசையே பிரிந்தோரைச் சேர்ப்பதும், மறந்தோரை நினைவு மீட்பதுமாக பல காட்சிகளை பார்த்து வருகின்றோம். அன்றைய பக்தி இலக்கிய காலத்திலும் சொற்சுவை, பொருட்சுவை நிறைந்த தேவார திருவாசகங்கள் பண் இசையோடு அமைந் திருந்தன. நாயன்மார்கள் இசையாலே இறைவனை வசப்படுத்த முடியும் என்று நம்பினார்கள். இன்று நம்மில் பலர் தேவார திருவாசகங்களை இசைப்பதையே மறந்து விட்டோம். இறை நம்பிக்கையை வளர்ப்பதில் இசையின் பங்கு மகத்தானது அன்பு, காதல், நட்பு என்பன வற்றிற்கும் இது பொருந்தும்.

சமய குரவர்கள் தாம் வாழும் சூழலில் உள்ள மக்கள் மற்றும் அனைத்து அம்சங்களையும் ஆழமாக அறிந்திருந்தார்கள் புலமையாளர்களாக இருந்த இவர்களில் பலர் தமிழின் அகப்பொருள் மரபு சார்ந்த மெல்லுணர்வுகளையும் தெரிந்தவர்களாக இருந்தார் கள். தமிழின் அகப்பொருள் மரபானது இலக்கிய நிலையிலும் இலக்கண நிலையிலும் பேணப்பட்டு வந்த அக்கால கட்டத்தில் அப்பரும் சம்பந்தரும் இவை பற்றித் தெளிவாகத் தெரிந்த புலமையாளர்களாகவும் இருந்தமையால் பக்திப் பாடல்களால் தமிழ் இலக்கியத் திற்கு பங்களிப்பு செய்தார்கள். மரபு சார்ந்த மெல் லுணர்வுகளை பொருட்பொருத்தமுற இசைவிக்கும் கவித்துவ ஆற்றலும் திருஞானசம்பந்தர், திருநாவுக் கரசர் முதலானவர்களிடம் இருந்தமையால் தான் அப் பதிகங்கள் இலக்கிய அந்தஸ்தை பெற்றன எனலாம்.

ஆறாம் ஒன்பதாம் நூற்றாண்டுகளுக்கு இடைப்பட்ட காலமே பக்திப்பாடல்களின் உச்ச காலமாக இருந்தது. எனினும் அதற்கு முன்னரும் அதற்குப் பின்னரும் கூட பக்தி இலக்கியங்கள் பிரசுரமாகியுள்ளன. ஏடுகளில் பதியப்பட்டிருந்த இவற்றில் பல அழிந்து விட்ட நிலையிலும் எமக்கு சிலபாடல்கள் கிடைத்தமை பெரும் பாக்கியமே. ராஜா ராஜா சோழனின் வழி நடத்தலால் நம்பியாண்டர் நம்பி இவற்றை மீட்டுத் தந்தமை மனங் கொள்ளத்தக்கது. முன்னைய பக்தி இலக்கியங்கள் இவராலே திருமுறைகளாக வகுக்கப்பட்டன. இரண்டா வது பக்தி இலக்கிய காலத்து திருமுருகாற்று படையும் கடைசி திருமுறையாக சேர்த்துக் கொள்ளப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நூல்:
பூமாஞ்சோலை (சிறுகதைத் தொகுப்பு)
ஆசிரியர் : சிவ. ஆரூரன்
வெளியீடு: ஜீவநதி
விலை : 350/-

# தன்னை ஈந்து கனிந்த படைப்புமனம் சிவ ஆரூரனின் "பூமாஞ்சோலை" சிறுகதைத் தொகுப்பை முன் வைத்து

■ மு.அநாதரட்சகன்

உலகப்புகழ்பெற்ற "தாய்" என்ற அமரகாவியத்தைப்படைத்த மேதமை மிகுந்த ரஷ்ய எழுத்தாளர் மாக்சிம் கோர்கி ஒரு தடவை **"என்னை அழுத்திக் கொண்டிருக்கும் சாரமற்ற வாழ்க்கையின் நிர்ப்பந்தந் தான் எழுதத் தொடங்கியதற்குக் காரணம்"** என்றார். இந்த நிர்ப்பந்தமே சாகா இலக்கியங்கள் பலவற்றை உலகுக்கு ஈர்ந்துள்ளது. அவ்வகையான பல சிறைகளுக்குள் இருந்தும் வந்துள்ளன. அவை பற்றி இன்னும் விதந்து பேசப்படுகின்றது. அவ்வகையில் ஹேசிமின் எழுதிய "சிறைக்குறிப்புக்கள்", நேரு மகள் இந்திராவுக்கு எழுதிய "கடிதங்கள்", ரோசா லக்சம் பேர்க் எழுதிய "சிறைக்கடிதங்கள்" என்பன முக்கியமானவை. அது போல பலர் சிறைக்குள் இருந்து கொண்டு சிந்தனைச் செறிவு மிக்க அரசியல் நூல்களை எழுதியுள்ளனர். இவற்றை எழுதியவர்கள் ஏதோவகையில் இலட்சியவாதிகள்தான். இவ்வகையில் சிவ. ஆருரனும் தனக்கு நிர்ப்பந்திக்கப்பட்ட வாழ்க்கையில் தன் ஆளுமையின் சக்தியைப் புதுப்பித்துக் கொண்டவர். புதிய சக்தியைப்பெற்று அதில் ஆத்மார்த்தமாய் கலந்துவிட்ட முனைப்பினால் இலக்கியத்தில் ஈடுபாடு கொண்டு வாசிப்பு எழுத்து எனத் தன் ஆளுமையை அகலவிரித்து வருபவர். கல்வித் தகைமையில் ஒரு பொறியியல் விஞ்ஞானப் பட்டதாரி. சிறைச்சுவர்களுக்கும் அப்பால் தெரிகின்ற உலகை, மனிதர்களை, சமூகத்தை, அவற்றில் எழுகின்ற பிரச்சினைகளையெல்லாம் தன் மனத்தில் பதித்து அவற்றை எமக்கு நாவல்களாகவும் சிறுகதைகளாகவும் தந்து கொண்டிருப்பவர். ஏற்கனவே "யாழிசை", "யாவரும் கேளிர்" என இரு நாவல்களைத் தந்து இலக்கிய உலகில் அறிமுகமானவர்.

இதில் "யாழிசை" நாவல் சாகித்திய மண்டலப்பரிசினைப் பெற்று புகழ்சேர்த்தது. அவர் அண்மையில் "பூமாஞ்சோலை" என்ற சிறுகதைத் தொகுப்பினை புதியவரவாகத் தந்துள்ளார். ஜீவநதி வெளியிட்ட நூல் வரிசையில் 99வது நூலாக வெளிவந்துள்ள இதில் பன்னிரண்டு கதைகள் உள்ளன.

வெவ்வேறு தருணங்களில் தான் கண்ட கேட்ட அறிந்த சம்பவங்களையும் மனிதர்களையும் அவர்கள் நேர்கொண்ட பிரச்சனைகளையும் காட்சிச் சித்திரிப்புக்களாக வடித்துள்ளார். இக்கதைகளில் வருகின்ற கதாமாந்தர்களின் இயல்பினையும் சுமக்கும் வலிகளையும் தர்க்க நியாயங்களுடன் கதைகளில் படைத்துள்ளார்.

மனித மனம் எண்ணற்ற சிக்கல்களையும் சிடுக்குகளையும் ஒரு சேரக் கொண்டது. பலவித உணர்வுகளைச் சுமந்தலைக்கின்ற தன்மையுடையது. அதில் குதூகலமும், அலாதியும், பரவசமும், குழப்பமும், குரூரமும் நிரம்பியிருக்கும். இவை மனித வாழ்வின் முழுமையும் விரவிக்கிடக்கிறதென்பதே யதார்த்தம். சிவ. ஆரூரனின் கதைகளில் வரும் கதாமாந்தர்களும் இப்பண்புகளைச் சுமந்தலையும் மனிதர்களாகவே உள்ளனர்.

இனி கதைகள் சிலவற்றைப்பார்போம். தொகுப்பின் முதல் கதை **"வலியும் கேலியும்"** என்பது. வாழ்வின் நெருக்கடிகள் உந்தித்தள்ள விளிம்புக்குத் தள்ளப்பட்ட பெண் தலைமைத்துவக் குடும்பமொன்றின் கதை இது. நீண்ட கால யுத்தம் விளைவித்த அபத்தங்களை இக்குடும்பமும் எதிர் கொள்ள நேர்கிறது. வறுமையின் கொடுமை அக்குடும்பத்தை எவ்வாறு கலைத்துப்போடுகிறது என உணரவைக்கும் கதை. குடும்பத்தின் மிடிமையைப்போக்க இளம் பெண்ணொருத்தி இலங்கை இராணுவத்தில் சேர்ந்து கொள்கிறாள். அவளுக்கு இதைத்தவிர வேறு தெரிவு இருக்கவில்லை. போருக்குப் பின்னான எமது சமூகத்தின் மேலான விமர்சனமாகவும் இக்கதையினைக் கொள்ளலாம். தவிர, நீண்ட காலப் போர் எமது வாழ்வின் பல கூறுகளையும் வெகுவாகப் பாதித்துள்ளது என்பதை பூடகமாகக் கூற விளைகின்ற கதையாகவும் உள்ளது. கதையின் இறுதிப்பகுதி சற்று நெருடலாக தேவையற்ற ஒன்றாக துருத்தி நிற்கிறது. அந்த இளம் பெண் (செல்வி) இராணுவத்தில் இணைந்து கொள்வதுடன் கதை நிறைவு பெற்றுவிடுகிறது என்பது தான் எனது அபிப்பிராயம்.

**"ஒழுக்கத்தின் பரிசு"** என்ற கதையில் அதன் மையத்தைத் தீண்டும் விடயம் பாலியல். அதனை விரசமெதுவுமில்லாமல் மெல்லுணர்வாகச் சொல்கிறது இக்கதை. நண்பர்கள் இருவர் கொழும்பில் வாடகை வீடொன்றில் மேல் தள அறையில் குடியிருக்கிறார்கள். கீழ்த்தளத்தில் நடுத்தர வயதுத்தாயும் சிறுவயது மகளும் இருக் கின்றனர். சந்தர்ப்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூழலில் ஆதவன் அப்பெண்ணுடன் நெருங்கிப்பழகு கிறான். அவளிடம் சலனப்பட்டும் விடுகிறான். மற்றவன் பிரதீபன் முற்றாக விலகியே நடந்து கொள்கிறான். அப்பெண்ணுக்குத் தனது மகளை ஆசிரியரொருவரின் திருமணத்துக்கு பாதுகாப்பாக நீர் கொழும்புக்கு பஸ்சில் அனுப்பி வைக்கும் தேவை எழுகிறது. மகளை பஸ்சில் கூட்டிச் செல்ல அப்பெண் பிரதீபனையே தேர்வு செய்கிறாள். அவளுடன் நெருக்கமாகப்பழகும் ஆதவனுடன் மகளை ஏன் அனுப்பி வைக்கவில்லை என்ற புள்ளியில்தான் கதையின் தர்க்கம் விரிகிறது. நுட்பமாகக் கதை நகர்வது சிறப்பாக உள்ளது.

தொகுப்பிலுள்ள கதைகளில் வித்தியாசமான கதைசொல்லும் புனைவு உத்தியைக் கொண்டது. **"அப்பெட்டைக்குட்டி"** என்ற கதை. வாசகனை புதிய தடத்தில் அழைத்துச் செல்வது. ஒருவகையான படிமத் தன்மையுடன் குறிப்பமைதி மூலம் நகருகிறது இக்கதை. சாதாரண வாசகனை இருண்மைக்குள் தள்ளி விடும் நுட்பத்தில் கட்டமைக்கப்பட்டுள்ளது. இருவேறு விடயங்களை சமாந்தரமாக நகர்த்தி பூடகமாக செய்தியைச் சொல்ல சிவ. ஆருரன் முயன்றிருக்கிறார்.

இன்னொரு கதையான **"விடுபட்ட விற்சுருள்"** என்பது, தவறிப்போன காதலால் எழுந்த முரண்நிலை பற்றிக் கூறவருகிறது. இன்னொரு ஆடவனைக் காதலித்தவள் திருமண பந்தத்தில் சீராளன் என்பவனை கணவனாக அடைகிறாள். குற்றவுணர்வில் அவள் மனம் அலைந்து தவிக்கிறது. கணவனின் பக்கு வப்பட்ட பேராண்மையினால் அந்தக் குற்றவுணர்வில் இருந்து இறுதியில் மீள்கிறாள். கதை முழுக்க முழுக்க உரையாடல் மூலம் நகர்த்தப்பட்டிருப்பது வாசனை புதிய தடத்தில் அழைத்துச் செல்கிறது.

மனதை ஈர்த்த மற்றொருகதை **"நிழல் உருவம்"** என்ற கதை. சிறுவயதில் வாக்சல்யத்துடன் நெருங்கிப்பழகிய பின்னர் வெளிநாட்டிலிருந்து பிள்ளை களுடன் வருகிறாள். பெரியவனாகி விட்டவன் ராதிகா ஆன்ரியிடம் பெரும் எதிர்பார்ப்புடன் வீடுதேடிச் செல் கிறான். பழைய நட்பின் ஆதாரம் அவனது நெஞ்சில் கனத்தபடியிருக்கிறது. ஆவலுடன் வந்தவனுக்கு ராதிகா அன்ரியின் சந்திப்பு உவப்பளிக்கவில்லை. இதனை இருநாட்டுத் தூதுவர்களுக்கிடையிலான சம்பிரதாய சந்திப்பாக ஆசிரியர் உருவாக்கியிருப்பது சிறப்பாக அமைந்துள்ளது. மென்மையான உணர்வு வெளிப்பாட்டுடன் அவனது மன அவசம் சொல்லப் பட்டிருக்கிறது.

தொகுப்பில், **"சூரியக்கதிர்"** என்பதும் முக்கிய மான கதை. போருக்கு பின்னான சமூக மனத்தை விமர்சனத்துக்குட்படுத்துகிறது. வலி. வடக்கு மயிலிட்டியில் மீளக்குடியமர்வதற்கான கோரிக்கையை வைத்து நடைபெறவுள்ள அமைதிப் போராட்டத்தில் கலந்து கொள்வது பற்றியது. அது குறித்து பிரணவன், காருண்யன் என்கிற இரு நண்பர்களுக்கிடையிலான உரையாடலுடன் கதை ஆரம்பிக்கிறது. வலி-வடக்கி லிருந்து இடம் பெயர்ந்து வந்தவன் பிரணவன். இந்தப் போராட்டம் வீண்முயற்சி எதுவும் நடக்கப் போவ தில்லை என தனது நியாயங்களை முன்வைக் கின்றான். வசதி வாய்ப்புடன் வாழும் அவனுக்கு இடப்பெயர்வின் வலி பெரிதாகப்படவில்லை. வர்க்க சுபாவம் அப்படி அவனைப் பேச வைக்கிறது. காருண்யன் நண்பனின் போலி நியாயங்களை நிராகரித்துவிட்டு போராட்டம் நடைபெறுகிற இடத்துக்கு பஸ்சில் பயணிக் கின்றான். தமக்குள் பேசிக் கொண்டு வருபவர்களின் நாட்டங்கள் பற்றி மனம் வெதும்பி நிற்கிறான். இதற்குள் தள்ளாத வயதிலும் கிழவியொருத்தி பேத்தியுடன் வரு கிறாள். கிழவிக்கு உதவி செய்யப்போய் விசாரித்ததில் மயிலிட்டியிலிருந்து இடம் பெயர்ந்த மீனவக் குடும்ப மொன்றைச் சேர்ந்தவள் என்பதையும் அந்தப் போராட்டத்திற்கே அவளும் வருகிறாள் என்பதையும் தெரிந்து கொள்கிறான். மனம் வெதும்பிப்போனவனுக்கு கிழவியின் பேச்சிலுள்ள உறுதி ஆறுதலளிக்கின்றது. இக்கதையிலும் போருக்குப் பின்னரான சமூகத்தின் மனநிலை சித்திரிக்கப்படுகிறது.

இன்னொரு கதையான **"சிறந்த மாணவன்"** என்பது ஓய்வுபெற்ற ஆசிரியர் ஒருவர் இறுதிக் காலத்தில் அடையும் கழிவிரக்கம் பற்றியது. தனது கடமைக் காலத்தில் ஒரு கண்ணுக்கு வெண்ணெய்யும், மறு கண்ணில் சுண்ணாம்புமாக பாரபட்சம் காட்டி புற மொதுக்கி ஆசிரியத்துவத்துக்கே கேடுவிளைவித்தவர். நல்லாசிரியர் ஒருவருக்கு எதிர்மாறான பண்பினைக் கொண்டிருந்த அவர் இறுதிக் காலத்தில் நேர்கொண்ட வற்றை யதார்த்தமாகக் கதை சித்திரிக்கிறது.

தொகுப்பின் இறுதிக்கதை "செம்மை". இதில் வரும் முன்னாள் போராளிகள் நண்பனொருவனுக்காக, இன்னொருவரின் வீட்டில் மலக்குழியினைச்சுத்தம் செய்யும் வேலையில் ஈடுபடுகிறார்கள். இக்கதை போராளிகளின் குணநலன்களை ஒரு மிகையான புனைவுத் தன்மையுடன் சித்திரிக்க முயல்கிறது. இக்கதையில் மலக்குழியும் மணக்கிறது. கூடவே தமிழரிடையே சாகாவரம் பெற்ற சாதியமும் மணக்கிறது. சமூக மதிப்பீடுகளின் சரிவினை இக்கதை சுட்டி நிற்கிறது.


மொத்தத்தில் சிவ. ஆருரன் தன் கதைகளில் அறஒழுக்கப்பண்புகள் மனிதரின் குணாதிசயங்கள், சமூக உறவுகள், பிரச்சினைகள் பற்றியெல்லாம் செறி வாகச் சொல்லியிருக்கிறார். அவரது சமூக அக்கறை படைப்புகளில் தெரிகிறது. கூடவே கதைகளில் விரவியிருக்கும் புனைவுத்தர்க்கங்கள் வாசனை சிந்திக்க வைக்கிறது. இந்தப்புனைவுத்தர்க்கம் என்பது ஆரோக்கியமான அறிவுத்தேடலின் வழித்தடங்களில் கருத்தாக்கங்களை உருவாக்க வல்லது. அதற்கான சாரமும், ஜீவனும் உள்ள கதைகள் தொகுப்பில் உள்ளன. நாம் வாழுகின்ற சமூகத்தின் பிரதிபிம்பங்கள் தான் இக்கதைகள். அத்துடன், கதைகளில் வரும் பல ஊர்கள் இடங்கள் தெருக்கள் பற்றியெல்லாம் பிச கில்லாமல் அவர் எழுதும் போது, அவை பெயர்களைச் சுட்டுவதாக மட்டும் தோன்றவில்லை. அவையெல்லாம் அவர் நடமாடித்திரிந்த நினைவுகளின் தடங்களாக எம்முன் விரிகின்றன.

இறுதியாக சிவ ஆரூரன் அண்மைக் காலமாகச் சிறுகதையின் மொழி வடிவம், உள்ளடக்கம், பன்முகத் தன்மை என்பவற்றில் ஏற்பட்டுவருகின்ற மாற்றங்களை உள்வாங்கி அதன் சாத்தியப்பாட்டினைத் தன் கதை களில் இயலுமாக்க வேண்டும். அது அவரை இன்னொரு தளத்துக்கு இட்டுச்செல்லும். அவரிடம் அதற்கான திறன்கள் உள்ளன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ க. சட்டநாதன்

# உயிரில் கலந்த வாசம்



11

இந்துவில் நான் ஐந்தாம் வகுப்புப் படித்தபோது என்னுடன் இருந்த மாணவர்கள் எல்லாரும் அன்புடன் இனிமையாகப் பழகினார்கள். நான் வேலணையைச் சேர்ந்தவனென அறிந்தபோது, சிலர் கீழ்க்கண் கொண்டு பார்த்தபடி ஒதுங்கிக் கொண்டார்கள். "இது ஏன்... ஏன்?" நான் மிகவும் குழம்பினேன்.

உயரமாக தட்டையான மூக்குடன், இருட்டு நிறத்தில் இருந்த ஒருவன் - தயாளன் என்பது அவனது பெயர் - மிகுந்த பகைமையுடன் என்னைப் பார்த்து, "படலை கட்டி" என்றான். எனக்கு எதுவுமே புரியவில்லை. தருமராசா தான், "அது வேறயொண்டுமில்லையடா... படலை கட்டிற வேலணையான்..." என்று கூறியதுடன் - "வேலணையாக்கள் விருந்தோம்பிற பழக்கமில்லாதவர் கள்... அயலவர்கள் பார்த்திருக்க வீட்டுப் படலையைக் கட்டிப் போட்டுத்தான் சாப்பிடுவார்களாம்..." என்று விளக்கம் வேறு தந்தான். அப்படி எதுவும் ஊரில் நடந்தது பற்றி நான் அறிந்திருக்கவில்லை. அதனால் நான் அது பற்றி அதிகம் அலட்டிக் கொள்ளவில்லை.

என் மீது அதிக அக்கறை எடுத்துக் கொண்டவர் களாக தர்மராசா, மாசிலாமணி, குணரத்தினம் சிவராசா, பரமேஸ்வரன் ஆகியோரைக் குறிப்பிட்டுச் சொல்லலாம். ஆனாலும் இவர்களில் சிவராசாவும் பரமேஸ்வரனும் தயாளனின் சொண்டுரைஞ்சல்களால் எடுபட்டு என்னைக் கேலியும் கிண்டலும் செய்யத் தொடங்கினார்கள். இது எனக்கு மிகுந்த மனவேதனையைத் தந்தது. இவர்களில் அநேகமானவர்கள் கந்தர்மடத்தைச் சேர்ந்தவர்கள் என்பதுதான் எனக்கு மிகுந்த வியாகூலத்தைத் தருவதா யிருந்தது. ஐந்தில் படித்த மாணவர்களில் நல்ல நண்பர் களாக இறுதி வரை இருந்தவர்கள், மாசிலாமணியும் தர்ம ராசாவும் தான். அதுவே எனக்குப் போதும் போது மென்றிருந்தது.

மாணவர்கள் பலரகத்தினராக இருந்தது போல எனக்குக் கற்பித்த ஆசிரியர்களும் பலவிதமானோ பாவம் உடையவர்களாக இருந்தார்கள். ஐந்தாம் வகுப்பில் பெரும் பாலான ஆசிரியர்கள் நான் விரும்பினமாதிரி இருந் தார்கள். அற்புதரத்தினம், வைத்தியலிங்கம், முத்துலிங்கம், பி.எஸ்., தம்பிமுத்து என்று எல்லாருமே மாணவர்களது நலனில் அக்கறையுடையவர்களாகவும் அருமையாக கற்பிப்பவர்களாகவும் இருந்தார்கள். ஆங்கில ஆசிரியர் சிவ சிதம்பரம் மட்டும் என்னில் மிகுந்த பகைமையுடன் காட்ட மாக இருந்தார். ஆள் வலு கொதியன். எதற்கெடுத்தாலும் பிரம்பைப் பயன்படுத்துவார். "மச்சான் அந்த ஆளுக்கு மூலச்சூடு, சரியான முசுடு... அதையெல்லாம் கண்டு கொள்ளாதை... ஆங்கில பாடத்திலை வலு கெட்டிக்காரப் பெடியளையே அவரது பிரம்பு பதம் பார்க்கத் தவறுவ தில்லை..." என்பது தருமுவின் அபிப்பிராயம்.

பொதுவாக அவர் ஆங்கில பாடத்தைக் கற்பிப்பதிலும் பார்க்கப் பாட நூலை மாணவர்களைக் கொண்டு வாசிக்க வைப்பதிலேயே கவனம் செலுத்தினார். வாசிக்கும் போது சிறு தவறு விட்டாலும் பிரப்பப் பழத்துடன் தான்முடிவடையும். அத்துடன் மாணவர்களை முழங்காலில் முட்டி போடவும் வைத்து விடுவார்.

வகுப்பாசிரியர் முத்துலிங்கம் அருமையான மனிதர். மாணவர்களை அநுசரித்துப் போவதில் அசத்த லான பேர்வழி. தமிழ்ப் பாட நேரத்தில் பாடப்பரப்புக்கு வெளியே சென்று கற்பிப்பார். அவர் கற்பித்த தேசிய விநாயகம்பிள்ளையின் பாடல்களும் பாரதி பாடல்களும் சோமசுந்தரப்புலவரின் பாடல்களும் அவர் கற்பிக்கும் போதே மாணவர்களுக்கு மனப்பாடமாகி விடும். அவர் கற்பிப்பதில் மாய வித்தைக் காரர்.

எங்களுக்குக் குடியியல் கற்பித்த ஆசிரியர் அழகரத்தினம். பாடத்துடன் எங்களுக்கு ஆரம்ப அரசியல் உணர்வை ஊட்டியவர் அவர்தான்.

வகுப்பில் புவியியல் பாடத்தில் மிகுந்த ஈடுபாடு காட்டினேன். அதற்கு புவியியல் கற்பித்த வைத்திலிங்கம் ஆசிரியரும் ஓரளவு காரணம். வகுப்பில் அப்பாடத்தில் முதல் மாணவன் என்ற பெருமை எனக்கு இருந்தது.

நான் ஐந்தாம் வகுப்பில் இருந்தபோது தான் அந்த மறக்க முடியாத சம்பவம் நடந்தது. அப்போதைய அதிபர் குமாரசாமி அவர்கள் இரண்டாம் பாடவேளை முடிந்ததும் - தனது வழமையான - பாடசாலை ஒழுங்கு பற்றி அறிந்து கொள்ள, சுற்றி வருவதைப் பாடசாலை வளாகத்தில் மேற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்வார். அன்றும் காலை பத்துமணிக்கு உலா வந்தார். அந்த உலா சற்று முன்பின்னாக நடந்திருந்தால் அந்த விபரீதம் நடந்திருக்காது. ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் காரண காரியத் தொடர்பு இருக்கும் போலும். ஆறாம் வகுப்பு "ஏ" பிரிவுக்கு ஆசிரியர் யாரும் வராத நிலை, மாணவமணிகள், தாவும் குரங்குகளாக மாறி இருந்தார்கள். ஒருவர் தலையை ஒருவர் பற்றிப் பிடித்து மல்லுக்கட்டினார்கள். தலைகள் கிடைக்காத மாணவர்கள் தங்களது தலையையே பிய்த்துக் கொண்டு கூத்தடித்தார்கள், அவர்களது கூட்டுக்குரலும், கோரஸ் பாடல்களும் கல்லூரியையே துவம்ஷம் செய்தன. பூனையின் கத்தலும், புலியின் உறுமலும் சிங்கத்தின் கர்ச்சனையும் கூட அங்கு கேட்டது. அதிபர் பார்வை பட்டதும் மாணவர்கள் "கப்சிப்" ஆனார்கள். அதிபர் மாணவர்களைப் பார்த்து "ஆர் பாடம்..." என்று கேட்டார். தேவாங்குகளின் பதில் இப்படி இருந்தது: "மிஸ்டர் கார்த்திகேசன்!" அவர்கள் கூறவும் - கார்த்தி கேசன் மாஸ்டர் வகுப்பை நோக்கி அரக்கப் பரக்க வந்து கொண்டிருந்ததும் சரியாக இருந்தது. "மிஸ்டர் கார்த்தி கேசன்..." என்று ஆங்கிலத்தில் தொடங்கியஅதிபர் சொல் மாரி பொழிந்தார். அவருக்குச் சமதையாக ஆசிரியரும் ஆங்கிலத்தில், தான் பிழையேதும் விடவில்லை என்று தன்பக்க நியாத்தை எடுத்துரைத்தார். திட்டுவதற்கு ஏற்ற மொழிதான் ஆங்கிலம் என நானும் நண்பர்களும் நினைத்துக் கொண்டோம். அரைகுறையாக அதை நாங்கள் புரிந்து கொண்டாலும் அந்த உரையாடலின் சரளம் எங்களை மெய் சிலிரிக்க வைத்தது. "வளர்ந்து, இப்படி... இப்படி ஆங்கிலம் பேச வேணும்..." என நான் அப்பொழுது நினைத்துக் கொண்டேன்.

மனமடங்காத கொதிப்புடன் சென்ற அதிபர் மறுநாள் பாடசாலைக்கு வரவில்லை. மூன்றாம் பாடவேளை அந்தத் துயரச் செய்திதான் பாடசாலைக்கு வந்தது. அது, அதிபர் காலமாகி விட்டார் என்பது தான்! அதை என்னால் ஜீரணிக்க முடியவில்லை. எல்லாமே கார்த்திகேசன் ஆசிரியரால் தான் ஆனது என்ற மனப்பதிவு பாடசாலையில் ஆணித்தரமாக எல்லார் மனதிலும் பதிந்து விட்டது. உயர் இரத்த அழுத்தம் உள்ள அதிபரின் மரணத்துக்கு நேற்றைய சம்பவம் ஒரு சாட்டாகப் போய் விட்டது. ஏனோ எனக்குக் கார்த்திகேசனைப் பார்க்க வேண்டும் போலிருந்தது. ஆசிரியர் அறையை நாடிய நான் - கார்த்திகேசனுடைய கண்கள் கலங்கி இருப்பதைக் கண்டேன்.

ஆசிரியர் பி.எஸ். அவர்கள், ஆறுதல் வார்த்தை கள் கூறியவராய் அவருக்குப் பக்கத்தில் இருந்தார். குற்ற உணர்வுக்கு ஆட்பட்டவராய் ஆசிரியர் கவலைப்படுகிறார் என்பதை நான் துல்லியமாக உணர்ந்து கொண்டேன். அன்று நாலாம் பாடவேளையுடன் பாடசாலை மூடப்பட்டது. மரணச்சடங்கும் நாளை நடைபெறும் என்று அறிவித்தலும் கூடவே வந்தது. நான் எப்படியாவது நண்பர்களுடன் அதிபரின் மரணச் சடங்குக்குப் போக வேண்டும் எனத் தீர்மானித்துக் கொண்டேன்.

*12*

ஐந்தாம் வகுப்பில் மட்டுமல்ல, தொடர்ந்து வந்த வகுப்புகளான ஆறு, ஏழு, எட்டாம் வகுப்புகளுக்கும் மிகுந்த ஆளுமை விருத்தியை எனக்கும் நண்பர்களுக்கும் ஏற்படுத்தவே செய்தன.

ஆறாம் வகுப்பில் எங்களை மிகவும் கவந்தவர், ஆங்கில ஆசிரியரான கே.வி.எம். என அழைக்கப்பட்ட மயில்வாகனம் சேர்தான். அவர் ஆங்கிலபாணி உடையில் - லோங்ஸ், முழு நீளக்கையுடன் சேர்ட், கோர்ட், ரை என ரிப்ரொப்பாக இருப்பார். கே.வி.எம். கண்டிப்பானவர். மாணவர்களது நடத்தைக்கும் ஒழுங்குக்கும் முதன்மை கொடுப்பவர். அவர் ஆங்கிலத்தை உச்சரிக்கும் அழகையும் உதடுகள் உதிர்க்கும் ஆங்கிலப் பதங்களையும் நாம் அசந்து போய் - அவரைப் பார்த்தபடி கேட்டிருப்போம். ஐந்தாம் வகுப்பில் இருந்தபோது வேப்பங்காயாய் எமக்குக் கசந்த ஆங்கிலம் இவரது கற்பித்தலில் வெல்லமாக உருகி வழிந்தது. நற்பண்புகள் பலதை அவர் வழி நாங்கள் பெற்றுக் கொண்டோம். அவர் ஃப்பைத் திங்ஸ் என மாணவர்கள் மத்தியில் அழுத்திக் கூறுவார். கற்பதற்கான ஐந்தப் பொருட்கள் : அடிமட்டம், ரப்பர், பென்சில், றோயல் கிரவுண் கொப்பி புக், நாலுறுள் கொப்பி ஆகியனவாகும். இப்பொருட்கள் எந்த மாணவரிடத்திலும் இல்லை என்றால் ஆசிரியரிடம் இருந்து தண்டனை கிடைக்கும். அவரது தண்டனை வினோதமானது. கரங்களைத் திருப்பும் படி கூறி, கை மொழிகளில் அடிமட்டத்தால் அடிப்பார். அது சுரீர் என நமது உயிர்க்குலையை உசுப்பும். அவர் கற்பித்த ஆங்கிலம், எழுத்துப் பயிற்சி, உச்சரிப்பு என்று எல்லாமே எங்களுக்கு ஆரம்ப நிலையில் ஆணித்தரமான அஸ்திவார மாயின.

இந்த நல்லாசிரியரின் நினைவுகளைக் களங்கப் படுத்தும் வகையில், எதிரிடையான குணவியல்புகளைக் கொண்ட, பயிற்றப்பட்ட தமிழாசிரியரான செல்வநாதன் என்பவர் எங்களுக்குத் தமிழ் கற்பித்தார். அவர் ஆசிரிய ரென்ற வகையில் உளவியல் அருட்டுணர்வு ஏதுமில்லாத வர். அவர் கற்பிப்பதில் ஈடுபாடு காட்டுவதிலும் பார்க்க மாணவர்கள் மத்தியில் சிண்டு முடிவதிலும் பட்டப் பெயர் வைத்து அழைப்பதிலுமே தன்னளவில் பிசங்கிக் கொண டார். மாணவர்கள் மத்தியில் முன்னர் புழக்கத்திலிருந்து மறந்து போன - படலை கட்டி வேலணையான் என்ற பதத்திற்குப் புத்துயிர் அளித்ததோடு; என்னுடன் கதைக்கும் பேதெல்லாம் ஒரு நளினச் சிரிப்புடன் அந்தப் பெயரை உச்சரிக்கவும் செய்தார். என்னை விட இன்னும் சில மாணவர்களுக்கு பட்டப்பெயர்களைச் சூட்டி அழைத்தார். நாம் அவருக்கு மறுத்தனாக செங்குரங்கு, உறண்டை, கண்ணாடிப் புடையன் எனப் பட்டப் பெயர்களைச் சூட்டி மகிழ்ந்தோம்.

ஆசிரியனாக இருப்பதற்கு முன்மாதிரியோ, தகுதியோ இல்லாத இழிந்த பிறவியான அவரை, "ர்" போட்டு அதாவது "அவர், இவர்" என அழைப்பதையே மனதளவில் நான் வெறுத்தேன். அவரைக் குப்பையன் குப்பையன் என உச்சரிப்பதில் எனக்கு மன நிறைவு இருந்தது. அதனைக் குற்றமாக எந்தச் சந்தர்ப்பத்திலும் நான் நினைக்கவில்லை.

இந்த வகுப்பில் தான் அருமந்த ஆசிரியரான சேனாதிராசா அவர்கள் எங்களுக்கு கணிதபாடம் கற்பித்தார். அவர் பின்னர் நைஜீரியாவுக்கு வேலை பார்க்கச் சென்ற போது அங்கு உயிர் இழந்தார். அவரது பிரிவு எங்களுக்குப் பெரும் துயரினைத் தந்தது. கணிதபாடத்தை புரியும் வகையிலும் சுவை தரும் வகையிலும் கற்பித்த ஆசிரியர் அவர்.

ஏழாம் வகுப்பில் - நினைவோடு தோய்ந்து இன்றுவரை மறக்க முடியாதவராய் இருந்து வருபவர். எம்.பி.செல்வரத்தினம். எம்.பி.எஸ். தான் எனக்குப் புவியியல் பாடத்தில் இருந்த ஆர்வத்தை, சுடர் விட வைத்தவர். அவர் இடது சாரி ஈடுபாடுடையவர். அவர் ஒரு கம்யூனிஸ்ட் என்பதை அரை குறையாக மாணவர்கள் அறிந்து வைத்திருந்தார்கள். அவரது பாடநேரத்தில் மாணவர்கள், ஆசிரியருடைய மேசையில் - விபூதி பிரசாதம் கொண்டு வந்து வைப்பார்கள். முறை வைத்து ஒவ்வொரு மாணவர்களும் இதில் ஈடுபாடுகாட்டினார்கள். அந்த விபூதி பிரசாதம் பற்றியும் இறை நம்பிக்கையின் அர்த்தமற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்மை பற்றியும் எம்.பி.எஸ். பாடநேரத்தில் ஒரு பதினைந்து நிமிஷமாவது ஒரு சிறிய சொற்பொழிவே ஆற்றி விடுவார். நாம் குயுத்தியாய் அவரை இழுத்தடிப்பது அவருக்கு புரிவதில்லை.

எட்டாம் ஒன்பதாம் வகுப்புகளில் குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய விஷயம் அதிகமில்லை. நமது ஆசிரியர் களின் அபத்தமான நடத்தைகளே எங்களை எப்பொழுதும் களிப்பூட்டுபவையாக இருந்தன.

சாமி மயில்வாகனம் தான். எங்களுக்கு எட்டாம் வகுப்பில் சமயபாடம் எடுத்தார். அவர் வகுப்பறையில் நுழையும் போதே மிகுந்த கலக்கத்துடன் நடந்து கொள்வார். அன்று அவர் படிப்பித்தது திருவருட்பயன். படிப்பிக்கும் போது பல சந்தேகங்கள் வந்து அவரைக் குழப்பியது. வந்ததும் வராததுமாய் பத்து நிமிஷங்கள் மூசி மூசிக் கற்பித்தவர், பின்னர், தூங்கி விழுந்தார்; குறட்டைச் சத்தம் வேறு. வகுப்பில் இருந்த வால்கள் கிளைக்குக் கிளை தாவத் தொடங்கின. அவர் தூக்கம் போடுவதைப் பார்த்ததும் பரந்தாமன் கொம்பாஸ் பெட்டியை மேசை மேல் இருந்து தள்ளி விட்டான். அவனது எதிர் பார்ப்பெல் லாம் அவரது எதிர்வினைதான். கலீரென விழுந்த பெட்டி சாமியாரைத் திடுக்கிட வைத்தது.

"என்னடா... என்ன... என்ன சத்தம்...?"

என்ற கேள்வியுன் விழித்துக் கொண்ட சாமியார், தனது சால்வையால் முகத்தைத் துடைத்தபடியே, வகுப்பறையை விட்டு வெளியேறுவதில் கவனங் கொண்டார்.

இது சமய பாடநேரத்தில் தினம் தினம் நடைபெறும் சடங்கு.

ஒன்பதாம் வகுப்பில் சிங்கி மாஸ்டரின் சரித்திர பாடம் தான் எங்களை எப்பொழுதும் கலகலப்பாக வைத்திருந்தது. ஆசிரியர் பிருத்தானிய வரலாற்றைக் கற்பிக்கும் போது மட்டும் மாணவர்களது முழுக்கவனமும் சிதறாது இருக்கும். வரலாற்றின் அப்பகுதியைக் கற்பிப்ப தில் அவர் விண்ணர். சிலவேளைகளில் அவர் கற்பிக்கும் போது தன்னிலை இழந்தவராய் ஏதோ யோசனைகளுக்கு உட்பட்டுத் தத்தளிப்பதுண்டு. தத்தளிப்பவர், மேலும் கீழும் நடந்தபடி உளறுவர். அவர் உளறல்களிலிருந்து மாணவர்கள் திரட்டி எடுத்ததென்னவோ "சவம்... சவம்..." என்ற பதத்தை மட்டும் தான். அவர் உதிர்த்த "சவம்" என்ற சொல் என்னிடம் ஒட்டிக் கொண்டு விட்டது. அந்தப் பழக்கத்திலிருந்து விடுபட எனக்குப் பல நாட்கள் செலவாகியது.

அந்த வகுப்பில் இருந்த மாணவர்களான செந்தூரன், தயாளன், வரதன் சரியான வால்கள். மாலைநேர வகுப்புகளுக்கு மட்டம் போட்டு விட்டு, ராணித்தியேட்டருக்கு அல்லது றீகலுக்கு சினிமா பார்ப்பதற்குப் போவார்கள். அநேகமாகப் பழைய இந்திமொழிப் படங்களும் ஆங்கிலப் படங்களுமாக அவை இருக்கும். மொழி புரியாத போதும், ரசம் மிகுந்த காட்சிகளைப் பார்ப்பதற்கும், பாடல்களைக் காட்சிகளின் ஊடாகக் கேட்டு ரசிப்பதற்கும் தீராத காதல் பெடியங் களுக்கு இருந்தது. அந்த வானரங்களின் கூட்டத்தில் நானும் ஒருவன்.

இது விஷயம் எங்கள் அதிபர் ஆசையருக்குத் தெரிந்தபொழுது என்னையும் நண்பர்களையும் அழைத்துத் தண்டனை தந்தார். தண்டனை பிரப்பம்பழம் தான். செந்தூரனுக்கும் தயாளனுக்கும் செம பூசை கிடைத்தது. என்னை மட்டும் "லேசான இரண்டு தட்ட லுடன் விட்டுவிட்டார். "ஏன்ரா நீ இந்த விறுதாக்களோட சேர்ந்து கெட்ட பேர் வாங்கிற..."

ஆசையரின் உபதேசம் இந்தப்பாணியில்தான் எப்பொழுதும் இருக்கும். அவரது கணிப்புச் சரியானது தான் என்பதை நான் உணரவே செய்தேன். ஆனால் பெடியளுடனான தொடர்பை என்னால் அறுத்துக் கொள்ள முடியவில்லை. வேண்டாத உறவு என்றாலும் விட முடியாத உறவாக அது இருந்தது.

அடுத்து வந்த எஸ்.எஸ்.சி. வகுப்பில் தான் நான் ஆராதிக்கும் தமிழாசிரியரான சிவராமலிங்கம் அவர்கள் கற்பித்தார்கள். தமிழை அதன் சுவை உணர்ந்து கற்பித்த அந்த மேதையை என்னால் மறக்க முடியவில்லை.

அவருக்கும் சாமிமயில்வாகனத்தாருக்கும் இடையில் வேர்விட்டுக் கிளைத்த முரண் - எனக்குப் பலதைக் கற்றுத் தந்தது. யதார்த்தமாய்த் தன் நடவடிக்கை களை நடத்தும் சிவராமர், ஒரு சமயம் அறிஞர் அண்ணா அவர்களைப் பற்றி, தமிழ் மன்றக்கூட்டமொன்றில் சிலாகித்துப் பேசியது சாமியாருக்குப் பிடிக்கவில்லை "என்ன இவன் அந்த நாஸ்திகனைப்பற்றிப் பேசுவது" என்று கொதித்தெழுந்தார். அதற்கு சிவராமரின் பதில் அமைதி யான புன்சிரிப்பு மட்டும் தான்! அந்தச் சிரிப்பில், மருட்சி யில் சாமியார் அடங்கிப் போனது இந்துவின் சரித்திரத்தில் பதியப்பட்ட ஒரு அரிய வரலாற்று நிகழ்ச்சியாகும்.

எங்கள் வகுப்பாசிரியராக இருந்தவர் கனகநாயகம். சுரண்டல் பேர்வழி. எங்களுக்கு ஆங்கிலம் கற்பித்தார். அவர் படிப்பிப்பதை விட முன்வாங்கில்களில் இருக்கும் மாணவர்களைப் பிரம்பால் நோண்டிக் கொண்டிருப் பதையே வழமையாகக் கொண்டிருந்தார். அதில்தான் அவரது கவனமும் லயிப்பும் எப்பொழுதும் இருந்தது.

நான் கலைப்பிரிவைத் தேர்வு செய்து புவியியல் பாடத்தில் நிபுணனாக வேணும் என்ற கனவுகளுடன் ஏ.எல். வகுப்பில் சேர்ந்தேன். எஸ்.எஸ்.சி.யில் தேவையான பாடங்களில் சிறப்புச் சித்தி பெற்றிருந்ததனால் ஏ.எல். வகுப்பில் சேர்ந்து கொள்வதில் எனக்குச் சிரமம் ஏதும் ஏற்படவில்லை. ஆனாலும் ஏ.எல்.படித்துப் பாஸாகி, பல்கலைக்கழகம் புகமுடியுமா என்ற தயக்கம் எனக்கு இருந்தது. அந்தத் தயக்கங்களுடனேயே எனது காலம் கழிந்தது.

*13*

ஏ.எல்.வகுப்பில் நாலைந்து மாதம் மட்டுமே நான் இருந்தேன். திருவக்காவும் தவமக்காவும் சென்னை சென்று, அரசினர் கலைக்கல்லூரியில் பி.யூ.சி. வகுப்பில் சேர்ந்திருந்தார்கள். எனக்கும் சென்னை செல்வதற்கான விருப்பம் இருந்தது. அதை அறிந்த குஞ்சி மாமா, அம்மாவிடமும் ஐயாவிடமும் கலந்தாலோசித்து என்னையும் அங்கு அனுப்பி வைத்தார்.

சென்னை போவதற்கு இரண்டொரு நாள் முன்னதாக, வரதாவைச் சந்திப்பதற்கு அவளது வீடுவரை சென்றேன். என்னைக் கண்ட பூரிப்பில் மலர்ந்து சிரித்த அவள் எனது சென்னைப் பயணம் பற்றியும் படிப்புப் பற்றியும் கேட்டாள். நான் பதில் கூறச் சற்றுத் தடுமாறி யதைக் கண்டதும் அவளது கண்கள் பனித்தன.

"இனி... இனி என்ரை குஞ்சனைத் தவணை விடுமுறைகளில் மட்டும் தான் காண முடியுமா...?"

"ம்... அப்படித்தான் இருக்கும்..." எனது குரல் கரகரத்தது.

எனக்கு அருகாக வந்தவள், எனது கரங்களைத் தூக்கித் தனது கன்னங்களில் அழுத்தினாள். அழுத்தியவள் சொன்னாள்:

"இப்ப எல்லாம் பெட்டையளில் கண்படிறமாதிரி நடந்துகொள்ளிற. அந்த வாசத்தில சொக்கிப் போற... சென்னையில அப்படி இப்படி எண்டு ஏதன் நடந்தால் இஞ்சை என்னட்டை வராதை..."


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஏன்... ஏனிப்படிக் கதைக்கிற..."

"சரளா... அந்தப் பக்கத்து வீட்டுத்தடிச்சி உன்னைப் பற்றி வாயூறி யூறிக் கதைச்சவள்."

"அவ கேக்கிறா, "செந்தில் நல்ல பிள்ளையா?" எண்டு. அதுமட்டுமல்ல "அவருக்கு என்னிலை நல்ல விருப்பம்" எண்டும் சொல்லிறா.

"அது சரி அங்கை அவளின்ரை வீட்டை யெல்லாம் போவியா...? போனால் அவளுன்னைப் பிசக்கிப்போடுவாள்... கவனம்."

"பின்னேரங்களில றெடியோவில பாட்டுக் கேக்கப் போவன்."

"டீங்கா உடை உடுத்தி, தலைவாரி, பவுடர் எல்லாம் பூசிக் கொண்டு ஆள் வாறவர்... எண்டு அவள் எனக்குச் சொன்னவள். அதோட ஆக்கள் ஆருமில்லாத நேரத்தில உனக்கு நல்ல உபசாரமெல்லாம் கிடைக்கு மாமே..."

திடீரென நேற்று மாலை நடந்தவை எனது ஞாபகத்துக்கு வந்தது.

"நான் றேடியோக் கேட்டுக் கொண்டிருக்கேக்கை - எனக்குப் பின்னாலை வந்த சரளா என்னைக் கட்டிப் பிடித்து என்ரை கன்னங்களை வருடினாள். நான் திரும்பிப் பார்த்தன், திடீரென என்ரை கன்னங்களில கொஞ்சினாள். பின்னர் உதடுகளிலையும்."

"எல்லாமே நடந்ததெண்டு அந்த ஊத்தச்சிதான் சொன்னவள். பெட்டையளுக்கு உன்னிலை ஒரு crush. உனக்கும் அவளவையளிலும்..."

"ஸொறி வரதா...! இனிக் கவனமா இருப்பன். அந்தப் பக்கமெல்லாம் போக மாட்டன்."

"எல்லாத்தையும் தோய்ச்செடுத்துப் போட்டு, இது வேறை சால்ஜாப்பா...?"

கூறிச் சற்றுச் சினந்தவள், திடீரென என்னை இழுத்து அணைத்தபடி முத்தமிட்டாள். "இதுதானே உனக்கு வேணும்... நான் தாறனடா...? எவ்வள வெண்டாலும் தாறன்..."

கொதிப்புடன் லேசாகச் சிரிக்கவும் செய்தாள். நானும் குலுங்கிச் சிரித்தேன். அந்தச் சிரிப்பில் எங்களது இறுக்கம் குலைந்து, லேசான நெகிழ்ச்சி ஏற்பட்டது. இருவரும் நெருக்கமாக ஒருவரை ஒருவர் ஸ்பரிசித்தபடி நின்றோம்.

விடைபெற முடியாத தவிப்பு எனக்கு. ஆனால் அவளோ அவளது இயல்பு தப்பாத நடத்தைக் கோலங்களுடன் விடை பெற்றுக் கொண்டாள்.

*14*

நான் சென்னை பட்டணம் சேர்ந்தபோது ஜூலை மாதம் ஆகிவிட்டது. சென்னையில் கல்லூரி எதிலும் எனக்கு இடம் கிடைக்கவில்லை. நண்பர் ஒருவரின் சிபார்சில் திருவல்லிக்கேணியில் இருந்த அப்துல்அசீஸ் என்ற சட்டத்தரணியை நான் நாடினேன். புதுக்கல்லூரியில் இடம் எடுத்துத் தருவதாக வாக்களித்தார். அவரது முயற்சி எதுவும் பலித மடையாத நிலையில், சிவானந்தன் என்ற இலங்கை மாணவர் எனக்கு உதவ முன்வந்தார். அவரும் அவரது நண்பர் திருஞானமும் காஞ்சியில், பச்சையப்பன் கல்லூரியில் முன்னர் படித்தவர்கள். அவர்களது உதவியினால் காஞ்சியில் படிப்பதற்கு எனக்கு இடம் கிடைத்தது.

காஞ்சி எனக்கு நிரம்பவே பிடித்திருந்தது. பலாற்றங்கரையில் கல்லூரி இருந்தது. ஆற்றின் வடகரையில் கல்லூரி. தென் கரையில் சவுக்குமரங்கள் அடர்ந்த நிலப்பரப்பு. சவுக்குத் தோப்பைப் பார்ப்பதற்கு எனக்கு ஆர்வம் இருந்ததால் - சபாவுடன் - எனது இலங்கை மாணவ நண்பன் - அப்பகுதிக்கு ஆற்றைக் கடந்து சென்றேன். ஆறென்றதும் நீர் கரைபுரள்வதாக நினைத்து விடக் கூடாது; மணலாறுதான். ஆனாலும் மணலைத் தோண்டி ஆங்காங்கே ஊர் மக்கள் நீர் எடுப்பதை நாம் பார்த்தோம்.

சவுக்குத் தோப்பில் நுழைந்த நாங்கள் உள்ளாகச் சென்றோம். மரங்களிடையே நுழைந்த காற்று எழுப்பிய இன்னிசை என்னைக் கிறங்க வைத்தது. இசையால் இழு பட்ட நாம் இன்னும் உள்ளே உள்ளே என்று சென்றபோது, சபா என்னைத் தடுத்து, "சிறுத்தை ஏதாவது இருக்கும்..." என்றான். தோப்பினுள் செல்லாது திரும்பினோம். அது எனக்குப் பெருத்த ஏமாற்றமாயிருந்தது.

கல்லூரி மாணவர்களுக்கு பெரிய அளவில் விடுதி வசதி எதுவும் இல்லை. விடுதியாக மாட வீதியிலுள்ள வீடுகளே பயன்படுத்தப்பட்டன. எனது விடுதி தென்மாட வீதியில் இருந்தது. அவ்விடுதி வீடுகள் பொதுவாக ஒரே அமைப்பைக் கொண்டவையாக விளங்கின.

வாசலுடன் கூடிய முன் திண்ணை. ஒற்றைக்கதவு. கதவைத் திறந்ததும் நேர்கோட்டில் தெரியும் பின்வளவு. நடுக்கூடம். கூடத்துக்கு முன் பின்னாக அறைகள். பின்வளவு வரை செல்லும் விறாந்தையின் வலது பக்கமாக இன்னும் சில அறைகள். திறந்த மாடி. பின்வளவில் கிணறு. அடைப்பு மலசல கூடம்; சில பன்றிகள்.

விடுதி மாணவர்களது "மெஸ்" டோல் கேட்டி லிருந்தது.

விடுதியை விட, பக்கத்து வீட்டில் எனக்கு நிரம்பிய பரியம் இருந்தது.

பொன்போல ஒளிரும் மெழுகு பொம்மை மாதிரி அந்த வீட்டில் ஒரு பெண் இருந்தாள். பதினாலு பதினைந்து வயது தான் இருக்கும். அவளது கண்கள் பெரிதாக இருந்தன. கண்மையிட்டதால் இன்னும் இன்னும் பெரிதாக இருந்தன. குருத்துப்பச்சைப் பாவாடை, சிவப்புப் பட்டுச் சட்டை, தளிர் நிறத்தாவணி என அவள் அப்ஸரசா இருந்தாள். சிறிதாகத் திரட்சி கொள்ளும் மார்பகங்கள், கூர்நாசி, நீண்ட பசுமையான கழுத்து, துருதுருவென இருந்த அவள் என்னிடம் வலிய வந்து கதைத்தாள்:

"ஃப்ஸ்ட் இயரா... பி.ஏ.வா, பி.எஸ்.ஸி.யா...?"

"இல்லை பி.யூ.சி..."

"இவ்வளவு தானா பேச்சு...? இன்னும் கொஞ்சம் பேசுங்களேன்... பேசப் பயமா... ? பெட்டைப் பிள்ளை அதுதான்...!"

"......................"

"நான் பத்தாவது வாசிக்கிறன்... பெரிய காஞ்சி டி.ஜி.எஸ்.இல்"

"................."

"பேச்சே வராதா...? ஊமைக் கோட்டான் மாதிரி...."

அவள் கொஞ்சும் குரலில் பேசியவளாய்... மிகுந்த பாந்தமுடன் என்னைப் பார்த்தபடி நெருங்கி வந்தாள்.

"அவளிடம் பேசுவதா...? வேண்டாமா... பேசாமலே அவளைப் பார்த்தபடி நிற்பதே எனக்குப் போதும்போதுமென்றிருந்தது...."

திடீரென எனது உடல் நடுங்கியது. தனது உருட்டும் விழிகளால் வரதா அருகாக வந்து என்னை அதட்டுவது போலிருந்தது "வேண்டாமடா வடுவா!" என்ற அந்த அதட்டும் குரல் அவளுடையது தான்.

அந்தப் பெண்ணுடன் தொடர்ந்து பேச விருப்பாது நான் விடுதியின் உள்ளே போனேன். இனிமேல் அவளைப் பார்க்கக்கூடாது, பார்த்தாலும் பேசக்கூடாது. எனச்சங்கல்ப்பம் செய்து கொண்டேன். வரதாவை மீறிய பிரியம் அந்நியமான எந்தப் பெண்ணிடமும் ஏற்பட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடக்கூடாது என்பதில் அதிக கவனமாக இருந்தேன்.

இருந்த போதும் அவளைப் பார்ப்பதையோ இரண்டொரு வார்த்தை பேசுவதையோ நான் தவறாக நினைத்துக் கொள்ளவில்லை. அந்த உறவை பெரிய அளவில் உடைத்துக் கொள்ளவும் விரும்பவில்லை.

இது பற்றி விடுதியில் யாரிடமும் மூச்சுக்கூட விடாமல் இருந்தபோது கே.ஜி.எவ்.இல் இருந்து வந்த அந்தக் கறுப்பன் - வேலப்பன் மோப்பம் பிடித்த நாய் போல அவளைத் துரத்தினான். அவன் துர்த்தன், இசக்குப்பிசகாய் அவன் ஏதாவது அவளுக்குச் செய்து விடுவானோ என்ற பயம் எனக்கு இருந்தது.

இந்த வேலப்பன் ஓசியிலேயே காரியம் எல்லாவற்றையும் பார்த்துக் கொள்ளும் இயல்பினன். சினிமாவுக்குப் போவது, சுற்றுலா தலங்கள், மற்றும் கோயில்களுக்கு "போவதென்று எதுவாயிருந்தாலும் எனது செலவிலேயே பார்த்துக் கொள்வான். அது மட்டுமல்ல, எனது பெட்டியில் இருந்து இருநூறு ரூபாய் வரை கையாடல் செய்திருந்தான். அதனை நான் கண்டு கொள்ளாமல் விட்டு விட்டேன். மோசமானவனாக அவன் இருந்த போதும், நான் காய்ச்சல் வந்து தவித்த போது, மெஸ்ஸில் இருந்து - வார்டனிடம் சொல்லி உப்புக்கஞ்சி கொண்டு வந்து தந்தான். அதுமட்டுமல்ல, பல விஷயங்களில் அவன் எனக்கு உதவியாக இருந்தான். அந்தத் தயை அவனை அணைத்துக் கொள்ள எனக்குப் போதுமானதாக இருந்தது.

பி.யூ.சி. வகுப்பில் எனது ஆசிரியர்கள் மெச்சத்தக்கவர்களாகவே இருந்தார்கள். மா.கி.தசரதன் தமிழ் மொழியும். ஆசான் என். சஞ்சீவி சிறப்புத் தமிழும். வைத்தியநாதன் ஆங்கிலமும். இராமலிங்கம் உயிரியலும் விட்டல்ராவ் இரசாயனவியலும் கற்பித்தார்கள். எல்லாருமே என்னை மிகவும் கவர்ந்தவர்களாக இருந்தார்கள்.

"தமிழைச் சரியாகப் பேசத் தெரியாதவனுக் கெல்லாம் சிறப்புத் தமிழ் ஒரு கேடா" என எனது சக இந்திய மாணவர்கள் என்னைக் கேலியும் கிண்டலும் செய்தார்கள். உச்சரிப்பு பேதத்தை உணர முடியாத அசுடுகள் அவர்கள்!

முதலாவது தவணைப் பரீட்சையில் அனைத்து மாணவர்களையும் விட அதிக புள்ளிகளைச் சிறப்புத் தமிழுக்கு எடுத்தேன். அது எனது சக மாணவர்களை அசர வைத்தது. மனதில் துளிர்த்த மகிழ்ச்சியை அச்சந்தர்ப்பத் தில் என்னால் கட்டுப்படுத்த முடியவில்லை.

தமிழ் கற்றுத் தந்த ம.கி.த. ஒரு பகுத்தறிவாளர். சுயமரியாதைப் பண்ணையில் புடம் போடப்பட்டவர். அவரைப் பார்த்து, அவர் பேசுவதைக்கேட்டு எனக்கு அவ்விளமைப் பருவத்திலேயே திராவிட முன்னேற்றக் கழகத்தின் பால் ஓர் ஈர்ப்பும் கவர்ச்சியும் ஏற்பட்டது. அவர் முதலாம் தவணையில் கற்றுத் தந்தது ஒரே ஒரு புறப்பாட லான "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்பது தான். கணியன் பூங்குன்றனாரின் அப்பாடலை அவர் வரிக்கு வரி படித்து, அவற்றில் மறுகி மறுகி பல்வேறு அர்த்தத் தளங்களுக்கு எங்களை இட்டு சென்றார். தவணைப் பரீட்சைக்கு முன்னதாக அவர் அவக் அவக்கென வேறு சில பாடல்களையும் பகுதிகளையும் கற்பித்தார்.

அவர் தி.மு.க.வின் தலைவர் சி.என்.ஏ. பற்றி எங்களுக்கு வாயூறியூறிச் சொன்னவை நம்மனசோடு ஆகிப்போனவையாகும். ஒரு சமயம், அவரது ஓர் இரவு நாடகம் பற்றிக் கூறி, அதனைச் சி.என். ஏ. ஓர் இரவிலேயே எழுதி முடித்தார் என வியப்படைந்தார். அந்த வியப்பில் வசப்பட்ட நான் - காஞ்சி மேல்மாட வீதியில் இருந்த சி.என்.ஏ.யின் வீடு வரை இழுத்துச் செல்லப்பட்டேன். வீட்டின் உள்ளாக எட்டிப் பார்த்தேன். என்னால் அவரை அந்த அதிசய மனிதரைப் பார்க்க முடியவில்லை. காஞ்சியில் உள்ள ஏனைய வீடுகளைப் போலவே அவரது வீடும் இருந்தது. அந்த மேதை பிறந்த இல்லம் எதுவிதமான அதிசயங்களையும் அற்புதங்களையும் பொதித்து வைத்திருக்கவில்லை. நான் எதிர் பார்த்தவை எவையும் அவ்விடத்தில் நிழவில்லை. அது எனக்குப் பெருத்த ஏமாற்றமாக இருந்தது.

டபிள்யூ.ஜி. கிறேஸைப் பார்த்து நின்ற நெவில் கார்டஸின் நிலை எனக்கு!

*15.*

பி.யூ.சி. சென்னைப் பல்கலைக்கழகப் பரீட்சை. ஐம்பத்தொன்பதுபங்குனி 27 ஆம் திகதி ஆரம்பமாகி சித்திரை 4 ஆம் திகதி வரை நடைபெற்றது.

பனி வெய்யிலும் நித்திரை முழிப்பும் எனக்கு ஒற்றைத் தலைக் கபாலக்குத்தை ஏற்படுத்தியது. அதனால் பரீட்சைக்குப் படிக்க முடியவில்லை. காலையில் ஆரம்ப மாகும் மண்டைக்கனமும் ஒற்றைப் பக்க தலைவலியும் மதியம் திரும்பும் போது தான் குறைவடையும். இது தினம்தினம் என்னை அவஸ்தைக்குள்ளாக்கியது. பதினைந்து இருபது நாள் வரை தொடர்ந்து தொந்தரவு தரும். அவதியில் இருந்து மீள்வதற்குச் சந்தனம் அரைத்துப் பூசிப் பார்த்தேன். பலன் ஏதும் ஏற்படவில்லை. ஊரில் அம்மா பொன் கொன்றை மலர் மொட்டுக் களை அரைத்துப் பூசியது ஞாபகத்துக்கு வந்தது. இங்கு அதை யார் செய்து தருவார்கள் எனக் கலங்கினேன். கண்ணீர் மல்க அம்மாவின் நினைவுகளுடன் மறுகினேன்.

துஷ்டன் என ஒதுக்கி வைத்திருந்து வேலப்பன் தான் எனது உதவிக்கு மீளவும் வந்தான். அனாசின் வில்லை களை என்னிடம் தந்து "இதை போட்டுப் பாரடா...!" என்றான். அது வலிநிவாரணி என்பது எனக்குத் தெரியும். அதனை நான் போட்டேன். தலைக்கனமும் வலியும் சிறுகச் சிறுக நீங்கியதான உணர்வு. மதியம் வரை அது தாக்குப் பிடித்தது. வேலப்பனுக்கு நன்றி தெரிவித்த நான். நல்லூர்க்கந்தனையும் ஊர்ப் பட்டவேம்படியானையும் மானசீகமாக நினைத்து உருகினேன்.

தலைவலி நிற்கும் வரை அனாசினைப் பயன் படுத்தினேன். வயிற்றில் அல்சர் வந்து விடுமோ என்ற பயம் வேறுவந்து பயமுறுத்தியது. அதை ஒதுக்கி விட்டு, வலிநிவாரணியைத் தவறாது தொடர்ந்தேன். அதிக அளவு நீரும் அருந்தினேன்.

சிரமம் ஏதுமில்லாமல் பரீட்சை எழுதினேன். சிறப்பாகச் செய்ததாக நினைத்தேன். சித்தியடைந்து விடலாம் என்ற நம்பிக்கை இருந்தது.

காஞ்சி வந்து, ஒரு வருடகாலம் வேகமாக கழிந்து விட்டது எனக்கு வியப்பைத்தந்தது.

காஞ்சியை, அதன் புகழ் மிகுந்த கோவில்களை இவ்வளவு காலமாக பார்க்கவில்லையே என்ற ஆதங்கம் எனக்கு இருந்தது. சபாவுடன் அந்தத் தொன்மை மிகுந்த நகரத்தையும் ஸ்தலங்களையும் அங்கு தங்கியிருக்கும் சில நாட்களுக்குள் பார்த்துவிட விரும்பினேன்.

பல்லவர் காலத்திலும் சோழ அரசர் காலத்திலும் - அவர்களுக்கு முன் பின்னாகவும் உருவாகிய ஆலயங்கள் அவை. கோவில்களைப் பார்ப்பதற்கு ஆயத்தமான போது மெலும் இரு நண்பர்கள் - தர்மராசு, இரத்தினராசா - என்னுடன் இணைந்து கொண்டார்கள். அவர்கள் இணைந்து கொண்டதில் சபாவுக்குப் பெருத்த மன்னை. "தானாவும் இனாவும் உறண்டை நளங்களடா... நாம வெள்ளாமாக்கள் அவங்களோட நாம சமதையா, எப்படி...?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது காதைக் கடித்த சபாவை உரப்பாகவே அதட்டினேன். அந்த அதட்டல் சபாவை நடுங்க வைத்தது. "கெட்டழிஞ்ச பயல்" என என்னைப் பற்றிச் சபா நினைத்திருப்பானோ...? வாலைச் சுருட்டியபடி அவன் அவர்களோடு இணைந்து நடந்து கொண்டான். அவனைப் பார்த்த எனக்குச் சிரிப்புச் சிரிப்பாய் வந்தது.

குதிரை வண்டி வைத்துக் கொண்டு, பெரியகாஞ்சிவரை போனோம். முதலில் நாம் சென்ற ஆலயம் ஏகாம்பரேஸ்வரர் கோவில். கோவிலினுள்ளே சென்ற நாம் ஸ்தம்பித்துப் போனோம். கோவில் வெளி வீதி கருங்கல் பாவி, பெரும் நிலப்பரப்பாக இருந்தது. கிழக்குப் பார்த்த வாயில் கொண்ட அக்கோயிலின் முன்பாக நந்தி பலிபீடத்தின் பக்கமாக பேருருவாக இருந்தது. நந்தன் அக்கோயிலுக்கு வந்திருந்தால் கதறிஅழுதிருப்பான் என நான் நினைத்துக் கொண்டேன்.

கோவிலின் திருக்குளம் வடக்குச் சாய்வில் பச்சைப் பசேலென்று பாசி படர்ந்து கிடந்தது.

உள்வீதி இருள் செறிந்து அதிக கல்தூண்களை யும் அவற்றில் அழகிய சிற்ப உருவங்களையுடையனவாய் இருந்தன. சபா ஆண் பெண் முயங்கிச் சிலிர்க்கும் சொரூபங்களின் முன் தன்னிலை மறந்து நின்றான். அவனைச் சுய நினைவுக்குக் கொண்டு வந்து அழைத்துப் போவதற்கு எனக்குப் போதும் போதுமென்றாகி விட்டது.

மூலவரைத் தரிசித்த பின்னர் ஸ்தல விருட்ஷமான மாமரத்தை விடுத்து விடுத்து பார்த்தோம். "காஞ்சி மாவடி வையும் செவ்வேள் மலரடி போற்றி போற்றி..." என ஆறாம் நூற்றாண்டளவில் கச்சியப்பசிவாச்சாரியாரின் பாடல் பெற்ற விருட்ஷம் தான் இது என நண்பர்களுக்கு விளக்கம் தந்தேன்.

கோவிலை விட்டு வெளியே வந்த நாம் குமர கோட்டத்தையும் உலகளந்த பெருமாள் கோவிலையும் தரிசித்தோம். பின்னர், புறநகரில் இருந்த கைலாசநாதர் கோயிலுக்குச் சென்றோம். அந்தத் திருக்கோவில் நந்திவர்மனால் நிர்மாணிக்கப்பட்டது. அந்தத் திருத்தலம் செங்கட்டியாலும் வெண்சுதையாலும் கட்டப்பட்டது. பல சிதைவுகளுடனும் அழிவுகளுடனும் அது காணப் பட்டது. பின்னர் சங்கரமடத்தை அடைந்த நாம் காஞ்சிப் பெரியவரான சங்கராச்சாரியாரைத் தரிசனம் செய்தோம்.

பதினொரு மணிக்கு மேலாகி விட்டது. பசி அகோரமாய் அடிவயிற்றைக் கிள்ளியது. காலையில் இருந்து நாங்கள் எதுவும் சாப்பிடவில்லை. அருகிலுள்ள உணவகத்தில் இட்டிலி சாப்பிட்டோம். சாம்பார் சேர்த்துக் கொள்ளாது, சட்டினியுடன் மட்டும் நான் சாப்பிட்டேன். பூப்போல மென்மையான இட்டிலியில் பத்துவரை உட்கொண்டேன். பின்னர் டிக்கோக்சன் அதிகம் கலவாத பசும்பால் கோப்பி! ஆகாரமாகியதும் பஸ் எடுத்து, வரதராஜப் பெருமாள் கோயில் வரை வந்தோம்.

கோயிலுக்கு உள்ளாக வந்ததும் - நான் அந்த ஐயங்கார்ப் பெண்ணைக் கண்டேன். விடுதி மொட்டை மாடியில் என்னை நாடி வந்து, கதைத்து மயங்கிய பெண்தான் அவள். பத்மா, பத்மாவதி...!

அம்மாடி! என்ன முகம். வசீகர சம்பத்து கொட்டிக் கிடந்தது. காதோரம் பிரித்து விடப்பட்ட தலைமுடி தொங்கலாக.. இளநீலப்பட்டுப்புடவை, மஞ்சள் சட்டை, மார்பின் திரட்சி முந்தானை விசிறலுக்கு இடையில் உள்ள நீக்கலால் தெரிந்தது. பாதங்களும் முன் கைகளும் சந்தனக் குழம்பில் தோய்த்து எடுத்தவை போல... உடலோடு ஒட்டிய தசைத்திணிவு. அவள் தேவதை போலிருந்தாள்! முன்னைக்கு அவள் இப்பொழுது சற்று முற்றிப் பதப்பட்டிருந்தாள்.

"மறந்து போய்ச்சு போல...?"

பட்டென்று பொறி தட்டியது போலிருந்தது.

"பத்மா... பத்மாவதி தான..." என்று நான் கேட்டேன்.

"ம்... எனக்குத் திருமணமானது தெரியு மோன்னோ..."

"தெரியும்..."

"இவ... இவா தான் என்ர ஆம்படையான்"

நிமிர்ந்து பார்த்தேன்.

கட்டையாய், குண்டாய், குட்டிப்பூதம் மாதிரி அவன் இருந்தான்.

"வரதராஜப் பெருமாள் கோயில் தலைமைப் பூசகர் வரதாச்சாரியின்ரை மகன்", என்றான் சபா.

"அட அதுக்கு, கிளியை வளர்த்து இந்த பூனையிடமா...?" மெதுவாக முனகிய நான் அவளைப் பார்த்தேன். அவளது கண்கள் பனித்திருந்தன.

குரல்வளை இறுக்கம் கொள்ள, நாவுலர்ந்த நிலையில் அவ்விடத்தை விட்டு நானும் நண்பர்களும் விலகிச் சென்றோம்.

ஏனோ எனக்குப் பெருமாளைச் சேவிக்க வேணும் போலிருந்தது. கோயிலின் உள் வீதியிலும் வெளிவீதியிலும் நண்பர்களுடன், விழி பிதுங்க இழுபட்டேன். ஒரு சந்தர்ப்பத்தில் பிரியப்பட்ட அந்தப் பெண்ணின் விதியை நொந்து கொள்வதைத் தவிர வேறு எதுவும் எனக்குத் தெரியவில்லை.

*16*

கோடை விடுமுறைக்கு ஊர் வந்த நான், மறுநாளே வரதாவிடம் சென்றேன். சின்னமாமா துரையருடன் குஞ்சி மாமாவுக்கு ஏதோ மனத்தாங்கல். அதனால், "நம்ம மூண்டு குடும்பமும் - அவனை மதித்து அவன்ரை முத்தம் மிதிக்கக் கூடாது" என்று அவர் கட்டளை போட்டிருந்தார். ஆசைமாமாவும் அம்மாவும் அதை மீற முடியாதவர்களாக, அவருக்கு இசைந்து பேனானார்கள். ஏன் இந்தக் கோபதாபம் என அம்மாவை நான் விசாரித்தபோது அவ சொன்னா: "தனத்தின்ரை கலியாண விஷயம் தான்... அதாலை அவன் முறுக்குகிறான்...!"

"ஏன்... ஏன்...?" என்னால் விளங்கிக் கொள்ள முடியவில்லை.

"அவள் தனம் காதலிக்கிறது... சடங்கு செய்யப் போறது இவனுக்குக் கட்டோடை பிடிக்கேல்லை. அதோட மாப்பிள்ளைப் பொடியனும் அப்பிடி இப்பிடியாம். ஏதோ கலப்பாம்... இதுகளோட அவன்ரை தாவடிப் பெருமையும் மிடுக்கும் சேந்திட்டுது. அதுதான் இப்பிடி ஒரு குல்லி குத்தல்"

அம்மா தான் இதைச் சொன்னார்.

நான் இவை எதையும் பொருட்படுத்தாது வரதாவைப் பார்ப்பதற்குப் பட்டணம் போனேன்.

வரதா வீட்டில் இருந்தாள். தனியாக தனிமையில் அவளை முன்னர் பார்த்திருந்தாலும் - இன்றைய தனிமை அவளிடமான எனது நெருக்கத்தை அதிகப்படுத்தியது.

அவள் நீராடிய பின், கூந்தல் சிலிர்த்துப் பறக்க நின் றாள். எனது வருகையை அவளால் நம்ப முடிய வில்லை.

அவளது கூர்மையான பார்வை என்னைத் தைத்தது.

"என்ன... எப்படிச் சின்னையாவின்ரை கட்டுப்பாடுகளையெல்லாம் உடைச்செறிஞ்சபடி...!"

"பெரிசுகள் பிடுங்குப்பட்டால் நமக்கென்ன", கூறியபடி, அவளை நெருங்கி வந்து அவளது தலையை ஆதரவுடன் தடவினேன். அவள் ஈரம் உலரத் தலைக்குத் தடவி இருந்த ஓடிக் கொலோன் வாசனை என்னைக் கிறங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்தது. நான் அவள் கரங்களை எடுத்து கைகளில் பொதித்துக் கொண்டேன்.

அவள் இதழ் அவிழ, என்ன என்று கேட்பது போல முறுவலித்தாள். அவளது கன்னங்களில் அந்த அழகுக் குழி! கன்னங்களை வருடிய நான் அவளது காதுச் சோணைகளையும் தடவினேன்.

அந்த ஸ்பரிசம் என்னைச் சொர்க்கத்துக்கு இட்டுச் சென்றது.

கூச்சப்பட்டவள் எனது கரங்களைத் தட்டி விட்டாள்.

"பெட்டை நான் படிச்சு முடிச்சு வாற வரைக்கும்... எனக்காக நீ காத்திருப்பாயா...? தனமக்காவின்ரை சடங்கு நடக்கப் போகுது, இனி, அடுத்து உனக்குத் தானா... அது தான் கேட்டனான்"

"என்ரை குஞ்சனை விட்டிட்டு நான் எங்க போகேலும்... அதோட இன்னொரு விஷயம், நான் தமிழ் ஆசிரிய பயிற்சிக்கு தெரிவு செய்யப்பட்டிருக்கிறன். முதல் வருஷம் முடிஞ்சிட்டுது. இன்னொரு வருஷம் இருக்கு. அடுத்து உத்தியோகம் - அதுக்குப் பிறகு தான் எல்லாம் நடக்க வேணும்.

"உன்ரை கெட்டித்தனத்துக்கு ஒரு பட்டதாரி யாகவோ... இல்ல இன்னும் மேலான படிப்பெல்லாம் படிச்சிருக்கலாம்"

"ம்...அப்பற்றை மீள முடியாத கடனால உன்ரை வரதா எல்லாத்தையும் இழந்து நிற்கிறாள்"

"தெரியும்"

"ஊரில உள்ள உயரப்புலக் காணியையும் செல்லாச்சி வளவையும் கூட வித்துப் போட்டார்; அதுவும் அறாவிலைக்கு! இந்த வீட்டையும் விக்கிற உத்தேசம் அவருக்கு இருக்கு...!"

"ஆசை ஆசையா கட்டின இதையுமா...?"

ஓம் ஓம்... ஆறு இஞ்சிக்கல் பலமில்லை எண்டு, எட்டு இஞ்சிக்கல்லில கட்டின வீடிது...!"

"வீடில்லாமல் நீங்க அந்தரிச்சுப் போகப் போறியள்..."

"ம்..."

"ஊரில உங்க அம்மாச்சியின்ரை வீடு இருக்கு; அதில போயிருக்கலாம்"

"இல்ல சீதன வீடெண்டு சின்னையா எங்களை விடமாட்டார்"

"அப்ப என்ன உத்தேசம்"

"லிங்கம் மாமா வீட்டில இருக்கலாம். நல்ல சனங்கள். அவற்றை மாமி செல்லாச்சி அக்கா குணத்தில தங்கப் பவுண்"

"என்ன சொன்னாலும் அந்தச் சின்னமேளம் சரளா இருக்கிற வீடு தான."

"அப்படிச் சொல்லாதையடா... ! அவளிட்ட இப்ப அந்தக்குப்பைக் குணமெல்லாம் இல்ல... நல்ல மாதிரி இருக்கிறாள். இதெல்லாம் பருவக் கோளாறு தான்... நாம அவளை விட்டிடுவம்."

"சரி... மாமி எங்க...?"

"அக்காவோட நல்லூருக்கு."

"கஷ்டத்திலை உதவாத இந்தக்கடவுளை கும்பிட்டலென்ன விட்டாலென்ன...!"

"அப்படியெல்லாம் நிந்தியாதையடா...!"

"சரி... சரி... மாமா எங்க...?"

"எந்தக் கள்ளுக் கொட்டிலிலையோ தெரியாது... இப்ப இஞ்ச தள்ளாடிக் கொண்டு வந்தாலும் வரும்...!"

"படிக்கிற செலவு... வீட்டுச் செலவெண்டு எல்லாம்...?"

"ஏதோ நடக்குது... அண்ணையும் டாக்குத்தராகி உத்தியோகம் பார்க்கத் தொடங்கீற்றான். உங்க மனோன் அக்காவும் எனக்கு படிக்கயெண்டு மாதம் மாதம் ஐம்பது ரூபாய் தாறா..."

"எங்களுக்கும் அவளின்ரை உதவி தான். She is a great soul"

நான் விடை பெற எழுந்த போது நெருங்கி வந்த வரதா என்னை அணைத்தபடி, எனது தலையை வளைத்துக் கன்னத்தில் முத்தமிட்டாள்.

உதடுகளைக் காட்டினேன்.

"வடுவா....!" என்று சிரித்தாள். நானும் சிரித்தேன். பின்னர், அவளது கண்களில் முத்தமிட்டபடி விடைபெற்றுக் கொண்டேன்.

நான் போவதையே பார்த்தபடி கேற்றடி வரை அவள் வந்தாள். நான் மறையும் வரை அவளது பார்வை என்னில் நிலைத்திருந்தது.






நூல் :
அதிர்வுகள் - 02
(சமூக மானிடவியல் கட்டுரைகள்)
ஆசிரியர் :
செ.அன்புராசா
வெளியீடு:
முருங்கன் முத்தமிழ் கலாமன்றம்
விலை : 400/-
பக்கம் : 280




நூல் :
அம்மாக்கோழியும் அப்பாச் சேவலும்
(சிறுவர் கதை)
ஆசிரியர் :
செ.அன்புராசா
வெளியீடு:
முருங்கன் முத்தமிழ் கலாமன்றம்
விலை : 400/-
பக்கம் : 21




நூல் :
மனுவுக்கு மனு!
(கவிதைத்தொகுதி)
ஆசிரியர் :
செ.அன்புராசா
வெளியீடு:
முருங்கன் முத்தமிழ் கலாமன்றம்
விலை : 200/-
பக்கம் : 88




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதுளை சேனாதிராஜாவின்
# "உயிருதிர் காலத்தின் இசை"

■ உடப்பூர் வீரசொக்கன்




நூல்:
உயிருதிர் காலத்தின் இசை (சிறுகதைகள்)
ஆசிரியர் : பதுளை சேனாதிராஜா
வெளியீடு: மலைநாட்டு எழுத்தாளர் மன்றம்
விலை : 350/-

மலையகம் என்னும் போது மத்திய மலைநாட்டை வாழ்வாதாரமாக கொண்ட மக்கள் குழுமமாகும். இவர்களே மலையக மக்கள் எனவும் குறிஞ்சி நில மக்களாகவும் அடையாளப்படுத்தப்படுகிறார்கள். இம் மக்கள் பெருந்தோட்டப் பயிர்ச் செய்கைக்காக தென்னிந்தியாவிலிருந்து கொண்டு வரப்பட்ட தமிழ் மக்களாவர். இந்திய வம்சாவழியான மலையக மக்கள் 190 வருடகால வரலாற்று செல்நெறிகளுடன் முகிழ்ந்து நிற்கும் இக்கூட்டத்தினர் 1824 ஆம் ஆண்டு 16 குடும்ப வருகையுடன் இவர்களின் வரலாறு காள் கோளிடப்பட்டதாக ஆவணப் படுத்தப் பட்டுள்ளது.

இவ் இனக் குழுமத்தினர் மலையகத் தமிழர்கள் என இனம் காணப்பட்டவர்கள். இவர்கள் தென்னிந்தியக் கலாசார பெருமையின் ஊற்றாகவே கணிக்கப்படுகின்றார்கள். உழைப்பை தங்களின் மூலதனமாகக் கொண்டிருந்தாலும் கூட தமது வாழ்க்கை முறைமைகள், மத நம்பிக்கைகள், கலை, கலாசாரம், பாரம்பரியம், பண்பாட்டு விழுமியங்களுடன் வாழ்ந்தார்களே அன்றி வீசிய வெறும் கைகளுடன் வரவில்லை. என்பதற்கு சான்றாக மலையகத்தில் நிகழ்வுறும் கலாசார விழாக்கள், பண்பாட்டுக் கோலங்கள் ஏன் நூல் வெளியீடுகள் கூட யதார்த்த தன்மைகளை வெளிப் படுத்தி நிற்கின்றன.

இலங்கை தமிழ் இலக்கியம் என்று சொல்லும் போது மலையக இலக்கியம் சற்று வேறுபட்டதாகும். மலையகத்தை பிறப்பிடமாகக் கொண்டவர்களும் தொழில் நிமித்தம் வந்து இலக்கியம் படைத்த இலக்கியவாதிகளாலும் மலையக இலக்கியத்துக்கு புது வடிவம் கொடுத்து புது ரத்தம் பாச்சி தனித்துவ மலையக இலக்கியமாக பரிணமிக்க வழி சமைத்துள்ளார்கள். மலையக இலக்கியமானது 1960 பிற்கூற்றில் வேரூன்றத் தொடங்கியது. ஒரு மறுமலர்ச்சிக்கு வித்திட்டது என்று கூட கூறலாம். இக்காலச்சூழலில் மலையகத்தில் புற்றீசலாக பல்வேறு இடங்களில் இருந்து பல ஆளுமை கொண்ட எழுத்தாளர்கள் தோன்றி தத்தம் பங்களிப்பை மேற் கொண்டுள்ளதுடன் ஆக்கப்படைப்புகளை வெளிப்படுத்தி உள்ளார்கள்.

இந்த எழுத்தாக்க ஆளுமைகள் தனிச்சிறப்பாங்குகளுடன் மலையகத்தையும் அந்த மண்ணையும் மக்கள் குழுமத்தையும் அடையாளப் படுத்துவதிலும் வரலாற்று வகிபாகத்தை ஆவணப்படுத்துவதிலும் முன் நின்று உழைத்துள்ளார்கள். இந்த மலையக எழுத்தாளர்களே மக்களோடு மக்களாக மக்கள் படும் துன்பங்களையும் துயரங்களையும் அவலங்களையும் அவலட்சணங்களையும் எழுத்துருவாக்கி வெளியுலகம் காண வைத்தார்கள். இவ் எழுத்தாளர்களே மலையக இலக்கியத்துக்கு புடம் போட்ட செல்வங்களாவார்கள். இவர்கள் அம் மக்களின் யதார்த்த உணர்வை வெளிப்படுத்தி உள்ளார்கள் என்றால் மிகைப்படுத்தப் படாத கூற்றாகும்.

மலையக புனைவு இலக்கிய வளர்ச்சிக்கு கால் கோளிட்டவர்களில் முதுசமாக திகழ்பவர்தான் கே. நடேசய்யர். இவரினால் வடித்து வெளியிட்ட படைப்பே மலையக இலக்கிய வளர்ச்சிக்கு ஒரு திருப்பு முனையையும் உத்வேகத்தையும் ஏற்படுத்தினார் என்றே கூறலாம். அன்னாரின் படைப்பான இராமசாமி சேர்வையின் சரித்திரம் (1931) முதல் படைப்பாகும். இந் நிகழ்வோட்டத்துடன் ஆரம்பித்த படைப்பு துறையானது 1960 பின் புது ரத்தம் பாச்சிய மலையக எழுத்துருவாக்கம் வீறு கொண்டு எழுந்தன. இந்த எழுச்சியானது மலையக இலக்கியம் பேசும் அளவிற்கு கோடிட்டு காட்டப்பட்டன. இவ்வாறு எழுந்த எழுத்து வாண்மைகள் புனைவு இலக்கியமாக கவிதை வடிவங்களாக சிறுகதை தொகுப்புகளாக நாடக உருவாக்கங்களாக பரிணமித்தன. இதில் மலையக மக்களின் வரலாற்று சிறப்புக்கள் நாட்டார் பாடல்கள் நாட்டாரியல் வழக்குகள் வீதி நாடகங்கள் திறனாய்வு குறிப்புகள் நடைச் சித்திரங்கள் தொழில் சங்க வரலாற்று தகவல்கள் றோனியோ செய்து மடல்கள் என்பன வெளிவந்தன வந்து கொண்டிருந்தன என்பது நாம் காலத்தின் கண்ணாடியாக நோக்க வேண்டியுள்ளது.

மலையக இலக்கியத்தை புடம் போடும் நோக்குடன் காலத்துக்கு காலம் மலையக தோட்ட மக்களின் பல்துறை சார்ந்த சிருஷ்டிகள் காத்திர படைப்பாக வெளிவந்தன. இதற்கெள்ளலாம் கோடிடும் அளவுக்கு சி.வி.வேலுப்பிள்ளையின் நாடற்றவர் கதை சாரல் நாடானின் சில சிந்தனைகள், தேச பந்தன் கோ.நடேசய்யரின் மலையக தமிழர் மலையக வாய் மொழி இலக்கியம், சோ.சந்திரசேகரனின் இலங்கை இந்தியா வரலாறு, மா.கருணாநிதியின் இந்தியா வம்சாவழித் தமிழர்களின் கல்வி நிலை, நா.வேல்முருகுவின் மலையக மக்களின் சமய நம்பிக்கைகளும் சடங்கு முறைகளும், எஸ்.சந்திரபோஸின் நுவரெலியா மாவட்ட பெருந்தோட்ட


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிலாளர்களின் வருமானமும் செலவுடமையும், ம.மூக்கையாவின் இன்றைய மலையகம், மாத்தளை வடிவேலனின் மலையக பாரம் பரிய கலைகள், கலாநிதி க. அருணாச் சலத்தின் மலையக தமிழ் இலக்கி யம், அந்தனி ஜீவானிவின் மலையக மும் இலக்கியமும், மு.சிவலிங்கம் தந்த மலையக நாட்டார் பாடல்கள், தெளிவத்தை ஜோசப்பின் காலங்கள் சாவதில்லை, கோகிலம் சுப்பையாவின் தூரத்து பச்சை, தி.ஞானசேகரின் குருதிமலை நாவல்கள் என்பன மலையக இலக்கியத்துக்கு அதன் வளர்ச்சி போக்குக்கு உரம் சேர்த்தன என்பது வெள்ளிடை மலை.

இதை உள்ளீடாகக் கொண்டு மலையக மக்களின் வாழ்வு துயரங்களை வாழ்க்கையின் யதார்த்த போக்குகளை மக்களின் நெளிவு சுழிவுகளை உழைத்து உழைத்து ஓட்டாண்டி ஆகிப் போன தொழிலாளர்களின் வாழ்வுரிமை களை துயர வடுக்களை சிறுகதை வடிவங்களாக வெளியுலகத்துக்கு வெளிப்படுத்தியவர்கள் மலையக சிறுகதை எழுத் தாளர் ஜாம்ப வான்கள் என்பது மிகைப்படுத்தப் படாத கூற்றாகும்.

மற்றும் அ.செ.முரு கானந்தனின் காளிமுத்துவின் பிரஜாவுரிமை அ.ந.கந்தசாமியின் நாயிலும் கடையா காளிமுத்துவின் இலங்கை வந்த கதை வ.அ.இராச ரத்தினத்தின் அன்னை இ.நாக ராஜனின் சுமை மற்றும் மு.சிவ லிங்கம் நந்தி சதாசிவம், ஞான சேகரன், பெனடிக்பாலன், ஆதவன், மாத்தளை சோமு, மாத்தளை மலரன்பன், பார்த்திபன், இரா சடகோபன், க.ப.சிவம் மற்றும் பல ஆளுமைகள் மலையக மக்களின் துயரங்களை துன்பியல் உணர்வு களை தமது படைப்புகள் மூலம் வெளியுலகம் காண வைத்தார்கள் என்றே கூறலாம்.

தாகம் கொண்டவரான இவர் பாடசாலை காலத்தில் இலக்கியத் தாகம் கொண்டவராக காணப்பட்டுள்ளார். அக்காலங் களில் ஆக்கபூர்வமான படைப்பு களை பட்டை தீட்டியுள்ளார். சிறு கதை உலகத்தில் தன்னை சிறு கதை ஆசிரியராக இனம் காணப் பட்ட பதுளை சேனாதிராசா முன்னம் குதிரைகளும் பறக்கும் என்ற சிறுகதை தொகுப்பை தந்துள்ளார். இரண்டாவது படைப்பான உயிருதிர் காலத்தின் இசை என்ற தொகுப்பு சாகித்திய மண்டல பரிசையும் கொடகே நிறுவனத்தால் சிறந்த சிறுகதை தொகுப்பு மகுடத்தின் கீழ் இரு பரிசுகளை பெற்றுள்ளது. இவ்விரண்டு பரிசுகளால் பதுளை சேனாதிராசா சிறந்த சிறுகதை ஆசிரியராக வலம் வருகிறார்.

சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் சிறுகதை இலக்கியமானது மனித வாழ்வின் இலக்கியங்களை குறிப்பாக தான் சார்ந்த சமூக இயல்புகளை துயரங்களை துன்பியல் வாழ்வு நெருடல்களை அவலங்களை வாழ்க்கைப் போராட்டங்களின் வடிவங்களை வேதனை வேட்கைகளை சிறுகதைகளாக படம்பிடித்துக் காட்டும் இலக்கிய வடிவங்களே சிறுகதைகளாகும் என்றார்கள் சிறுகதை மன்னர்கள்.

மலைநாட்டு எழுத்தாளர் மன்றத்தின் மூலம் வெளிவந்துள்ள உயிருதிர் காலத்தின் இசை என்ற சிறுகதை தொகுப்பானது 255 பக்க வடிவமைப்புடன் முகிழ்ந்து நிற்கின்றது. அதில் முத்தான 16 சிறுகதைகள் ஆசிரியரின் தொழில் சார் வாண்மையுடனான சட்ட நுணுக்கங்கள் விளையாடி தவழ்ந்து நிற்கும் அதேவேளை சமகால நிலைமைகளை கூட சட்ட நிபுணத்துவ பார்வையுடன் தார்ப்பரிய உணர்வோடு இழையோடி நிற்பதை காணக்கூடியதாக இருக்கின்றது. இத்தொகுப்பில் மலரும் கதை களாக “உயிருதிர் காலத்தின் இசை” புதிசா ஒருதொர - பணிய லயத்து பார்வதி - பூசாரி கம்புரா - அடையாள அட்டை திரை - மாயக்கண்ணாடி சாமி - அவன் அவர்கள் அது - பூமராங் 19ஆம் நூற்றாண்டில் மனிதர்கள் இரண்டாவது தீர்ப்பு தொடுகை வர்ணங்களில் நெய்யப்படும் இழைகள் ஆதிமரமொன்றின் வேர்கள் போன்ற கதைகளின் தொகுப்பின் முதுசங்களாக மின்மினிக்கின்றன.

இன்றைய நிலையில் மலையகம் குறித்த பார்வை சமூகங் களிடையே ஓரளவு தெளிவு பெற்றுள்ளது. மலையகத்தின் தெளிவான தொரு மாற்றம் சமூக கல்வி அறிவியல் அரசியல் பொருளாதார ரீதியாக நம் கவனத்தை ஈர்க்கிறது. தனிவீட்டுரிமை அரசியல் உரிமை மலையக பல்கலைக்கழகம் எனும் கோரிக்கை கள் இதையொட்டி எழுந்தன. எனவே தான் மலையகத்தில் இன்று ஏற்பட்டு வரும் மாற்றங்கள் இலக்கியத்திலும் பிரதிபலிக்கும் இலக்கிய இயக்கம் இயக்கப்பட வேண்டிய அவசியத்தை வேண்டி நிற்கின்றது.

“குதிரைகளும் பறக்கும்” எனது முதல் சிறுகதை தொகுப்பி லிருந்து இன்னும் கொஞ்சம் அதிக மாக இரண்டாவது தொகுப்பான “உயிருதிர் காலத்தின் இசை” யில் மலையக சிறுகதை இலக்கியத்தின் வீச்சை முழு வாசகனுமானதாக மாற்றி அமைப்பதில் கவனம் செலுத்தி இருப்பதாக நம்பிக் கொள் கிறேன். மலையக எழுத்தாளன் என குறியீடு செய்து சிறப்பானது என்றாலும் உலகதமிழ் எழுத்தாளன் எனக்கூறி நிற்பது எனக்குள் ஒரு இறுமாப்பை ஏற்படுத்தக் கூடியது.

பேராசிரியர் சபா.ஜெய ராசாவின் பார்வையில் எழுதும் செயல் முறையில் ஆசிரியர் தமது புலக்காட்சியை நீட்டி விசாரித்து சிறு கதைக்குரிய நுண்ணிய பதிவுகளைத் தெரிந்திருந்து அவற்றுக்குரிய சொற் குறியீடுகளை பரவல் செய்வதுடன் கதைப் புலத்தின் சொற்களஞ்சிய தெரிவு முதன்மையும் முன்னுரிமை யும் பெறுகிறது. பதுளை சேனாதி ராசா மலையக எழுத்துலகில் நன்கு பரீச்சயமானவர். தனது தொழில் சட்டத்தரணி தனது இரண்டாவது படைப்பான உயிருதிர் காலத்தின் இசை என்ற தலைப்பே தனது சட்ட தொழில் சார்ந்த எண்ணத் தத்துவங் களை வெளிப்படுத்தி நின்றாலும் கூட தான் சந்தித்த தன்னோடு இசை வாக்கம் கொண்ட உள்ளுணர்வு களின் அசைவாகக்கத்தை சம்பவ நிகழ்சிகளை நெகிழ்வு பார்வோடு படம் பிடித்து காட்டுவதாக இத் தொகுப்பின் கதைகள் காத்திரமாக வெளிப்படுத்தி நிற்கின்றன. கற்பனை பாத்திரங்களை சிருஷ்டிப்பதை விட தன்னோடு நிகழ்ந்த நிகழ்வுகளை புனைவுகளாக மனவேட்காடுகளை மன குமறல் களை வெளிப்படுத்தும் போது தான் கதைகள் மனவருடல்களை நெகிழ் வோடு தரமுடியும் என்ற எண்ணப் பாங்கை வடித்துத் தந்துள்ளார் ஆசிரியர் இந்த மனவெழுச்சியில் துலங்கும் நம்பிக்கைகள் வெற்றி பெறும் என்பது திண்ணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு படைப்பாளியின் வெற்றியானது மனவடுக் களில் ஏற்படும் துன்பியல் உணர்வுகளை நுகரும் வாசகனுக்கு ஊட்டுவது மூலம் படைப்பியல் தார்ப் பரியம் தங்கியுள்ளது. இது ஒரு வெற்றியின் சாதனை யாளர் என்று கூறுவதில் மிகைப்படுத்தப்படாத கூற்றாகும்.

இவரின் அனேகமான கதைப்பின்புலம் மலையக மண்வாசனை தெளித்து நிற்கின்றது. திக்கற்று நிற்கும் தொழில்சார் மக்கள் - சுரண்டி பிழைக்கும் தொழில் சங்கங்கள் அடிமைகளாக ஆகர்ஷித்து நிற்கும் தலைமைகள், வெளியுலகத்தைக் காணாத லயன் வாழ்க்கை, தொழிலாளர்களின் துன்பங்கள், துயரங்கள், பாமரத்தன்மை, ஆசிரியர் தம் வாழ்ந்த மக்களின் சூழலை த் வாழ்வோடு பின்னிப் பிணைக்கப்பட்ட மலையகத் தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை தனது படைப்புக்களில் பதிவு செய்துள்ளார்.

இத்தொகுப்பிலிருந்து சிலகதைகளின் பார்வையில் நோக்கும் போது நாட்டில் பறந்த மேகங் கள் கருக்கட்டிய காலவோட்டத்தில் தோட்டத்தி லிருந்து தலைநகர் வந்து தொழில்புரியும் சாமானிய ஒரு தொழிலாளரின் நிலைப்பாட்டையும் தோட்டத்துக்குச் சென்று தனது பதிவுக்காக அலையும் தொழிலாளின் நினைவேந்தலையும் கோடிட்டு காட்டும் கதைப் பின்னலை புதுசா ஓடும் தொர என்ற கதை ஆசிரியருக்கு இருக்க வேண்டிய ஆளுமை விருத்தி பற்றி பேசும் கதையாக இருக்கிறது.

அடையாள அட்டை என்ற அதன் தார்ப்பரிய யதார்த்தத்தை வெளிப்படுத்தி நிற்கின்றது. இந்த அடை யாள அட்டையானது, தமிழனின் அடையாளத்தை இனம் காட்டும் குறியீடாகும். யுத்த காலத்தில் உயிருடன் ஒன்றிணைந்த இந்த அட்டையானது ஜீவமரணப் போராட்டத்தின் அடிமை சாசனமாக இருந்தது என்றே சொல்லலாம். அடையாள அட்டை இல்லா ஓர் தமிழன் பொலிஸ்நிலையங்களிலும் நீதிமன்றிலும் காணும் அவலம் காட்சியையும் சொல்லொணத் துயரவெளிப்பாட்டை ஆசிரியர் சட்டத்தரணி என்ற முறையில் வேதனை விளிம்பை படம் பிடித்து காட்டும் அந்த தன்மையானது ஆசிரியர் ஆளுமை விருத்திக்கு கிடைத்த வெற்றியின் வெகுமதியை சொல்லும் கதையாக காணப்படுகின்றது.

இத் தொகுப்பின் ஏழாவது கதையான 'திரை' நல்ல ஒரு காத்திரமான கதைப் புனைவோடு தரப் பட்டுள்ளது. சமகால காலவோட்டத்தின் தமிழனின் நிலை அவனின் உள்ளுணர்வுகளின் அவல வாழ்வுரிமையை விழிப்பு நிலையிலிருந்து சொல்லும் தன்மையை வெளிப்படுத்தி நிற்கின்றது. இத் தொகுதி யில் உள்ள கதைகளில் கூடுதலாக சட்ட நுணுக்கங்கள் மலையக மக்களின் சொல்லொணாத் துயரங்கள் பேசப்பட்டுள்ளன. கதை சொல்லும் வார்த்தைகளிலும் பாத்திரப் படைப்புகளின் உரையாடல் கூட தோட்ட மக்களின் துன்பியல் உணர்வுகளை இழையோடுவதை காணக்கூடியதாக இருக்கின்றது. ஆர்வத்தை தூண்டும் முறையில் கதைகள் பின்னப்பட்டுள்ளதால் ஆசிரியரின் ஆளுமைக்கு கிடைத்த வெற்றி முகமாக துலங்கி நிற்கின்றது.


அத்துடன் கதை மாந்தர்களின் பாத்திரங்கள் தத்தம் குண இயல்புக்கு ஏற்ற முறையில் இயல்பு வாசிப்புக்கு அடியெடுத்துக் கொடுக்கின்றது. மிகைப் படுத்தா செந்நெறிகளுடன் நகர்ப்படுத்தப் படுகின்றன. ஆசிரியர் மலையக மக்களின் அடையாளத்தையும் தான் சந்தித்த சக மனிதநேயங்களை பதுளை சேனாதிராசா கதைகள் எவ்வித இடருமின்றி சஞ்சலமின்றி வழிந்தோடு காணலாம். இந்த கதை மாந்தர்கள் காலத்தால் அழியாத பாத்திரங்களாக ஊசலாட வைத்துள்ளார் என்பதை சொல்லத்தான் வேண்டும். தொழில் நிமித்தம் மனதில் பாத்திரங்களை இலக்கிய ரஸபாவத்துடன் வடித்த பதுளை சேனாதிராசா உயிருதிர்காலத்தின் இசை தமிழ் இலக்கிய வளர்ச்சியினும் மலையக இலக்கிய பார்வையினும் கோடிட்டு காட்டும் தொகுப்பாக மிளிரும் என்பது யதார்த்தமாக சொல்லப்படும்.




நூல் : இரட்டைக்கரு முட்டைகள்
ஆசிரியர் : இ.சு.முரளிதரன்
வெளியீடு: ஜீவநதி
விலை : 150/-



நூல் : ஈழத்து இலக்கிய உலகில் கெக்கிராவ ஸஹானாவின் இலக்கியத்தடம்
தொகுப்பாசிரியர் : க.பரணீதரன்
வெளியீடு: ஜீவநதி




நூல் : இலக்கியமும் உளவியலும்
ஆசிரியர் : த.கலாமணி
வெளியீடு: ஜீவநதி
விலை : 300/-




நூல் : காகிதப்படகு
(மூன்று குறுநாவல்கள்)
ஆசிரியர் : மலரன்னை
வெளியீடு: ஜீவநதி
விலை : 350/-


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேசும் இதயங்கள்

**(1)** ஆசிரியர், ஜீவநதி
அன்புடையீர்

1. தொல்காப்பியத்தையும் அரிஸ்ட்டோட்டிலின் கவிதையியலையும் ஒப்புநோக்கும் கொன்ஸ்ரன்ரைனின் முயற்சி, எல்லாருக்கும் முதல் எதையோ எல்லாம் தமிழரே அறிவர் என நிறுவும் முயற்சிகளின் வரிசையில் அடங்கலாம். ஆயினும், ஒப்பீடு குறைபாடானது.

அரிஸ்ட்டோட்டில் முன்வைத்த கருத்துகளில் ஏறத்தாழ எல்லாமே தொல்காப்பியத்தில் (குறிப்பாகப் பொருளதிகாரத்தில்) உள்ளன என்ற பிரகடனத்தை அவருடைய சான்றுகள் நிறுவவில்லை. இரு படைப்பாளிகளதும் நோக்க வேறுபாடுகள் சிலதைக் கூறுமளவுக்குப் பயனுள்ள ஒப்பீடு எதையும் அவை தரவில்லை.

அத்துடன் மேற்குலக இலக்கியம் "திணை மரபு" போன்ற ஒரு கோட்பாட்டை உள்வாங்காததாலேயே மேற்குலகினர் சூழலியற் பிரச்சினைகளைக் காலந்தாழ்த்தியே கண்டுபிடித்தனர் என்பது போன்ற பிரகடனங்களையும் ஆசிரியர் முன்வைக்கிறார்.

மேற்குலகு கிரேக்க மரபுடன் நிறுவிய "வரலாற்றுத் தொடர்ச்சி" நேர்மையானதல்ல. ரோமப் பேரரசின் சரிவின் பின் ஐரோப்பாவில் நிகழ்ந்த புலப்பெயர்வையடுத்து ஜெர்மானிய இனக் குழுக்கள் மேலை நாகரிகத்தின் வேர்களை நிறுவின. ஐரோப்பிய நவீனமாதலின் முக்கிய பகுதி இஸ்லாத்தின் ஊடுருவலாலேயே இயன்றது. பல காலம் பின்பு, மத அரசியற் காரணங்களால், கிரேக்கமும் ரோமாபுரியும் மீளக் கண்டறியப்பட்டன. (Edward Said இவை பற்றி விரிவாக எழுதியுள்ளார்.) இன்றைய சூழலியற் கோளாறுகள் முதலாளியத்தின் விளைவுகள். தொல் தமிழர் போன்று பல்வேறு தொல்குடிகளும் இயற்கையுடன் அதிக முரணின்றி வாழ்ந்த காரணம் ஒரு இலக்கியக் கொள்கையுமல்ல. மெச்சத்தக்க நமது திணைக் கோட்பாடு இந்தியாவின் பிற மொழியினரை ஏன் தமிழரின் பின் நிறுத்தவில்லை. இந்தியத் துணைக்கண்டத்தில், தமிழரின் பேரரசினும் அசோகனதும் அக்பரதும் பேரரசுகள் மனிதாபிமானத்தில் உயர்ந்தமைக்கு நமது பழமரபில் விளக்கமில்லை.

மொத்தத்தில், தொல்காப்பியம் ஒரு இலக்கண நூல். அது மொழிக்கப்பாற் சென்று சமூக வாழ்வையும் விவரிக்கிறது. மொழிசார் நெறிகளையும் சமூக விழுமியங்களையும் வலியுறுத்தலன்றி அதில் அழகியல் அக்கறைகள் குறைவு. தமிழ் இலக்கிய அழகியலை ஆராயும் நூல்கள் காலத்தாற் பிற்பட்டவை. அரிஸ்ட்டோட்டிலின் அக்கறைகளில் அழகியலின் இடம் பெரிது. கிரேக்கத்தையும் தமிழகத்தையும் கைலாசபதி ஒப்பிட்ட விதத்திலிருந்து ஆசிரியர் கொஞ்சங் கற்கலாம்.

2 ஈழத்து ஓலைச்சுவடிகள் பற்றிய கட்டுரையிற் பொதுத் தகவல்கள் பயன் மிக்கன. எனினும் சில தகவல்கள் விஞ்ஞான நோக்கற்றவை. உதாரணமாக, விநாயகர் தந்தத்தை முறித்து எழுத்தாணியாக்கியதை ஒரு வரலாற்றுச் சான்றாக்கும் தேவை என்ன? நாலடியார் பற்றிய கதைக்கும் சான்று பலவீனமானது. அறைகளின் படங்களைத் தவிர்த்துக் கட்டுரைக்குப் பொருத்தமாகச் சில கருவிகளின் படங்களைத் தந்திருக்கலாம்.

பராமரிப்பின்றிச் சுவடிகள் நூற்றாண்டுகளாக நிலையா. எனவே பொதுப் பேணகமொன்று இல்லாத நிலையில், சுவடிகளின் அழிவுக்கு முக்கிய காரணம் அவற்றின் விடயங்கள் பற்றிச் சமூக அக்கறையின் நலிவென்பேன்.

3. இதயராசா ஒரு நல்ல கதைசொல்லி. ஆனால் "ஒரு மூதாட்டியின் பயணம்" கதை முடிவில் வருவன வலிந்து திணித்த வார்த்தைகளாகத் தெரிகின்றன. கதைகள் நீதி சொல்லக் கட்டாயம் இல்லையென நினைக்கிறேன்.

4. ஏதேதோ ஆன்மிகப் பங்களிப்புகள் எல்லாம் மனிதனை மிருக நிலையிலிருந்து உய்விப்பனவென்றும் சமத்துவமும் சகோதரத்துவமும் பொதுவுடைமையும் அவ்வாறல்ல எனவும் ஜீவகாருண்யன் தனது குறிப்பிற் கூறுகிறார். பசியையும் ஆன்மிகத்தையும் பற்றி விவேகானந்தர் சொன்னவை நினைவுகூர உகந்தன.

குறிப்பின் ஈற்றில், பத்மநாப ஐயரை விமர்சிப்பது பாரிய குற்றமென என அவர் கருதுமாப்போற் தெரிகிறது. பத்மநாப ஐயரின் பணிகள் மெச்சத்தக்கன. ஆனால் விமர்சிக்க மிகவுண்டு. அதைவிட, அவரிடம் இடதுசாரிகள் மீது பகை இருந்தது. புத்தக வெளியீட்டு ஆர்வத்தால் அவர் குறிப்பிட்ட ஒரு அரசியற் போக்கினரின் கடன் பொறியிற் சிக்கிய பின் அது மேலும் மோசமானது. அவர் சம்பந்தப்பட்ட தொகுப்புகளில் முக்கிய இடதுசாரிப் படைப்பாளிகள் வலிந்து புறக்கணிக்கப்பட்டனர். சிலருக்கு அது ஒரு சிறப்பாகத் தெரியலாம். எனினும் அவரை மிகக் கடிந்தோரின் அரசியல் இடதுசாரி அரசியலல்ல.

– அன்புடன் சிவசேகரம்

**(2) வணக்கம்**

அருமையான அட்டைப்படத்தைத்தாங்கி வெளிவந்த கார்த்திகை 2018 இதழ் கிடைத்தது. கிராமிய வாசம் வீசும் உயிரில் கலந்த வாசம் ஒரு சினிமாவை(நல்ல) பார்த்தது போல நிழலாடுகிறது. அதேபோன்று இவ்விதழில் இடம்பெற்ற அனைத்து ஆக்கங்களும் தரத்தில் சோடைபோகாமல் திகழ்கின்றன. மொத்தத்தில் ஆசிரியருக்கும், பதிப்பாசிரியருக்கும், ஆசிரியர் குழுவுக்கும் எனது நல்வாழ்த்துக்கள்.

- அன்புடன் ஷெல்லிதாசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இச் சஞ்சிகை அல்வாய் கலையகம் வெளியீட்டு உரிமையாளர் கலாநிதி த. கலாமணி அவர்களால் மதி கலர்ஸ் நிறுவனத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org